விலை ரூபா 20.00

www.onlineuthayan.com



பேச்சுக்கு ஈரான் தயார் 9



உயிரைப் பறித்த சாகசம் 11

இவர்களுக்கும் மரண தண்டனை 13



தற்காலிகமே 20



பக்கங்கள்: 32

★ உதயன்

சுடர் 27 கதிர் 63

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 14 சனிக்கிழமை (28/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

## எவரும் கைதாகவில்லை

பருத்தித்துறை பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற 17 வயது மாணவியின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் இதுவரை பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் பருத்தித்துறை பொலிஸார் சந்தேக நபரை தீவிரமாகத் தேடி வருகின்றனர். ''தொடர்ந்தும் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரவு வரை எவரும் கைது செய்யப்படவில்லை'' என பருத்தித்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (உ-319)

## நெடுந்தீவில் இந்திய மீனவர்கள்

நெடுந்தீவில் கரையொதுங்கிய தமிழக மீனவர்கள் நால்வர் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். நெடுந்தீவுக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இவர்களின் படகு கடலில் மூழ்கியதை அடுத்து நால்வரும் நீந்தி நெடுந்தீவுக் கரையை அடைந்துள்ளனர். நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட இவர்களை விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

## ஈழ அகதிகள் பட்டினிப்போர்

தமிழ்நாடு செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 29 ஈழத் தமிழ் அகதிகள் பட்டினிப் போராட்டத்தில் குதித்துள்ளனர். அகதி முகாம்களில் உள்ள குடும்பத்தினருடன் இணைந்து வாழ அனுமதிக்க வேண்டும் என்று கோரி கடந்த செவ்வாய்க்கிழமைமுதல் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## பஸ்ஸில் சடலம்

கொழும்பிலிருந்து காத்தான்குடி நோக்கிப் புறப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் நேற்றுக் காலை ஒருவரது சடலம் மீட்கப்பட்டது. பெரிய கல்லாற்றைச் சேர்ந்த தம்பராசா புவிராஜ் (வயது 50) என்பவரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது. பஸ்ஸின் பின்புறத்தில் ஒருவர் மயக்க நிலையில் இருக்கிறார் என்று நடத்துநரிடம் பயணிகள் தெரிவித்ததை அடுத்து அங்கு சென்று பார்த்தபோது அவர் உயிரிழந்திருந்தமை தெரியவந்தது. (உ)

## யாழ். கொழும்பு பஸ் தெஹிவளை வரை

இ.போ.சபால் நடத்தப்படும் யாழ்ப்பாணம் - கொழும்பு பஸ் சேவை அடுத்த மாதத்தில் இருந்து தெஹிவளை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரவு 8 மணிக்குப் புறப்படும் பஸ்ஸே தெஹிவளை வரை செல்லும் என்று வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

# $13^{+}$ஐ நிறைவேற்றுவதற்கு ஐ.தே.க. ஒத்துழைக்காது

### 18 ஆவது திருத்தத்தைப் போன்று அரசே தனித்து நின்று நிறைவேற்றட்டும் என்கிறது

கொழும்பு, ஜனவரி 28

இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசு தற்போது கூறிவரும் 13 பிளஸ் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. "எதிர்க் கட்சிகளின் ஆலோசனையைக் கேட்காமலேயே அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தை ஜனாதிபதி மஹிந்த தனது சுயநலத்துக்காக, பெரும்பான்மை பலத்தை வைத்து நிறைவேற்றிக் கொண்டது போன்றே இந்த 13 பிளஸையும் அரசே தனித்து நிறைவேற்றிக் கொள்ளட்டும்'' என்று கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

18 முடியுமென்றால் $13^{+}$ ஏன் முடியாது?

"நாடாளுமன்றத்தில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி 18ஆவது திருத்தத்தைத் தேர்தல் முடிந்த மூன்றே வாரங்களில் நடைமுறைப்படுத்த முடியும் என்றால் 13 பிளஸையும் நடைமுறைப்படுத்த ஏன் எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பை அரசு கேட்கிறது? அப்படிப்பட்ட அரசின் போலியான நடவடிக்கைகளுக்கு நாம் ஏன் ஒத்துழைக்க வேண்டும்?'' என்றும் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

» 23

## ஐ.நா. அலுவலகத்தில் போதைப்பொருள் மீட்பு

நியூயோர்க்,ஜன 28

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் கொக்கெய்ன் என்ற போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக நியூயோர்க் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் முத்திரை பதிக்கப்பட்ட பை ஒன்றில் இருந்து, 16 கிலோ கிராம் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த பொதி மாறுப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் அதிகர்ரிகள் தெரிவித்துள்ளனர்.

மெக்சிகோசிட்டியில் இருந்து இந்த பொதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் முகவரி எது

» 23

# விடாப்பிடிப் போக்கில் அரசு இனி அகிம்சைப் போர்தான்

### மக்களைத் திரட்டி வீதியில் இறங்குவோம் என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஜன. 27

நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை எட்டும் விடயத்தில் இலங்கை அரசு தொடர்ந்தும் இழுத்தடிப்புப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. எம்முடனான பேச்சுக்களிலும் அது ஒரு விடாப்பிடி நிலைப்பாட்டிலேயே உள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் மக்களை ஒன்று திரட்டி அரசுக்கு எதிராக அகிம்சைப் போராட்டங்களைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முன்னெடுக்கும். இதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பின



ரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

1 3 பி ள ஸ்

» 23

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஒருபோதும் நடைமுறைக்கு வரா

### ரங்கா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தாது என்று தெரிவித்துள்ளார், அரசுக்குச் சார்பாக இயங்கும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சிறி ரங்கா.

ஆனால், போர்க்குற்றங்களை விசாரிக்கக் கோருவது உள்ளிட்ட ஆணைக்குழுவின் அனைத்துப் பரிந்துரைகளையும் அரசு முழுமையாக நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என்றும் அவர் கூறினார்.

ஆணைக்குழுவின் பரிந்துரையால் கோபப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவித்தபோது ஏனைய அமைச்சர்களோ அரசோ அதனைக் கண்டிக்கவில்லை என்பதையும் ரங்கா சுட்டிக்காட்டினார்.

"ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் அமைச்சர்கள் சிலர்

» 23

## இலங்கையின் உதவிக்கு விரைகிறது ஓமான் நாடு

கொழும்பு, ஜன. 28

ஈரானிடம் இருந்து மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அந்த இடத்தை ஓமான் நாடு நிரப்பும் என்று இலங்கை தெரிவித்துள்ளது.

அணு ஆயுத உற்பத்தி காரணமாக ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. இதனால் ஈரானில்

» 23

# குற்றவாளிகள் எவரும் தப்பிவிட முடியாது

### பொலிஸ், இராணுவ பாகுபாடு எதுவும் காட்டப்படாது என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜன. 28

''மனிதப் படுகொலை புரிந்த எவரும் தண்டனையில் இருந்து தப்பிவிட முடியாது. நாம் உரிய வகையில் தண்டிப்போம். இதில் பொலிஸ், இராணுவம் என்ற பாகுபாடு கிடையாது'' - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

நாட்டின் சட்டத்தை உரிய வகையில் நடைமுறைப்படுத்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்நிற்கப்போவதில்லை என்றும் அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

10 ஆயிரம் வீட்டு உரிமைப் பத்திரங்களை கையளிக்கும் வைபவம் நேற்று மொனறாகலையில் இடம்பெற்றது. வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டுக்காகவும், தாய்பூமிக்காகவும் தனக்கு செய்ய வேண்டிய சில கடமைகளும், பொறுப்புக்களும் உள்ளன என்றார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை நியமித்தோம். அந்தக் குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்தினோம். அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டு ஒரு மாதமாகின்றது.

இக்காலப்பகுதிக்குள், செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் ஒவ்வொரு துறைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதனையிட்டு நாம் சந்தோசமடைகின்றோம்.

இந்த நடைமுறைகளை உடனுக்குடன் பின்பற்றி விரைவில் தீர்க்க வேண்டும் என சிலர் எதிர்ப்பார்க்கின்றனர். மூன்று தசாப்த காலமாக

நி ல வி வ ரு ம்

» 23

# யாழ். - கொழும்பு பஸ்ஸில் குண்டு

### ஓமந்தையில் பரபரப்பு; பயணிகள் தடுத்து வைப்பு

கொழும்பு, ஜன.28

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றில் வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஓமந்தைச் சோதனைச் சாவடியில் பஸ் நிறுத்தப்பட்டபோது இருக்கை ஒன்றின் கீழ் இருந்த இந்தக் குண்டால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவே குண்டு கண்டெடுக்கப்பட்டது. குண்டு இருந்த பொதிக்கு யாரும் உரிமை கோராததை அடுத்து பஸ்ஸில் பயணம் செய்த 38 பயணிகளும் படையினரால் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

மறைத்து வைக்கப்பட்டிருந்த

» 23

பல்கலைக்கழக அனுமதிக்கான படிவம் - 2012

பல்கலைக்கழக அனுமதிக்கான படிவம் ஞாயிற்றுக்கிழமை 29.01.2012 காலை முதல் தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்படும்.

விலை - 200/=

பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம். தொ.பே.021 222 6693, 1637

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறையில் பாதுகாப்பில்லை மகஸின் தமிழ்க் கைதிகள் பரிதவிப்பு

கொழும்பு, ஜன. 28

களுத்துறைச் சிறைச்சாலையில் தமக்குப் போதுமான வசதிகளும் பாதுகாப்பும் இல்லை என தமிழ் அரசியல் கைதிகள் தமிழத் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளனர்.

மகஸின் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தால் நிர்க்கதியான நிலையில் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்கு மூவரடங்கிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவொன்று நேற்று அங்கு சென்றது.

சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோர் எம்.பிக்கள் குழுவில் இருந்தனர்.

சிங்களக் கைதிகளால் அனைத்துவிதமான பொருள்களும் சூறையாடப்பட்டதால், நிர்க்கதியான தமிழ்க் கைதிகளுக்கு உணவு, உடை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களடங்கிய பொதிகளை கூட்டமைப்பினர் வழங்கினர், கைதிகளின் நிலைமைகள் குறித்தும் கேட்டறிந்தனர்.

மகஸின் சிறைச்சாலைக்குள் தங்களுக்கு நேர்ந்த அவலத்தை கூட்டமைப்பினரிடம் எடுத்துரைத்த தமிழ்க் கைதிகள், தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், களுத்துறை சிறைச்சாலைக்குள் தங்களுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்றும், பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என்றும் கூறியுள்ளனர்.

தமிழ்க் கைதிகளின் கூற்றுகளுக்கு செவிமடுத்த கூட்டமைப்பினர், ''உங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்'' என உறுதியளித்துள்ளனர்.

அதேவேளை, மகஸின் சிறைச்சாலை கலவரத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 6 அதிகாரிகள் உட்பட 25 பேர் புலனாய்வுப் பிரிவினரால் இனங்காணப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. (உ-சி)

## காத்திருந்தது திருமணம் நசுக்கிப் போனது பஸ்

மன்னார், ஜன. 28

தனது திருமண நிகழ்வுக்கு என உறவினர்களுக்கு அழைப்பிதழ் கொடுத்து விட்டு திரும்பிய மணமகனும் அவரது நண்பரும் விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மன்னார், விடத்தல் தீவு பிரதான வீதியில் நேற்றுமாலை 4.30 மணிக்கு இந்த வாகன விபத்து இடம்பெற்றது.

சம்பவத்தில் பனங்கட்டிக்கோட்டுக் கிராமத்தைச் சேர்ந்த ஜோசப் அகஸ்ரின் றீகன் (வயது 31), மணமகனான அந் தோனிப்பிள்ளை றொமேஸ் றொமி (வயது 31) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

மன்னாரிலிருந்து விடத்தல் தீவை நோக்கி வந்த பயணிகள் பஸ்ஸும், விடத்தல் தீவில் இருந்து மன்னாரை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டன.

இதில் திருமண அழைப்பிதழ் கொடுத்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மணமகனும் அவரது நண்பனும் சம்பவ இடத்திலேயே மரணமாகினர். விபத்து சம்பவம் குறித்து மன்னார் வைத்திய சாலைக்கு அறிவிக்கப்பட்டு அங்கிருந்து வந்த அப்புலன்ஸ் மூலம் இருவரது சடலங்களும் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

விபத்துச் சம்பவம் தொடர்பில் விடத்தல் தீவுப் பொலிஸாரும் மன்னார் வைத்திய சாலைப் பொலிஸாரும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (10-601)

## கிருஷ்ணாவின் பயணம் தோல்வி

### இந்திய ராஜதந்திரி கருத்து

கொழும்பு, ஜன. 28

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவின் இலங்கைப் பயணத்தை வெற்றி தராத - தோல்வியில் முடிந்த ஒன்றாகவே கருத வேண்டும். அத்துடன், இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிடமிருந்து மேலும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு இந்திய இராஜதந் திரியான சதீஸ் சந்திரா கவலை தெரிவித்துள்ளார்.

''இந்தியா மீதான கசப்புணர்வு இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தற்போது அதிகரித்துவரும் அதே வேளையில், இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவை எஸ்.எம்.கிருஷ்ணா புகழ்ந்துரைத்ததானது நேர்மையான தரகர் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்த இந்தியா மீதான நம்பகத்தன்மையைக் குறைப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.''

இதுதொடர்பில் அவர் எழுதியுள்ள பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முதலில், இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாகக் கிருஷ்ணா எந்தவொரு விமர்சனக் கருத்துகளையும் வெளியிடவில்லை.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் போன்ற தமிழ் மக்களின் முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றப்படமாட்டாது என்பது நிச்சயம் தெளிவாகின்றது.

> நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பாகக் கிருஷ்ணா எந்தவொரு கருத்துகளையும் வெளியிடவில்லை.

இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுப் பேச்சுகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கான எந்தவொரு நகர்வையும் கிருஷ்ணாவால் மேற்கொள்ள இயலவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது கூட்டமைப்பிற்கும் இலங்கை அரசிற்கும் இடையிலான பேச்சுக்களில் சிறந்த பலனைத் தரும் என கிருஷ்ணா தனது ஊடகவியலாளர் மாநாட்டில் புகழுரைத்துள்ளார்.

இலங்கையால் இந்திய மீனவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு எதிராக எந்தவொரு தீர்வும் எட்டப்படவில்லை.

சுருக்கமாகக் கூறின், கிருஷ்ணாவின் இலங்கைப் பயணம் பெரியளவில் வெற்றியைத் தந்த ஒன்றாகக் கருதப்பட முடியாது. அத்துடன் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிடமிருந்து மேலும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-சி)



இலங்கை விமானப் படையினரின் ஏற்பாட்டில் திடீர் விபத்து ஏற்பட்டால் அதிலிருந்து மக்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது தொடர்பான பயிற்சி நேற்றுக் காலை கல்கிஸ்சக் கடற்பரப்பில் நடைபெற்றது.

## முன்னாள் போராளிகளை அமைச்சர் கஜதீர சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

புனர்வாழ்வுப் பயிற்சி அளித்து விடுவிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களைச் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களையே அமைச்சர் சந்திரசிறி கஜதீர நாளை சந்திக்கவுள்ளார். முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு பொருளாதார உதவிகள் வழங்கும் பொருட்டும், பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை வழங்க வேண்டியவர்களை இனம்காண்பதற்காகவுமே இந்தச் சந்திப்பு இடம்பெறுவதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் கஜதீர வைத் தவிர வேறு எந்த அமைச்சரும் கலந்து கொள்ள மாட்டார்கள். அரச அதிகாரிகள் மட்டுமே கலந்து கொள்வார்கள் என அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (எ-14)

## 43 தமிழக மீனவர் விடுதலை

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் முல்லைத் தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டிருந்த 43 தமிழக மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். திருகோணமலைக் கடற்படை முகாமின் அதிகாரிகள் குழுவொன்றினால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமைய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் இந்திய தூதரகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

## அமெரிக்கா மீது சம்பிக்க சீற்றம்

கொழும்பு, ஜன. 28

ஈரான் அணு ஆயுதப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு எதிராக அந்த நாட்டுக்குப் பொருள்தாரத் தடை விதிக்கும் அதிகாரம் அமெரிக்காவுக்கோ அல்லது மேற்குலகத்திற்கோ கிடையாது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவின் முரட்டுத்தனமான நடவடிக்கையால் உலக நாடுகள் நாளாந்தம் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கான ஈரானின் தூதுவர் பேராசிரியர் எம்.என்.ஹசனிபூருடன் இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டுக்குள் மூன்று லட்சம் குடும்பங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் அரசின் திட்டத்திற்கு கடன், முதலீட்டு வசதிகளை செய்து கொடுக்கும் ஈரான் அரசுடன், அந்த மின் திட்டத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

எண்ணெய் வளமுடைய ஈராக்கின் உதவிகள் எமக்கு அவசியம் என்றும் எடுத்துரைத்தார் எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## தேசியக்கொடி கட்டாயம்

எதிர்வரும் சுதந்திர தினத்தன்று அனைத்து அரச அலுவலகங்களிலும் தேசியக் கொடி ஏற்ற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரட்ண தெரிவித்தார். தேசத்துக்கு மகுடம் கண்காட்சி மற்றும் அதனோடு இணைந்த செயற்திட்டங்களுக்காக மட்டும் 21 ஆயிரம் மில்லியன் ரூபா செலவு ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (த)

## வாகன விபத்தில் ஐவர் காயம்

புத்தூர் சோமஸ் கந்தக் கல்லூரிக்கு அண்மையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் ஐவர் காயமடைந்தனர். அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து வளலாய் நோக்கி பணிக்காகச் சென்று கொண்டிருந்த போதே நேற்றுக் காலை இவர்கள் விபத்தில் சிக்கினர்.

## கைதிகள் சிலர் தப்பிச் செல்லவே சிறைச்சாலைக்குத் தீ வைத்தனர்

### அமைச்சர் கஜதீர கூறுகிறார்

கொழும்பு,ஜன 28

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையிலுள்ள கைதிகளில் சிலர் அங்கிருந்து தப்பிச் செல்லும் நோக்கத்திலேயே சிறைச்சாலையின் ஆவணக் காப்பகத்துக்கு தீயிட்டுள்ளனர் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் குறித்து நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின் போதே இது தொடர்பில் தகவல் தெரிய வந்ததாகவும் இந்த விசாரணை தொடர்பான இடைக்கால அறிக்கை எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய மகசின் சிறைச்சாலை கலவரம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடொன்று நேற்றுப் பிற்பகல், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

புதிய மகசின் சிறைச்சாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் எமில் ரஞ்சனுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே சிறைக் கைதிகள் சிலரால் இந்த கலவரம் நடத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரி குறித்த சிறைச்சாலையின் பொறுப்புக்களைக் கையேற்று மூன்று தினங்களுக்குள்ளேயே இந்த கலவரம் நடத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு கட்டுப்பாடுகளை இவ்வதிகாரி விதித்துள்ளார். இந்த புதிய கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே மேற்படி கைதிகள் ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்- என்றார்.

## பெயர் பட்டியல் விரைவில்

கொழும்பு,ஜன.28

சில ஊடகவியலாளர்களுக்கு விடுதலைப் புலிகள் நிதியுதவி வழங்கியுள்ளதாகவும் அவர்கள் பற்றிய விவரங்களை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் இலங்கை அரசு கூறியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோது ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் சார்பில் இயங்கும் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடகவியலாளர்களுக்குச் சமூக நலன்புரி நிதி என்ற பெயரில் உதவிகளை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் மறைமுக நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டு நாட்டுக்குத் துரோகம் செய்யும் அரசுக்கு அனுமதியில்லாத்து துரதிஸ்டமானது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நம்பிக்கையீனத்தின் பக்கம் இழுத்துச் செல்லும் போக்கு

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, புதிதாகப் பேச்சுக்கள், நாடாளுமன்றத் தெரிவுக்குழு, மூதவை யோசனை என்று காலத்தைக் கடத்தித் தாமதம் செய்யக்கூடாது. புதிய பேச்சுக்கள், குழுக்கள் என்பனவற்றில் கவனத்தைச் செலுத்தாமல் போரினால் அழிவுகளைச் சந்தித்து நிர்க்கதியாக உள்ள மக்களுக்கு அரசாங்கம் உகந்த நியாயமான தீர்வை வழங்க வேண்டும் --

இலங்கையின் வரலாற்றில், சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினையை - இனப்பிரச்சினையைத் - தீர்ப்பதற்காக பலப்பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன; பல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. ஆனால் இன்று வரை தீர்வு கிடைத்ததாக இல்லை --

முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட முடிவுகளையும், இணக்கப்பட்ட விடயங்களையும், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளையும் ஆராய்ந்து தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க முடியும். அவ்வாறு தயாரித்த பின்னர் தமிழ் மக்களினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் ஆதரவைப்பெற்று, உகந்த, சரியான தீர்வுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். -

இவ்வாறு ஒரு புதிய யோசனையை முன்வைத்துள்ளார், கொழும்பு மாநகர சபையின் ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினர் எஸ்.குகவரதன்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்கான பேச்சுக்களை இனியும் நடத்துவது காலத்தை வீணாக்கும் ஒன்றுதான்.

1957ஆம் ஆண்டு பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வாகப் பிராந்திய சபைகளை அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. 1987இல் செய்துகொள்ளப்பட்ட ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் மூலம் பொலிஸ், காணி அதிகாரங்களுடன் கூடிய இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு இணக்கம் காணப்பட்டது. 2004இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்புக்கும் இடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுகளில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி ஆட்சி குறித்து பரிசீலனை செய்வதற்கு இரு தரப்புகளும் இணக்கம் கண்டிருந்தன.

அவை மட்டும் அல்ல 2000ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்கவினாலும் ஒரு தீர்வுப் பொதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்த எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டது. அனைத்துக்கட்சி மாநாட்டு இறுதி அறிக்கை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் என்றும் அரசிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வுயோசனைகள் நிறைய இருக்கின்றன.

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் குகவரதன் கூறுவது போன்று, முன்பு எட்டப்பட்ட உடன்பாடுகளைப் பரிசீலனை செய்தாலே அவற்றில் உள்ள ஆக்கபூர்வமான அம்சங்களை ஒரே பார்வையில் கண்டறியலாம். தமிழ் மக்களின் பிரச்சினைகளை அச்சொட்டாக இனம் கண்டு சரியான தீர்வு ஒன்றை வகுக்கலாம்; நடைமுறைப்படுத்தலாம்.

ஆனால் அரசாங்கமோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை மேலும் சிக்கலாக்குகிறதே தவிர, இதயசுத்தியுடன் நடந்துகொள்வதாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து பலவீனமாக்குவதன் மூலம் அடிப்படை விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளை நலிவடையச் செய்யவே திட்டமிடுவதை எவரும் இலகுவில் புரிந்துகொள்ள இயலும்.

கூட்டமைப்பு எம்.பிக்களில் சிலர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருப்பதன் மூலம் இதற்கான தூண்டில் போடப்பட்டுவிட்டது என்பது தெரிகிறது.

இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வே அவசியம். கூட்டமைப்பை உடைக்க அரசு முயலுமானால் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது. அழிவுப் பாதையில் இருந்து நாட்டை மீட்கமுடியாது போய்விடும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தனக்கு ஆர்வமும் அக்கறையும் உள்ளதாக வெளிப்படையாகக் காட்டிக்கொண்டு, தனக்கு ஆதரவாக உள்ள, இனக்குரோத சக்திகளையும், தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே வாழமுடியும் என்ற கோட்பாடுடைய பேரினவாதக் கடும் போக்காளர்களையும் தூண்டி விட்டு - தமிழர் விவகாரத்தை விசாலித்து அதில் குளிர் காயும் சக்திகளை ஊக்கப்படுத்தாமல் இருப்பதற்கு ஜனாதிபதியும் அவரின் அரசாங்கமும் இதய சுத்தியுடன் செயற்பட்டால் மட்டுமே நியாயமான தீர்வை நாடி நகரமுடியும்.

பேச்சு, தெரிவுக்குழு, மூதவை என்று இழுத்தடிக்காமல் கடந்த கால ஒப்பந்தங்கள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசு சரியாக இனம்கண்டு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணக்கூடிய நியாயமான உரிமைகளை வழங்கவல்ல பொதி ஒன்றை முன்வைக்க வேண்டும். இந்தத் தீர்வுப் பொதி தமிழ் மக்களின் பிரதிநிதியான கூட்டமைப்புக்கு ஏற்புடையதாக இருந்தால் தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு அதனை அனுப்பமுடியும்.

அவ்வாறன்றி, சணம் பித்தம் சணம் வாதம் என்ற நிலையில், மாதத்துக்கு மாதம், புதிது புதிதாக நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டு காலத்தை வீணடிப்பதால் ஆக்கபூர்வமாக எதுவும் வெளிப்படமாட்டாது.

அமைச்சர்கள் ஆளுக்கு ஒருவிதமாகவும், ஜனாதிபதி வேறு கோணத்திலுமாக கூறிவருவது தமிழ் மக்களை மட்டுமன்றி, சர்வதேசத்தையும் நம்பிக்கையீனத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறது.

அந்த இடைவெளிக்குள் தனது மனதில் வைத்திருக்கும் உப்புச் சப்பற்ற தீர்வு ஒன்றை திணிக்கும் நோக்கமே அரசின் குறி இலக்கு என்ற சந்தேகத்தையே தமிழ் மக்களிடம் அது தோற்றுவிக்கிறது.

# ‘சிங்கக்குட்டிகள்’, ‘அம்பாந்தோட்டைப் பூனைகள்’ கோத்தபாயவின் கொலைக் குழுக்கள் இவை

நீதிக்குப் புறம்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு சிங்கக் குட்டிகள் என்று அழைக்கப்படும் குழுவைப் பயன்படுத்துவதாகக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வொஷிங்டனுக்கு அனுப்பியுள்ள தகவல் பரிமாற்றக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், அப்போது ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளராகவும், மாத்தறை மாவட்ட அமைப்பாளராகவும் இருந்த மங்கள சமரவீரவை 2007ஆம் ஆண்டு பெப்ரவரி 26ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் சந்தித்திருந்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக, 2007 பெப்ரவரி 28ஆம் திகதி றொபேட் ஓ பிளேக், வாசிங்டனுக்கு அனுப்பிய தக வலையே விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

‘துன்புறுத்தல்கள் பற்றி இலங்கை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் முறைப்பாடு’ என்ற தலைப்பில் இரகசிய ஆவணம் என்று குறிப் பிடப்பட்டு இந்தத் தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களைக் கடத்துதல் மற்றும் துன்புறுத்தல் உள்ளிட்ட தமது இராணுவ மூலோபாயம் மூலம் கொழும்பில் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்றும், புலிக ளின் வலையமைப்பைப் பலமிழக்கச் செய்ய முடியும் என்றும் ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலரும் நம்புகிறார்கள்.

நீதிக்குப் புறம்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அரசு ‘சிங்கக்குட்டிகள்’ என்ற குழுவை உருவாக்கியுள்ளதாக மங்கள சமரவீர உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய இடங்களில் விடுதலைப் புலிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும் இரகசியமாக தடுத்து வைப்பதற்கு இராணுவப் புலனாய்வுத்துறையின் சிறப்புக் கூண்டுகளை கோத்தபாய ராஜபக்ஷவின் அனுமதியுடன் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உருவாக்கியுள்ளதாக வதந்தி பரவலாக உள்ளது.

இதுபோன்று அம்பாந்தோட்டைப் பூனைகள் என்ற நிழல் குழு ஒன்று செயற்படுவதாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தக் குழுக்கள் தம்மால் கொல்லப்படுவோரின் சடலங்களை கடலில் வீசி விடுவதாகவும் மங்கள சமரவீர குறிப்பிட்டார் என்று றொபேட் ஓ பிளேக் குறிப்பிட்டுள்ளதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (த)

# களுத்துறை சிறையில் தமிழ்க் கைதிகள் அடிப்படை வசதிகளின்றி பெரும் அவலம்

## ஜனாதிபதிக்கு விஜயகலா அவசர கடிதம்

கொழும்பு, ஜன.28

கொழும்பு மகஸின் சிறைச்சாலையிலிருந்து களுத்துறை சிறைச்சாலைக்கு அவசர அவசரமாக மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அங்கு அடிப்படை வசதிகளின்றியும், மாற்றுடையின்றியும் அவலப்படுகின்றனர். இவர்களது அவலத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விஜயகலா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இந்தக் கடிதத்தின் பிரதிகள் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் கொடிப்பிலி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய மகஸின் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகள் களுத்துறை சிறைச்சாலைக்கும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கும் மாற்றப்பட்டுள்ளனர். களுத்துறை சிறைச்சாலைக்கு 180 பேர் மாற்றப்பட்டதுடன் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கு 10 பேர் இடமாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் புதிய மகஸின் சிறைச்சாலையிலிருந்து அவசர அவசரமாக இடமாற்றப்பட்டமையால் உடுத்த உடையுடனேயே இவர்கள் களுத்துறைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். புதிய மகஸின் சிறைச்சாலையில் இவர்களது ஆடைகள்,மற்றும் ஆவணங்கள் சூறையாடப்பட்டுள்ளன. இதனால் மாற்றுடையின்றி இவர்கள் களுத்துறைச் சிறைச்சாலையில் அல்லல்படுகின்றனர். இதனைவிட களுத்துறை சிறைச்சாலையில் கைதிகளுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலை காணப்படுகின்றது. குடிக்கத் தண்ணீரின்றியும், அடிப்படைத் தேவைகளுக்கு நீர்வசதியின்றியும் இவர்கள் அல்லற்படுகின்றனர். இது குறித்து கைதிகளின் உறவினர்கள் எனக்கு அறியத்தந்துள்ளனர்.

எனவே அடிப்படை வசதிகளின்றி உடுத்த உடையுடன் அவலப்படும் கைதிகளுக்கு உடனடியாக அரசு உதவிகளை வழங்குவதுடன் மாற்று ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் தம்மை புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். சிறைச்சாலைகளில் தமக்கு பாதுகாப்பற்ற நிலை காணப்படுவதனாலேயே இவர்கள் இந்தக் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். எனவே இவ்விடயம் குறித்தும் தாங்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டியது இன்றியமையாததாகும்- என்றுள்ளது (ஒ)

# நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

யாழ்பாணம், ஜன.28

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கூட்டுறவாளர்களை கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் தலைவர் செ.இலகுநாதன் தெரிவித்துள்ளார். (த-311)

**ஒன்றுகூடல்**

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார். (த-121)

**சிவபூமி மடம் திறப்பு**

சிவபூமி அறக்கட்டளை நிதியத்தினால் அமைக்கப்பட்ட கீரிமலை சிவபூமி மடத் திறப்பு விழா காலை 9 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-313)

**கட்டடத் திறப்பு விழா**

வரணி நாவற்காடு இளங்கோ சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா முற்பகல் 10 மணிக்கு நிலையத் தலைவர் சி.வசீகரநாதர் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-207)

**சிறுகதை தொகுதி வெளியீடு**

வடமராட்சி வடக்குப் பிரதேச கலாச்சாரப் பேரவையின் ஏற்பாட்டில் தரிசனம் சிறுகதைத் தொகுதி வெளியீடு காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்துகொள்வார். (த-253)

**வெள்ளிவிழா**

அருள்பணி எஸ்.பி.நேசகுமார் அடிகளாரின் குருத்துவ வெள்ளி விழா பிற்பகல் 4.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வெள்ளிவிழா மலர் வெளியீடும் இடம்பெறும்.(த-313)

**கலந்துரையாடல்**

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 3மணிக்கு எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

**செயலமர்வு**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6முதல் 11 வரை கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு காலை 8.30மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (த-313)

**ஒன்றுகூடல்**

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராப் பிரிவின் ஏற்பாட்டில் வாகன ஓட்டுனர் பயிற்சிநெறி தொடர்பான ஒன்று கூடல் பிற்பகல் 4.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலை விட்டு விலகிய 18 வயதுக்கு மேற்பட்டோர் கலந்துகொள்ளலாம். (த-313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயணிகளைத் தாக்கிய படையினர்!

## பரந்தனில் நேற்றிரவு சம்பவம்

கிளிநொச்சி, ஜன.28

பஸ் நடத்துனருக்கும் சிவல் உடையில் பயணித்த படையினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் பயணிகளும் படையினரால் தாக்கப்பட்டனர். இதையடுத்து பஸ் சாரதி, நடத்துனர், படையினர் நால்வர் என 6 பேரைக் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பஸ்ஸில் பயணித்த பயணிகள் வீதியில் இறக்கப்பட்டு பஸ்ஸும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப் பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் கிளிநொச்சி பரந்தன் சந்தியில் நடைபெற்றது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி தனியார் பஸ் வந்துகொண்டிருந்தது. கிளிநொச்சி பரந்தன் பகுதியில் நகரப் போக்குவரத்துப் பொலிஸாரால் பஸ் மறிக்கப்பட்டது. மிதி பலகையில் பயணிகளை ஏற்றியமைக்காக பஸ் நடத்துனரிடம் குற்றப் பணம் அறவிடப்பட்டது.

பின்னர் பஸ் புறப்பட ஆயத்தமாகியதும் மிதி பலகையில் நின்ற பயணி களை உள்ளே செல்லுமாறு பணித்தார் நடத்துனர். இதன் போது மிதி பலகையில் சிவில் உடையில் நின்ற படையினருக்கும் நடத்துனருக்கும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. அது முற்றி கைகலப்பாக மாறியது.

சம்பவத்தை அறிந்து அருகில் நின்ற இராணுவத்தினர் சிலரும் வந்து சேர்ந்தனர். நடத்துனரும் பயணிகள் சிலரும் படையினரால் தாக்கப்பட்டனர்.

பயணிகள் தகவல் கொடுத்ததை அடுத்து விரைந்து வந்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி, நடத்துனரையும் இராணுவத்தினர் நால்வரையும் கைது செய்து கொண்டு சென்றனர்.

> படையினரும் பொதுமக்களும் மோதிக்கொள்ளும் இத்தகைய சம்பவங்கள் வன்னியில் அதிகம் நிகழ ஆரம்பித்துள்ளன.

பயணித்த பயணிகள் இறக்கப்பட்டு பஸ்ஸும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதனால் நடு வீதியில் நீண்ட நேரம் காத்திருந்த பயணிகள் வேறு பஸ்களில் ஏறிப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

இரவு வேளையில் திடீரெனப் பயணிகள் இறக்கி விடப்பட்டதால் யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்களில் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து வீடு வந்து சேர வேண்டிய நிலை ஏற்பட்டது. படையினரும் பொது மக்களும் மோதிக்கொள்ளும் இத்தகைய சம்பவங்கள் வன்னியில் அதிகம் நிகழ ஆரம்பித்துள்ளன.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது கடற்படைச் சிப்பாய் ஒருவருக்கும் பஸ் நடத்துனர் ஒருவருக்கும் இடையே கை கலப்பு இடம் பெற்றது. வேறு அசம்பாவிதங்கள் எவையும் நடைபெறவில்லை. இதனை அடுத்து அவர்களைக் கைது செய்து தாம் விசாரித்து வருவதாகவும் நேற்றிரவு கடமையில் இருந்த பொலிஸார் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-10-426-319)

# கழிவுகளுக்கு 'குட்பை'



வவுனியா,ஜன.28

வவுனியாவில் கழிவு நீர் வாய்க்கால்கள் கிரமமான முறையில் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன.

வவுனியாவில் கழிவு வாய்க்கால்கள், குளங்கள் ஆகியவற்றில் கழிவுகள் தேங்கியிருப்பதால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. இது தொடர்பாகப் பலராலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கழிவுநீர் வாய்க்கால்கள் இரண்டு நாள்களுக்கொரு தடவை கிரமமாகச் சுத்திகரிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

வவுனியா நகர சபையின் இந்தச் செயற்பாட்டினை இங்குள்ள மக்கள் பாராட்டுகின்றனர்.

மேலும் இதைப்போன்று ஏனைய இடங்களிலும் சுத்திகரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் பெருவிருப்பமாகவுள்ளது.

(க-421)

# வீடு தேவையா? சம்பளம் எவ்வளவு?

அக்கராயன்,ஜன.28

கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான வேதனம் பெறும் அரச ஊழியர்களுக்கே இந்தியன் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் தகவல் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படாத நிலை காணப்பட்டது. இதனையடுத்து அரச ஊழியர்கள் மனுக்கள் கையளித்ததோடு போராட்டங்களிலும் ஈடுபட்டனர். இந்த நிலையில் கிளிநொச்சி அரச அதிபர் இந்தியன் வீடுகள் அரச ஊழியர்களுக்கும் வழங்கப்படுமென உறுதியளித்திருந்தார்.

தற்போது இந்தியன் வீடுகள் 25 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாக வேதனம் பெறும் அரச ஊழியர்களுக்கே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> கிளிநொச்சி மாவட்டத்தில் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படாத நிலை காணப்பட்டது. இதன்போது இந்தியன் வீடுகள் 25 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாக வேதனம் பெறும் அரச ஊழியர்களுக்கே வழங்கப்படவுள்ளது.

ஏனைய அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் தொடர்பான உறுதியான முடிவு எதுவும் இதுவரை வெளிவரவில்லை. (க-410)



கரைச்சி உதவி அரச அதிபர் கே.நாகேஸ்வரன் மாற்றுத்திறனாளி ஒருவரின் குடும்பத்துக்குச் சக்கர நாற்காலியை வழங்கும் போது சமூக சேவை அதிகாரி ப.சிவகரன், முதியோர் உரிமை மேம்பாட்டு அலுவலர் செல்வி காந்திமதி, மாவட்ட சமூக சேவை அதிகாரி ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (121)

# மடு வலயத்தில் புதிய 3 ஆரம்பப் பாடசாலைகள்

மன்னார்,ஜன.28

மடுக் கல்வி வலயத்தில் மூன்று புதிய ஆரம்ப பாடசாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மடுக் கல்வி வலயத்தில் மூன்று புதிய ஆரம்பப் பாடசாலைகள் கடந்த 02 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இலுப்பைக் கடவை அந்தோனியார் புரம் அ.த.க.ஆரம்ப பாடசாலை, ஈச்சனவக்கை அ.த.க. ஆரம்ப பாடசாலை, பெரியமடு கிழக்கு அ.த.க. ஆரம்ப பாடசாலை ஆகிய மூன்று ஆரம்ப பாடசாலைகளே திறந்து வைக்கப்பட்டுள்ளன. அந்தோனியார் புரம் பாடசாலையை மன்னார் ஆயர் இராயப்பு யோசப் திறந்து வைத்தார். ஈச்சனவக்கை, பெரியமடு கிழக்கு ஆகிய பாடசாலைகளை மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் பாடசாலைகளுக்கான தற்காலிக கொட்டகைகளை 'சோஆ' நிறுவனம் வழங்கி உதவியுள்ளது. இவை தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரை வகுப்புக்களைக் கொண்டிருக்கும். ஈச்சனவக்கைப் பாடசாலை அதிபராக ஜே.கே.பயஸ் மற்றும் அந்தோனியார் புரம் பாடசாலை அதிபராக என். நவநீதன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதால் பல மைல்களுக்கு அப்பால் உள்ள பாடசாலைகளுக்குச் சென்ற 200 இக்கும் மேற்பட்ட மாணவர்கள் நன்மை அடைந்துள்ளனர்.

மேற்படி பாடசாலைகளின் எதிர்கால மேம்பாட்டுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம் ஆகியோர் உதவ முன்வந்துள்ளதாக மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினரான ஜேம்ஸ் சுதாகரன் தெரிவித்துள்ளார். (க)

# தொழில் வாய்ப்புக்கான கற்கை நெறிகள்

வவுனியா,ஜன.28

வவுனியாவில் தொழில் வாய்ப்புக்கான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வவுனியாவில் க.பொ.த. சாதாரண தரத்தைக் கற்றவர்களுக்கும், க.பொ.த. உயர் தரத்தை நிறைவு செய்து பல்கலைக்கழக அனுமதியையும் உயர் கல்வியையும் தொடர முடியாதவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. இவர்களுக்குப் பலவிதமான தொழில்களைக் கற்பிக்கும் நோக்கில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கற்கை நெறிகளை பயில விரும்புவோர் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, இல.26/2, வெளிவட்ட வீதி, சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடி, வவுனியா எனும் முகவரியில் தொடர்பு கொள்ள முடியும்.

> இந்தப் பயிற்சி முடிவில் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சி முடிவில் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். இந்தப் பயிற்சியைப் பெறுபவர்கள் பல்கலைக்கழகம் வரையிலான தகைமை பெறக்கூடியது குறிப்பிடத்தக்கது. (க)

# கல்வியும் விளையாட்டும் இருகண்கள்

அக்கராயன்,ஜன.28

மாணவர்கள் கல்வியையும் விளையாட்டையும் இரு கண்களாகக் கொள்ள வேண்டுமென கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நான் மாவட்ட அரச அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் முதலாவதாகக் கலந்து கொள்கின்ற ஒரு பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி [illegible] அதற்காக இந்தப் பாடசாலைச் சமூகத்துக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

பாடசாலையில் நாம் கல்வியை மட்டும் கற்று விட்டுச் செல்கின்ற நிலை அமைந்தால் பூரண மனிதர்களாக நாம் செல்ல முடியாது. மாணவர்களின் பெரும் பகுதி பாடசாலையில் கழிகின்றது. அதுவும் ஆக்கபூர்வமான நேரங்கள் பாடசாலையில் தான் கழிகின்றன. பாடசாலையில் மாணவர்கள் தேவையான கல்வியைக் கற்றுக் கொள்கின்றனர். அத்துடன் சமூகத்திலே நற்பிரசைகளாக உருவாகுவதற்கான தேவையான களமாகவும் பாடசாலைகள் அமைகின்றன.

இதனை விட மாணவர்கள் மத்தியில் இருக்கின்ற ஆளுமைகளை வெளிப்படுத்துகின்ற நிகழ்வுகள் கூட பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்றன. அதிலொன்று தான் விளையாட்டுப் போட்டிகள். விளையாட்டுப் போட்டி என்பது உண்மையிலே ஒருவருக்கொருவர் போட்டித் தன்மையோடு விளையாட்டை விளையாடுவது மட்டுமல்ல மாணவர்களுக்கான ஆரோக்கியமான நிலையைத் தோற்றுவிப்பதற்கான ஒரு நிலைப்பாட்டையும் இது உருவாக்கும்.

நாம் சிறுவயதில் இருந்தே கல்வியுடன் உடற் பயிற்சியும் முக்கியம் என்பதைக் கருத்தில் கொண்டு செயற்படுவோமானால் உடல் நிலை சமநிலை மிகுந்ததாகக் காணப்படும். கல்வியையும், விளையாட்டையும் இரு கண்களாக மாணவர்கள் போற்றுவது வாழ்வுக்கு ஆரோக்கியம் தரும். மாணவர்களின் செயற்பாடுகள் மூலம் பாடசாலைகள் பெருமை பெறுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து படித்து நிர்வாக சேவைக்கு முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டவர் என்று என்னைக் கூறிக்கொள்ள முடியும். ஆனால் இரண்டாவதாகத் தெரிவு செய்யப்பட்டவர் அக்கராயன் பிரதேசத்தை சேர்ந்தவர். அத்துடன் இந்தப் பாடசாலையின் பழைய மாணவன். ஆகவே இந்தப் பாடசாலை ஒரு பின் தங்கிய பாடசாலை இல்லை. பல முன்னுதாரணங்கள் உள்ளன. அவற்றை முன்நிறுத்தி தாங்களும் சிறந்த மாணவர்களாக வருவதன் மூலம் இந்தப் பாடசாலையின் சிறப்பு மென்மேலும் மேன்மையடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ சங்கத்தின் பிராந்திய மாநாடு




யாழ்ப்பாணம், ஜன.28

இலங்கை மருத்துவச் சங்கம் யாழ். மருத்துவ சங்கத்துடன் இணைந்து நடத்தும் பிராந்திய மாநாட்டை நேற்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் ரில்கோ சிற்றி விடுதியில் இதன் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

மூன்று தினங்கள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள இந்தப் பிராந்திய மாநாட்டின் முதல் நாளான நேற்று வெள்ளிக்கிழமை ''யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் சுகாதாரம் சார் சவால்கள் முன்னோக்கிய பாதையில்'' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் வரவேற்புரையை இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் பேராசிரியர் எஸ். டபிள்யூ. திஸநாயக்கா நிகழ்த்தினார்.

வடமாகாண சுகாதாரத் துறைப் பணிப்பாளர் டாக்டர் ரதணியூட்டின் உரையைத் தொடர்ந்து நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா உரை நிகழ்த்தினார்.

**மூன்று தினங்கள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள இந்தப் பிராந்திய மாநாட்டின் முதல் நாளான நேற்று வெள்ளிக்கிழமை ''யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் சுகாதாரம் சார் சவால்கள் முன்னோக்கிய பாதையில்'' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்றது.**

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் எஸ்.ரவிராஜ், சங்கத்தின் செயலாளர் வைத்திய நிபுணர் எஸ்.பிறேம கிருஷ்ணா, இலங்கை மருத்துவ சங்கத் தலைவர் பேராசிரியர் எஸ்.டபிள்யூ. திஸநாயக்கா, செயலாளர் டாக்டர் வசந்த மல்லவஜி, உதவிச் செயலாளர் டாக்டர் கபிலஜெயரட்ணா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இலங்கை மருத்துவ சங்கம் யாழ்.மருத்துவ சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

சுகாதாரம் மற்றும் வைத்தியத் துறையின் மேம்பாட்டுக்கான சவால்கள் தொடர்பாக வைத்தியத்துறையினர் அறிக்கை செய்தனர். (ம-14)

# பஸ் சேவை சீரில்லை பாதிப்படையும் மாணவர்

யாழ்ப்பாணம், ஜன.28

இளவாலை விளான் ஊடாகப் பண்டத்தரிப்புக்கு காலை நேரம் சேவையில் ஈடுபடும் 788 ஆம் இலக்க பஸ் சேவை சீரின்மையால் பாடசாலை மாணவர்கள் குறித்த நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

**பாடசாலையில் மாணவர்களின் வரவு குறைவடைவதாக பாடசாலை அதிபர்கள் பெற்றோர்களை அழைத்து முறைப்பாடு தெரிவிக்கின்றனர்**

இலங்கைப் போக்குவரத்து பஸ்சேவை சீரின்மை காரணமாக தனியார் பஸ் சேவையில் ஈடுபட்டாலும் குறுந்தூரப் பயணம் என்பதால் மாணவர்களை ஏற்றாமல் சென்றுவிடுகிறார்கள்.

இதன் காரணமாக பஸ்ஸுக்காகக் காத்திருந்து பாடசாலைக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாமல் மீண்டும் வீடுகளுக்குப் பாடசாலை மாணவர்கள் சென்றுவிடும் நிலைமையும் உள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இதன் காரணமாக பாடசாலையில் மாணவர்களின் வரவு குறைவடைவதாக பாடசாலை அதிபர்கள் பெற்றோர்களை அழைத்து முறைப்பாடு தெரிவிக்கும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே பாடசாலை மாணவர்களின் நலன்கருதி குறித்த பஸ் சேவையை சேவையில் ஈடுபடுத்துமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

# குப்பிளான் வீதிக்கு மின்விளக்குகள் இல்லை

வலி வடக்கு, ஜன. 28

ஏழாலை குப்பிளான் பிரதான வீதியில் மின் விளக்குகள் இல்லாமையால் பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த காலத்தில் இவ் வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்த போதிலும் கடந்த கால யுத்தத்தின் போது இவை அழிவடைந்தன.

தற்போது வலி. தெற்குப் பிரதேச சபையால் வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இதன்போது கூட பெரும் எண்ணிக்கையான விவசாயிகளும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் பயணம் மேற்கொள்ளும் இந்த வீதிக்கு மின்விளக்குகள் பொருத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது.

அண்மையில் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு தத்தம் பகுதிகளில் உள்ள முக்கிய இடங்களில் பொருத்தும் படி கூறி ஒரு தொகுதி வீதி விளக்குகள் பிரதேச சபையின் தலைவரின் பணிப்புரைக்கு அமைவாக வழங்கப்பட்ட போதிலும் இந்த மின் விளக்குகள் கூட உரிய முறையில் பொருத்தப்படாமல் உள்ளதாக மக்கள் கூறுகின்றனர். (ம-86)

# அபிவிருத்திக்குழு அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.குடாநாட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி மற்றும் தேவை கருதி அபிவிருத்திக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற சங்கங்களில் அபிவிருத்தி செயற்பாடு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது 10 உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தனர்.

எனினும் தற்போது சங்கங்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதால் செயற்பாட்டு அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவரை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக மேலதிகமாக 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இயங்கும் இந்த 15 பேர் கொண்ட குழுவில் சங்க முகாமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உள்வாங்கப்பட்டனர்.

இந்தக் குழுவினர் மாதம் ஒரு தடவை ஒன்றாகக் கூடி சங்கச் செயற்பாடுகள், அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313-17)

# மணியந்தோட்டம் விரைவில் ஒளிபெறும்

யாழ்ப்பாணம், ஜன.28

மணியந்தோட்டப் பிரதேசத்துக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்பட இருப்பதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மின் விநியோகத்தை வழங்குவதற்கு முன்னோடியாக இந்த வாரம் மணியந்தோட்டச் சந்தியிலிருந்து நாவலடிவரை மின் இணைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மின் விநியோகத்துக்கென புதிய மின் மாற்றிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப்பகுதிக்கான மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தும் இன்னும் பூரணமாக வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-17-ரி)

# தாதியர் பயிற்சி நெறிக்கு வடக்கில் விசேட சலுகை

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

தாதியர் பயிற்சி நெறிக்கு வடக்கில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கக் கூடிய வகையில் அமைச்சரவை விசேட அங்கீகாரத்தை வழங்கியுள்ளதெனச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

மருத்துவர் சங்கத்தின் பிராந்திய மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ் ரில்கோ சிற்றி ஹோட்டலில் இடம்பெற்றது இதன் போது அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச ரீதியாக நோக்கும் போது நாட்டின் வைத்திய சேவை சிறப்பாக இருக்கிறது. தாய், சேய் மரண வீதம் சர்வதேச மட்டத்தில் ஒப்பிடுகையில் எமது நாட்டில் குறைவாக இருக்கிறது. எமது நாட்டில் வைத்தியத் துறையில் பல சாதனைகள் செய்யப்பட்டுள்ளன.

**தாய், சேய் மரண வீதம் சர்வதேச மட்டத்தில் ஒப்பிடுகையில் எமது நாட் டில் குறைவாக இருக்கிறது.**

வட பகுதி மக்கள் கடந்த கால யுத்தத்தினால் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே வடக்கின் சுகாதாரத் துறையில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

வைத்தியர்கள், சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களுக்கு வடக்கில் பற்றாக்குறை உள்ளது. அதனை நிவர்த்தி செய்ய வட பகுதியிலிருந்து உருவாகும் வைத்தியர்கள் குறைந்த பட்சம் நான்கு வருடங்களாவது தமது பகுதியில் சேவையாற்ற முன் வர வேண்டும்.- என்றார் அமைச்சர். (த-14)

# ஆயுள்வேத சிகிச்சையால் ஆயுளை இழந்த பெண்

ஆயுள்வேத பரம்பரை வைத்தியர் ஒருவரின் தவறான சிகிச்சையால் கந்தரோடையைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் முள்ளந்தண்டு வெடித்து மரணமாகியுள்ளார்.

கந்தரோடையைச் சேர்ந்த கனகரட்ணம் தர்மரூபி (வயது 37) என்ற இளம் பெண்ணே இவ்வாறு மரணமானவராவார்.

இந்த மரணம் தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது:

குறித்த பெண் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் முதுகு நோவுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இவரது முள்ளந் தண்டில் கல்சியம் படிந்துள்ளதால் சிகிச்சைபெற்று பயனில்லை என்று வைத்திய சாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மூளாயிலுள்ள பரியாரியார் ஒருவரிடம் சிகிச்சை பெற்றுள்ளார். கடந்த 7 மாதங்களாக சிகிச்சை பெற்றுவந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினமும் வழமை போன்று மதியம் சிகிச்சைக்குச் சென்றுள்ளார்.

சிகிச்சையளித்துக் கொண்டிருந்த பொழுது திடீரென 'ஐயோ' என்ற அலறல் சத்தத்துடன் சுயநினைவை இழந்துள்ளார். உடனடியாகவே மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் மரணமாகியுள்ளார் என்று கூறப்பட்டது. குறித்த பெண்ணின் உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று இடம்பெற்ற பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. முள்ளந்தண்டு வெடித்து, இரத்தக் குழாய்களில் பாதிப்பு ஏற்பட்டதனாலேயே மரணமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-15-4)

# உள்ளூர் சேவை மேம்பாட்டுக்கு ஒதுக்கப்பட்டது ரூ.47.76 மில்லியன்

யாழ்ப்பாணம், ஜன.28

2012 ஆம் ஆண்டுக்கான உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் யாழ் மாநகரசபைக் குட்பட்ட வீதி புனரமைப்புக்காக 47.76 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை செட்டியார் தோட்ட வீதிகள் புனரமைப்புக்கு 10 மில்லியன் ரூபாவும் ஜின்னா வீதி, அசாப் வீதி, காதி அபூபக்கர் வீதி, மக்கா வீதி, வீ.டி. வீதிகள் திருத்தம் மற்றும் வடிகால்கள் மதகுகள் திருத்தத்துக்காக 15 மில்லியனும், மாவடி வீதி, [illegible] வீதி, வைரவர் கோயில் கற்குளம் வீதி திருத்தத்துக்காக 12.5 மில்லியனும், செலவிடவுள்ளது.

இந்த வேலைகளுக்கான மொத்தச் செலவினம் 50 மில்லியன் ரூபா எனவும் நெல்சிப் திட்டத்தில் பொருளாதார அமைச்சு 47.76 மில்லியன் ரூபா வழங்கும் எனவும் கூறப்பட்டது. நெல்சிப் வழங்கிய தொகையை விட வேலையின் பெறுமதி 8 சதவீதம் அதிகம் எனவும் இதில் மக்களின் பங்களிப்பு 3 வீதமாகவும் மிகுதி 5 வீதத்தை மாநகரசபை செலவிடும் எனவும் மாநகர சபையின் மாதாந்த ஒன்று கூடலின் போது மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார். (ம-7-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வருகின்றனர் ஜனாதிபதி, பிரதமர் அடுத்தமாதம்

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.மாவட்டத்துக்கு அடுத்தவாரம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட அமைச்சர்களும் வருகை தரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி பிரதமர் டி.எம். ஜெயரட்ண மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட ஆகியோர் வருகை தரவுள்ளனர்.


யாழ். மணிக்கூட்டு கோபுர நிலைய வீதியில் விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு 3ஆம் திகதி முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரையில் நடைபெறவுள்ளது.

அதில் பங்குபற்றுவதற்காகவே பிரதமர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட ஆகியோர் வருகை தரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

**யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்கு வருகை தரவுள்ளார்.**

எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்கு வருகை தரவுள்ளார். இதற்காக ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் நேற்றுமுன்தினம் முதல் குறித்த நீச்சல் தடாகம் அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதே தினத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார். யாழ். மாவட்டத்தின் மின் விநியோகம் தொடர்பான பணிகளை ஆராய்வதற்கான பயணமாக இவரது வருகை அமையவுள்ளது என்று கூறப்பட்டது. (ம-15)



இளவாலை - பண்டத்தரிப்பு பிரதான வீதியின் றேஞ்சடிப் பகுதியிலிருந்து இரண்டு மனித மண்டையோடுகளுடன் மீட்கப்பட்ட ஆடைகளே இவை. பச்சை நிறத்திலான துணி மற்றும் ஆண்கள் அணியும் முழுநீள மேல்சட்டை, ஆண்களின் உள்ளாடை, சிறிய மேல் சட்டை ஒன்று என்பன மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ம-15)

## யாழ்.நகரப் பகுதியில் 100 சமிக்ஞை விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.நகரப் பகுதியில் நூறு சமிக்ஞை விளக்குகள் உடனடியாக அமைக்கப்படும் என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக சிங்கப்பூரைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மாநகர சபையில் நடைபெறவுள்ளது. உறுப்பினர்களை இதில் கலந்து கொண்டு கருத்துகளை வழங்குமாறு கூறப்பட்டது. (ம-7)

## கிடைத்தது இலாபம்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த மாதம் முதல் இலாபகரமாகச் செயற்பட்டு வருவதாக சங்கச் செயற்பாட்டு ஆலோசகர் கே.கவிந்திரதாஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இந்தச் சங்கத்தின் செயற்பாடுகள் யாவும் முடக்கமடைந்து பெரிய நட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது சங்கச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதால் கடந்த மாதம் முதல் சங்கம் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்துள்ளது.

இதன் காரணமாக சங்கப் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளையும் தாமதமின்றி வழங்கக்கூடிய தாகவும் உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313-17)

## பிடிக்கப்பட்ட நாய்கள்

சாவகச்சேரியிலுள்ள கல்லூரி ஒன்றில் கட்டாக்காலி நாய்கள் மூன்று மாணவிகளை நேற்று முன்தினம் கடித்ததால் காய மடைந்த மூவரும் சிகிச்சைக்கென சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கட்டாக்காலி நாய்களின் இந்தத் தொல்லை பற்றி சாவகச்சேரிப் பொலிஸாருக்கும் சாவகச்சேரி நகர சபைக்கும் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பாடசாலைக்குச் சென்ற நகரசபை ஊழியர்கள் கட்டாக்காலி நாய்கள் மூன்றையும் பிடித்துச் சென்றனர். (ம-4)

## வேலணைப் பிரதேச சபையின் கீழ் இனி குறிகாட்டுவான் படகுசேவை

யாழ்ப்பாணம், ஜன. 28

குறிகாட்டுவான், நயினாதீவு படகுச் சேவை வேலணை பிரதேச சபையின் கீழ் விரைவில் செயற்படவுள்ளது.

இந்தச் சேவையில் உள்ள மோட்டார் படகு உரிமையாளர்கள் வேலணை பிரதேச சபையின் கோரிக்கைக்கு இணங்கத் தங்களது படகுச் சேவைகளை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. நயினாதீவு குறிகாட்டுவான் சேவையில் 45 படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை நயினாதீவு படகு உரிமையாளர் சங்கத்தில் தீர்மானித்தபடி குறிப்பிட்ட தினங்களில் சேவையில் ஈடுபடுகின்றன.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய திருவிழா தினங்களிலும் ஏனைய விசேட தினங்களிலும் வழமையிலும் பார்க்க கூடுதல் படகுகள் சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஒரு மணிநேரம் நீடிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஜன.28

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் ஆகிய வகுப்புக்களை மேலும் ஒரு மணித்தியாலயம் நீடிக்குமாறு பெற்றோர்கள் கல்லூரி அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்லூரி விடும் நேரத்தின் பின்னர் மேலும் ஒரு மணித்தியாலம் நீடித்து அந்த நேரத்தில் மாதிரி வினாத்தாள்களை கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இது பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு உந்து சக்தியாக விளங்குமெனவும் கேட்டுள்ளனர்.

ஒவ்வொரு பாடத்துக்கு வகுப்பாசிரியர் தவிர்ந்த வேறு ஆசிரியர்கள் மூலம் கற்பித்தால் கல்லூரியின் கல்வித் தரத்தை உயர்த்த முடியும் எனவும் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கல்லூரியில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை பெற்றோர்களால் விடுக்கப்பட்டது. (ம-207)

## குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், ஜன.28

தடை செய்யப்பட்ட இழுவை மடியைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கடற்றொழிலாளி தான் சுற்றவாளி என மன்றில் தெரிவித்ததையடுத்து இவர் மீதான வழக்கு விளக்கத்துக்காக மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை இறங்கு துறைப் பகுதியில் வைத்துக் கடந்த 27 ஆம் திகதி சந்தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

இழுவை மடியைப் பயன்படுத்தி மீன்பிடித்துவிட்டு கரை திரும்பியபோதே யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளால் இனங்காணப்பட்டு அந்த மீனவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பருத்தித்துறை நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இது கடந்த 25 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமது அனுமதி பெறப்படாமல் கடலில் மீன்பிடித்தமை மற்றும் அனுமதியளிக்கப்படாத இழுவை வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களை சந்தேக நபருக்கு எதிராக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் மன்றில் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

* * *

யாழ்ப்பாணம், ஜன.28

'சபாரி' வகை மோட்டார் சைக்கிளில் கலைக்கவசம் இன்றியும் உரிய ஆவணங்கள் இன்றியும் பயணித்தவருக்கு யாழ். நீதிவான் மா.கணேசராஜா 9 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

நெல்லியடி இமையாணன் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு சென்றபோது இவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினார். சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு இந்த அபராதத் தொகையை நீதிவான் விதித்தார். (த-4)

* * *

அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்தமை மற்றும் போதைப் பொருளான பியர் விற்பனைக்குக் காட்சிப்படுத்தி வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் மிருசுவில் தவசிக்குளம் வாசிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா எதிரி இரு குற்றங்களையும் ஒப்புக் கொண்டதையடுத்து 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். (ம-207)

## திருநெல்வேலிச் சந்தை மாடிக் கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ். திருநெல்வேலிச் சந்தையின் மாடிக் கட்டடம் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது என்று நல்லூர் பிரதே சபை தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட திருநெல்வேலிச் சந்தையின் மாடிக் கட்டடம் 85 மில்லியன் ரூபா சபையின் நிதியில் ஒதுக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டது.

**திருநெல்வேலிச் சந்தையின் மாடிக் கட்டடம் 85 மில்லியன் ரூபா சபையின் நிதியில் ஒதுக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டது.**

தற்போது உள்ள மரக்கறி சந்தை கீழேயே இயங்கி வருகிறது. இதனால் மரக்கறிகள் மண், தூசு போன்ற அழுக்குகள் படிக்கின்றன. மழை காலங்களில் சேறு, வெள்ள நீர் போன்றவற்றால் மரக்கறிகள் பழுதடைந்து விடுகின்றன.

இதனால் வியாபாரிகளும் நுகர்வோர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டே சந்தை நடவடிக்கைகள் இரண்டாம் மாடிக்கு மாற்றப்பட்டுள்ளன.

தற்போது சந்தை வியாபார நடவடிக்கையில் உள்ள பகுதியானது, வாகனங்கள் நிறுத்துவதற்குரிய இடமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொக்குவில் குளப்பிட்டிச் சந்தைக்கென புதிதாக இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. இதற்கென 22 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கட்டட நிர்மாணப் பணிகள் இந்த வருடத்துக்குள் பூர்த்தியாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பிரதேச சபைக்கான நூல் நிலையம் புதிய கட்டடம் என்பன விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-313-ரி)

## சுகாதார செயற்பாட்டை மீண்டும் ஆரம்பிக்குக

### எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஜன.28

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவுக்கான ஆரம்ப சுகாதார நிலைய நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியை கேட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் அந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதையடுத்து அங்குள்ள கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மார்களும் மாதாந்த கிளினிக்குகளுக்காக வேறு வேறு இடங்களுக்குச் செல்கின்றனர்.

இந்த நிலையில் இங்கு ஓரிடத்தில் தாய், சேய், கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையத்தை நடத்துமாறு கேட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் இந்தப் பகுதிக்கு நிரந்தர குடும்பநல சேவையாளர் கடமையாற்றிய கர்ப்பிணிகள் மற்றும் தாய்சேய் சிகிச்சைப் பிரிவுகள் மாதாந்தம் இயங்கி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு நகரில் மோப்ப நாயுடன் தேடுதல்




மட்டக்களப்பு,ஜன.28

மட்டக்களப்பு நகரப் பகுதியில் பகல் வேளைகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களை கைதுசெய்யும் முகமாக பொலிஸார் மோப்பநாயுடன் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு நகரப் பகுதியில் பூட்டியிருக்கும் வீடுகளை உடைத்து பகலில் உடைமைகளைச் சூறையாடி வரும் சம்பவங்கள் அண்மைக் காலமாக இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

இந்தநிலையில், பூம்புகார்ப் பகுதியில் பூட்டியிருந்த வீட்டை உடைத்து திருடிய சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமை பகலில் இடம்பெற்றுள்ளது.

இந்த வீட்டில் எவரும் இல்லாத நிலையில் வீட்டின் ஜன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற திருடர்கள், 294, 000 ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 3000 ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கைதுசெய்யும் முகமாகவே மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றப்புலன் விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி த.சாந்தகுமார் தலைமையிலான குழுவினர் மோப்ப நாயுடன் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். மட்டக்களப்பில் எவரும் இல்லாத வீடுகளிலேயே பகல் வேளைகளில் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் அண்மைக் காலமாக இடம்பெற்று வருவதாகத் தெரிவித்த பொலிஸார், வீட்டை விட்டு புறப்படுபவர்கள் அயல் வீட்டாரிடம் தெரிவித்து விட்டுப் போகுமாறும் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். (ச)

## சம்பள முரண்பாட்டைத் தீர்க்க அஹிம்சை வழிப் போராட்டம்

**பல்கலைக்கழக ஊழியர்களின் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தமானது அரசுக்கு எதிரானதல்ல. இது ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்க வேண்டுமென்ற அஹிம்சைவழிப் போராட்டமாகும் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.**

அட்டாளைச்சேனை, ஜன.28

பல்கலைக்கழக ஊழியர்களின் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தமானது அரசுக்கு எதிரானதல்ல. இது ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கவேண்டுமென்ற அஹிம்சைவழிப் போராட்டமாகும்.

- இவ்வாறு தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. அப்துல் ஜெலீல் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் இயங்கி வருகின்ற அனைத்து பல்கலைக்கழகங்களினதும், கல்வி நிறுவனங்களினதும் ஊழியர் சங்க சம்மேளனத்தின் தீர்மானத்தின்படி நேற்று அனைத்து பல்கலைக்கழக ஊழியர்களும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர். இதற்கமைவாக தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிகழ்வில் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலைநிறுத்தத்தால் நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. விரிவுரையாளர்களினதும், மாணவர்களினதும் வரவுகள் குறைவாகவே காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## வாகன விபத்தில் ஐவர் படுகாயம்

மட்டக்களப்பு,ஜன.28

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வீதியால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடக்க முற்பட்ட ஒருவருடன் மோதிய போதே இந்த விபத்துச் சம்பவித்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். இதன் போது வீதியை கடக்க முற்பட்டவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறுமியும் உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ள னர். இந்த விபத்துச் சம் பவம் தொடர்பில் காத்தான் குடி பொலி ஸார் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். (ச)

## கிழக்கு துணைவேந்தர் சிங்களப் பேராசிரியர்?

கொழும்பு,ஜன.28

கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் கடமைகளை ஆற்றுவதற்கு சிங்களவரான பேராசிரியர் நிமால் ரஞ்சித் அத்தநாயக்க உயர்கல்வி அமைச்சரால் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தற்போதைய பதில் துணைவேந்தராக கடமையாற்றும் கே.பிரேம்குமாருக்கு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலையொன்றின் காரணமாக துணைவேந்தர் பதவியிருந்த கலாநிதி என். பத்மநாதன் பதவி விலகினார். இதையடுத்து கலாநிதி கே.பிரேம்குமார் பதில் துணைவேந்தராக கடமையாற்றி வந்துள்ளார்.

புதிய துணைவேந்தர் நியமனம் அடுத்த சில வாரங்களில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையில் இந்த சிங்களப் பேராசிரியர் நியமனம் இடம்பெற்றுள்ளமை தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா கவலை வெளியிட்டுள்ளார். (ச)

# தமிழ்க் கிராமத்தில் பௌத்த விகாரை

### கண்டித்து ஜனாதிபதிக்கு மனு

மட்டக்களப்பு,ஜன.28

மட்டக்களப்பு, கச்சைக்கொடி சுவாமிமலைக் கிராமத்தில் பௌத்த விகாரை அமைக்கும் பணியில் இராணுவத்தினரும் பிக்குமாரும் ஈடுபட்டுள்ளனர். இந்நடவடிக்கையை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது.

இதுகுறித்து ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டம், பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கச்சைக்கொடி சுவாமிமலைக் கிராமத்தில் பௌத்த விகாரையொன்று அமைக்கப்படவுள்ளது என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தமிழ் மக்கள் வசிக்கும் அந்த எல்லைக்கிராமத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற இராணுவத்தினரும், புத்த பிக்குமாரும் விகாரையை அமைப்பதற்கு ஒரு பகுதியைத் தெரிவுசெய்துள்ளனர் என்று அங்குள்ள மக்கள் எமக்குத் தெரிவித்துள்ளனர்.

அங்குசென்ற இராணுவத்தினரும், புத்தபிக்குமாரும் விகாரை அமைக்கப்படவுள்ள பகுதியில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று மக்களிடம் கூறியுள்ளனர்.

இது குறித்து அங்குள்ள மக்கள் எம்மிடம் முறையிட்டுள்ளனர். நான் இதனை பட்டிப்பளை பிரதேச செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்- என்றார் . (ச)

## சிறுத்தை இறைச்சியுடன் ஒருவர் கைது

பொகவந்தலாவை,ஜன.28

பொகவந்தலாவை, சிங்காரவத்தை தோட்டத்தில் 15 கிலோ நிறையுடைய சிறுத்தை இறைச்சியுடன் நடமாடியதாகக் கூறப்படும் சந்தேகநபரொருவரை பொகவந்தலாவை பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்த இறைச்சியை பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கு முயல்வதாக பொகவந்தலாவைப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார், இந்த நபரை கைது செய்துள்ளனர். (ச)

# மேய்ச்சல் நிலங்களை ஆக்கிரமித்தோர் உடனடியாக வெளியேற வேண்டும்

**கால் நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட வட்டமடு மேய்ச்சல் நிலங்களை ஆக்கிரமித்துள்ளவர்கள் உடன் வெளியேற வேண்டும். இதனை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிழக்குமாகாண விவசாய கால்நடை அமைச்சர் தெரிவித்தார்.**

அம்பாறை,ஜன.28

அம்பாறை மாவட்டத்தில் கால் நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட வட்டமடு மேய்ச்சல் நிலங்களை ஆக்கிரமித்தவர்கள் உடன் வெளியேற வேண்டும். இதனை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிழக்கு மாகாண விவசாய கால்நடை அமைச்சர் துரையப்பா நவரெட்ணராஜா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இனம் காணப்பட்டு தீர்மாணிக்கும் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாவட்டத்தின் முக்கியமான தேவை விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு. இவை இரண்டும் விவசாயிகளின் இரு கண்கள் போன்றவை.

விவசாயிகளினுடைய ஜீவனோபாயமாக இரண்டு துறைகளும் இருக்கின்றன.

மஹிந்த சிந்தனையின் கீழ், பால் உற்பத்தியினை அதிகரித்து பால்மா தேவையினை பூர்த்திசெய்யப்பட வேண்டுமென்பது திட்டமாகவுள்ளது. இந்த நாட்டினுடைய உற்பத்தித்துறையிலே இங்கு பல பிரச்சினைகள் காணக்கூடியதாக இருக்கின்றது.

கால்நடையை அபிவிருத்தி செய்ய ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவின் கீழ் உள்ள அரச நிலங்களை இனம்கண்டு மேய்ச்சல் தரைக்காக ஒதுக்குவதன் மூலம் இதற்கான தீர்வு காண முடியும். 1976 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் கால்நடைக்கான மேய்ச்சல் தரைக்காக 4741 ஏக்கர் நிலப் பரப்பு ஒதுக்கப்பட்டது.

இந்த நிலங்களை காணிச் சட்டத்துக்கு முரணான வகையில் 1500 ஏக்கருக்கு மேல் ஆக்கிரமித்து விவசாயம் செய்கின்றனர்.

இந்த நில ஆக்கிரமிப்பு தொடர் பாக 2002 ஆண்டு தொடக்கம் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு வந்ததனால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் இல்லாமல் கால்நடை அபிவிருத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது - என்றார். (ச)

## காத்தான்குடியில் 26 டெங்கு நோயாளர்கள்

மட்டக்களப்பு,ஜன.28

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடிப் பிரதேசத்தில் இதுவரையில் 26 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல். நசிர்தீன் தெரிவித்தார்.

காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள 10 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு பரிசோதனையின்போது 7 பாடசாலைகளில் டெங்கு நுளம்புகளும் டெங்கு நுளம்புக் குடம்பிகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து இந்தப் பாடசாலைகள் சுத்தப்படுத்தப்பட்டு புகை விசிறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

No 15 Sirambiyadi Lane,off Standly Road,Jaffna.(ஆரிய குளத்துச்சந்திக்கு அருகில் cosy hotel மேல்)
T.P.No:- 021 222 8250, 077 722 2422, 077 490 7444

## அதிரடிக் கட்டணக் கழிவு

Diploma in Microsoft Office 1000/= 3 Months
Diploma in Desktop Publishing 1000/= 4 Months
Diploma in Webpage Designing 1000/= 3 Months
Diploma in Graphic Designing 1000/= 3 Months
Diploma in Hardware Engineering 1000/= 3 Months
Diploma in Computerized Accounting 1000/= 3 Months
Diploma in Computer Science 1000/= 4 Months
Hon. Diploma in Computer Science 1000/= 4 Months
Hon. Diploma in Programming 1000/= 4 Months
Diploma in Auto CAD 1000/= 3 Months

Advance Courses
Diploma in Video Editing 4 Months 1000/=
Diploma in Multimedia 4 Months 1000/=

**Batch I** - 29-01-2012-9am or 3pm
**Batch II** - 01-02-2012-9am or 3pm
**Batch III** - 03-02-2012-9am or 3pm
**Batch IV** - 04-02-2012-9am or 3pm

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டதால் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி,அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

மேலும் எமது நிறுவனத்தில்.........
Fast track Courses ஆக
1 Week Course/1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Accounting Package
Diploma in Video Editing
Course Fee 1000/=
Monday to Friday 9am to 3.30 pm

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்...

Tally, Accounting Package புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
New Batch:-Satur day & Sunday 4pm to 5pm


## கஞ்சா வைத்திருந்த பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.28

கஞ்சா வைத்திருந்த பெண்ணை நீதிவான் மா.கணேசராஜா விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

குருநகரைச் சேர்ந்த பிரஸ்தாபப் பெண்ணை யாழ். பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் நேற்று முன்னிலைப் படுத்தினர். அதன் போதே அவரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். சந்தேக நபரான இந்தப் பெண் ஏற்கனே இது போன்ற வழக்குகளில் பலதடவை நீதிமன்றினால் தண்டிக்கப் பட்டிருந்தார் என்பது குறிப்படத்தக்கது. (ஒ-4)

## பிற்போடப்பட்டுள்ளது

*29.01.2012 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த செல்வி பைரவியின்*

பூப்புனித நீராட்டுவிழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

திரு திருமதி ஜெகநாதன் லலிதாம்பிகை (பெற்றோர்), ஜெகன் போட்டோ.

பழைய தபாற்கந்தோர் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## மெய்கண்டான் மாதாவின் கண்ணீர் அஞ்சலி



எமது வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அவர்களின் அன்புத் தாய்

*திருமதி ஆறுமுகம் தங்கம்மா*

அவர்கள் 25.12.2011 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை தினமான இன்று எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தியடைய வழக்கம்பரை முத்துமாரி அம்பாளைப் பிரார்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

பண்ணாகம், சுழிபுரம்.

யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயக் கல்விச் சமுகம்

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு நாகரத்தினம் (நாகம்மா)



பருத்தித்துறை, மாதனையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு நாகரத்தினம் (நாகம்மா) 24.01.2012 அன்று லண்டனில் சிவபதம் எய்தினார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குரும்பத்தினர்.

(12658)(2-6-)

### தேவசகாயம் மகேஸ்வரி



கொக்குவில் மேற்கு, மணியர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் மகேஸ்வரி 25.01.2012 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- பவளம் தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்- தங்கம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தேவசகாயத்தின் மனைவியும் சாந்தினி, நந்தினி, நடனகுமார், பிறேம்குமார், நந்தகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும், சிவராஜா, தர்மதேவா, கோசலா, ரிஷாந்தினி, கிருஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியும், மகாதேவா, இரத்தினசபாபதி, பாக்கியநாதன், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, அசோக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, கனகலிங்கம், பரமேஸ்வரி மற்றும் சத்தியசீலன், மகேஸ்வரன், சகுந்தலாதேவி, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும், நிரோஜன், அர்ஜுன், தக்ஷனி, சர்மிலா, மதுரா, ஆதீனன், ஆதீனா, சங்கமேந்தி, சிவசங்கரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: தே.ஜெயக்குமார் ( மகன்-ஆசிரியர்).

## தலைமைக் குருக்கள் தேவை

கொழும்பு -13, ஸ்ரீ இராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ வீரமஹாகாளி அம்மன் கோயில் பிரதம குருக்கள் நீண்ட கால சேவையின் பின் ஓய்வுபெறுவதால், அந்த இடத்திற்கு தகுதியுடையவரும் ஆகம முறைப்படி சமயநெறி முறைகளுக்கு அமைய பூஜைகள், விழாக்கள் நடத்தக் கூடியவருமான குருக்கள் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு:
ஸ்ரீ வீர மஹாகாளி அம்மன் கோயில்,
36,ஸ்ரீ இராமநாதன் வீதி,
கொழும்பு -13.
தொ.பே.: 011 2431833

## வீடு வாடகைக்குண்டு

நல்லூர் நாவலர் வீதியில் வீடு வாடகைக்குண்டு
தொடர்பு: 077 446 0232

(13529) (6-19-45)

## பங்காளர் தேவை

MMTO நிறுவனத்திற்கு 3ஆம் தரப் பங்காளர் தேவை
தொடர்புகளுக்கு:
077 77 09972
(சந்தைப்படுத்தல் முகாமையாளர்)
Marketing Manager

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 இல் பிறந்த சித்திரை நட்சத் திரம் 2ஆம் பாதம் 12இல் செவ்வாய் 35 கிரகபாவமும் உள்ள கடை உரிமையாளருக்கு உத்தியோகம் உள்ள பெண் தேவை.
தொடர்பு: 077 9532110

(11573) (45-6-19)

## பிறவுன் அன்ட் கம்பனி பிஎல்சீ - PQ 25 வருடாந்த கையிருப்பு கணக்கொடுப்பு பற்றிய அறிவித்தல்

பிறவுண் அன்ட் கம்பனி பிஎல்சீயின் எல்லாப் பிரிவுகளும் விற்பனை நிலையங்களும் பிறவுண் கம்பனிகள் தொகுதியின் பின்வரும் துணை நிலைக் கம்பனிகளும் வருடாந்த கையிருப்புக் கணக்கெடுப்பின் நோக்கத்திற் காக 2012 ஜனவரி 30 ஆம் (திங்கள்), 31ஆம் (செவ்வாய்) ஆகிய தினங்களில் மூடப்பட்டிருக்கும் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

- கிளவன் பேர்க் (பிரைவேட்) லிமிற்டெற்
- பிறவுண்ஸ் குறூப் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிற்டெற்
- பிறவுண்ஸ் தேர்மல் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிற்டெற்
- இன்ஜினியரிங் சேவிஸஸ் (பிரைவேட்) லமிற்டெற்
- பதிவு செய்யப்பட்ட முகவரி: 481, டி.பீ.ஜயா மாவத்தை, கொழும்பு - 10.
- வியாபார நிலையம்: 34, [illegible] கொழும்பு - 03

(சி/7987) (45-6-)

*யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்), 40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம.*

*27.01.2012*

## அறிவித்தல்

### ஓட்டோ உரிமையாளர்களுக்கு

யாழ். மாவட்டத்தில் வாடகைச் சேவையில் ஈடுபடும் சலக ஓட்டோ உரிமையாளர்களுக்கும் எமது சங்கத்தின் மூலம் அங்கத்துவ அடையாள அட்டையும், ஓட்டோக்களுக்கான பிரதேச தரிப்பிட குறியீடுகளும் முதலில் வழங்கி ஓட்டோ சேவையை பயணிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையூறற்ற வகையில் ஒழுங்கமைக்குமாறு வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. இந்திரன் அவர்கள் வழங்கிய ஆலோசனையின் பேரில் சகலருக்கும் முதலில் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. எனவே சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, அச்சுவேலி, வடமராட்சி, தென்மராட்சி கிளை சங்க உறுப்பினர்களும் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுக்கொள்ள முன் வருமாறும், இந்த அறிவித்தல் தங்கள் தொழிலிலைச் சீராக மேற்கொள்வதற்கான அறிவித்தலுமாக கருதுமாறு அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்.

## மரண அறிவித்தல்

### கிறிஸ்தோப் பாக்கியநாதன்



பருத்தித்துறை, வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப் பாக்கியநாதன் நேற்று (27.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்- லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், மொனிக்கம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தேவமலர், ஞானமலர் மற்றும் இராஜகுமார், வனஜா, பிறேமஜெகன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜிதா (கனடா), வினிதா (மன்னார்), அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன் (கனடா), ஜெயசீலன் (இந்தியா), பிரதீபன் (இலங்கை வங்கி - சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனும், தானியா, றெஜின், கிஷானி, கரீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் அருணோதயம், யுகறைசா, வீனையா, ஜேசுதாஸ், கிறிஸ்துராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.01.2012) சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு சாவகச்சேரி புனித லிகோரியர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு, மீசாலை.

தகவல்: செ.பிரதீபன்- (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுத்திட்டம் தொடர்பான பேச்சுக்கு ஈரான் தயார்


ஈரான்,ஜன.28

அணுச்சக்தித் திட்டம் தொடர்பான பேச்சுக்கு ஈரான் தயாராக இருப்பதாக அந்நாட்டு அதிபர் அஹ்மது நிஜாத் அறிவித்துள்ளார்.

ஈரானின் தெற்கு நகரமான கெர்மானில் உள்ள கல்லூரியில் உரை நிகழ்த்தியபோது இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஈரானின் எண்ணெய் வளத்தைக் குறிவைத்தே, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஈரான் மீது தடைகளை விதித்து வருகின்றன. ஈரானின் சராசரி பொதுமக்களையே அவர்கள் இதன்மூலம் நோகடித்துள்ளனர்.

**மேற்குலக நாடுகள் பல பொருளாதார தடைகளை விதித்தன.இதனால் ஈரானின் நாணயப் பெறுமதியிலிருந்து, உள்ளூர் வர்த்தகம் வரை அனைத்தும் பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளன.**



இந்தப் பொருளாதாரத் தடைகள் ஈரானின் அணுச்சக்தித் திட்டத்தை ஒரு போதும் பலமிழக்கச் செய்துவிடாது எனத் தெரிவித்துள்ளார்.

ஈரான் சட்டவிரோதமாக அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகக் கூறி அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் பல பொருளாதாரத் தடைகளை விதித்தன.

இதனால் ஈரானின் நாணயப் பெறுமதியிலிருந்து, உள்ளூர் வர்த்தகம் வரை அனைத்தும் பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளன.

இந்தநிலையிலேயே அணுச்சக்தித் திட்டம் தொடர்பான பேச்சுக்குத் தாம் தயாராக இருப்பதாக மொஹமத் அஹ்மது நிஜாத் அறிவித்துள்ளார். (ந)

# பூமியின் வடமுனையை தாக்கியது சூரியப்புயல்



சூரியனிலிருந்து வெடித்துச் சிதறிய காந்தப்புயல் பூமியை தாக்கும் அபாயம் உள்ளது என்று அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சூரியப்புயல் பூமியை நோக்கிப் பல கோடி மைல் வேகத்தில் வந்து கொண்டிருப்பதாகவும், இது செயற்கை கோள்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும், இதன் மூலம் கணினி, கைபேசி மற்றும் தகவல் தொடர்பு சேவைகள் பாதிக்கப்படும் என்றும் எச்சரித்தனர்.

கதிர்வீச்சு உருவாகிய அன்றைய தினமே பூமியின் காந்த மண்டலத்திற்குள் வந்துவிட்டதாக நாசா விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தினர். அவ்வாறே பூமியின் வடமுனையில் உள்ள அயர்லாந்து, பிரிட்டனின் வட பகுதியான ஸ்கொட்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளை காந்தப் புயல் தாக்கியுள்ளது.

சூரியப் புயல் குறித்து கடந்த 20 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வரும் டாக்டர் பஷ்ஷர், இதனால் வட ஐரோப்பா மற்றும் பிரிட்டனில் உள்ள மின்சக்தி நிலையங்கள் எளிதாகப் பாதிக்கப்பட்டு பல மாதங்கள் மின்சாரம் இல்லாமல் மக்கள் அவதியடையும் சூழ்நிலை ஏற்படலாம். எந்த அளவு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தாலும் பாதிப்பு எப்படி இருக்கும் என்று தெரியாததால் அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை இப்போதே கூற முடியாது -என்றார்.

# கட்டடங்கள் இடிந்து 20 பேர் சாவு

ரியோ டி ஜெனிரோ,ஜன.28

பிரேசிலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து அடுக்குமாடிக் கட்டடங்கள் 2 தரைமட்டமானதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் காணாமல் போன 15 பேர்களும் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பிரேசில் தலைநகர் ரியோ டி ஜெனிரோவில் நகரின் மையப் பகுதியில் 20 மற்றும் 10 அடுக்குமாடிகள் கொண்ட கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் திடீரெனப் பயங்கர சத்தம் கேட்டது.

இதனைடுத்து அடுக்குமாடிக் கட்டத்துடன் அருகில் இருந்து கட்டடம் ஒன்றும் சரிந்து 2 கட்டடங்களும் தரைமட்டமாகின.

இந்த இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதன் போது இடிபாடுகளில் இருந்து 5 பேரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

மேலும், குடியிருப்பில் வசித்த 15 பேரைக் காணாமல் போயுள்ளனர். அவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ந)



இத்தாலி சென்றிருந்த ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீத் ஹர்சாயை (இடது), அந்நாட்டுப் பிரதமர் மொரியோமான்டி, ரோம் நகரில் ராணுவ மரியாதையுடன் வரவேற்றார்.

# ஐ.நா.சபையை விரிவுபடுத்துங்கள்

நியூயார்க்,ஜன.28

ஐ.நா பாதுகாப்பு சபையை விரிவுபடுத்த வேண்டும் என்று இந்தியா, ஜப்பான், பிரேசில் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி-4 அமைப்பு கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜி.4 நாடுகளின் கூட்டமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

பாதுகாப்புச் சபையில் நிரந்தர மற்றும் நிரந்தரமில்லா என்ற இரண்டு பிரிவுகளிலுமே உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்த வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆப்பிரிக்க நாடுகளையும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் உறுப்பு நாடாக இணைத்து விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜி.4 நாடுகளின் தற்போதும் உறுதியாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் ஜி.4 நாடுகளின் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டுக்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (ந)

# ஹிட்லரின் நூலிலிருந்து தகவல் வெளியிடத் தடை

பெர்லின்,ஜன.28

ஜேர்மனியின் முன்னாள் தலைவரான சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லரின் ''மெயின் காம்ப்'' என்ற நூலிலிருந்து சில பகுதிகளை வெளியிடும் திட்டத்துக்கு சட்ட ரீதியாகத் தடை எழுந்துள்ளது.

ஹிட்லருடைய நினைவலைகளைத் தொகுப்பாகக் கொண்ட 'மெயின் காம்ப்'' புத்தகத்திலிருந்து சில பகுதிகளைத் தன்னுடை வாரப் பத்திரிகையில் சிறிது சிறிதாக வெளியிட பீற்றர் மெக் கீ என்பவர் திட்டமிட்டார். ஆனால் ஹிட்லர் பிறந்த மாநில அரசு இந்த நூலின் பதிப்புரிமையை வைத்திருக்கிறது. அது தன்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் இதைப் பதிப்பிக்கக் கூடாது என்று கூறிவிட்டது.

ஹிட்லர் நினைத்தது என்ன? பேசியது என்ன? என்று சொல்வதாலேயே நாசிசம் மீண்டும் வலுப்பெற்றுவிடும் என்று இந்த நூற்றாண்டிலும் அஞ்சப்படுகின்றது. (ந)

# சீனா மீது ஒபாமா குற்றச்சாட்டு

போலியாகத் தயாரிப்புகள் உள்ளிட்ட முறையற்ற வர்த்தகத்தில் சீனா ஈடுபடுவதாக அமெரிக்க அதிபர் ஒபாமா குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றக் கூட்டத்தில் அந்தநாட்டு அதிபர் பராக் ஒபாமா நேற்றுமுன்தினம் உரை நிகழ்த்தியபோதே சீனா மீது இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.அவர் மேலும் தெரிவித்ததாவது;

அமெரிக்காவின் வலிமை குறைந்து வருவதாகச் சிலர் கூறுகின்றனர். இது உண்மையல்ல. உலகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் இன்றியமையாத நாடாக அமெரிக்கா தொடர்ந்து விளங்குகிறது.பொருளாதார நெருக்கடியில் அமெரிக்கா சிக்கியுள்ள நிலையில், நடுத்தர வர்க்க அமெரிக்கர்களைக் கவரும் வகையில், வரிச்சலுகைகளும், சிறப்புத் திட்டங்களும் அறிவிக்கப்படும்.

போலித் தயாரிப்புகள் மூலம் அமெரிக்கச் சந்தையில் சீனப் பொருள்கள் ஊடுருவுகிறது. இதுபோன்ற முறையற்ற வர்த்தகங்களைக் கண்காணித்துத் தடுக்கப் புதிய அமைப்பு உருவாக்கப்படும் என்றார் அமெரிக்க அதிபர் ஒபாமா. (ந)

# பொருளாதார சிக்கலாலேயே அமெ.படைகள் வெளியேறின

பொருளாதாரச் சீர்குலைவு காரணமாகச் செலவுகளை ஈடுகட்ட முடியாமல்தான் ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டதாக, அல்குவைதா தெரிவித்துள்ளது.

குவைத் மீது ஈராக் தாக்குதல் நடத்திய பின் ஏற்பட்ட வளைகுடா போருக்குப் பின் ஈராக்கில் தங்கிய அமெரிக்கப் படைகள் கடந்த ஆண்டு, ஈராக்கிலிருந்து முற்றாக வெளியேறிவிட்டன. ஈராக்கிலும் அல்-குவைதா தீவிரவாதிகள் செயல்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈராக்கிலுள்ள அல்குவைதா அமைப்பின் தகவல் தொடர்பாளர் அபு முகமது அல் அத்னானி அமெரிக்கப்படைகளின் வெளியேற்றம் குறித்து இணையதளத்தில் தெரிவித்ததாவது;

அமெரிக்காவில், பொருளாதாரச் சரிவு ஏற்பட்டதால், ஈராக்கில் முகாமிட்டிருந்த அமெரிக்கப் படைகளுக்கு, செலவு செய்ய முடியவில்லை. இதன் காரணமாகவே, அந்தப் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறின என்றார். (ந)

# மியன்மாருக்கான சிறப்பு ஆலோசகராக நம்பியார்

நியூயோர்க்,ஜன.28



ஐ.நா பொதுச்செயலர் பான் கி மூனின் மியன்மாருக்கான சிறப்பு ஆலோசகராக இந்தியத் தூதர் விஜய் நம்பியார் நியமிக்கப்பட்டுள்ளார்.

விஜய் நம்பியார் 2007 ஆம் ஆண்டில் இருந்து ஐ.நாவுக்கான நிரந்தர பிரதிநிதியாகவும், பான் கி மூனின் தலைமை அலுவலராகவும் இருந்து வருகிறார். இந்த நிலையில் தலைமை அலுவலர் பதவியில் இருந்து விலக நம்பியார் விருப்பம் தெரிவித்திருந்தார்.இந்தநிலையில் அவரை மியன்மாருக்கான தனது சிறப்பு ஆலோசகராக பான் கி மூன் நியமித்துள்ளார்.

இதற்கு முன் பாகிஸ்தான், சீனா, ஆப்கானிஸ்தானுக்கான இந்தியத் தூதராகவும் நம்பியார் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. விரைவில் பான் கி மூன் மியன்மாருக்குப் பயணம் செய்யவுள்ள நிலையில், அந்த நாட்டுக்கான தனது சிறப்பு ஆலோசகராக நம்பியாரை நியமித்துள்ளார். (ந)

# 25 மாடிக் கட்டடத்தில் தீ; சொத்துக்கள் நாசம்

ஷார்ஜா,ஜன.28

ஷார்ஜா நாட்டில் அல் தவுன் பகுதியிலுள்ள 25 மாடிக் கட்டடத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தீவிபத்தில் அங்கி ருந்த 125 குடும்பங்கள் வீடுகள், சொத்துக்களை இழந்துள்ளன. அதிர்ஷ்டவசமாக உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

இந்த விபத்துக் குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் பல மணி நேரப் போராட்டத்துக்குப்பின் தீயை அணைத்தனர்

அதிகாலை ஏற்பட்ட தீ சீதோஷ்ன நிலை காரணமாகவும், காற்று காரணமாக [illegible] ஷார்ஜா தீயணைப்பு துறைத் தலைவர் ஜெனரல் பிரிகேடியர் அப்துல்லாஹ் சயீத் அல் சுவைதி தெரிவித்தார்.



தீயினால் பாதிக்கப்பட்டு [illegible] குடும்பங்கள் [illegible]ங்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஷார்ஜா சாரிட்டியின் மேலாளர் சாலேஹ் அல் ஷ வைஹி தங்களின் 24 தன்னார்வத் தொண்டர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாகவும், குடும்பத்தின் அளவைப் பொறுத்து நிதியுதவி செய்வதாகவும், அவர்களுக்கு இன்னும் ஓரிரு நாளில் அவர்களை வேறு வீடுகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிரிழையில் தப்பினார் ஆஸி. பிரதமர் ஜூலியா

கன்பரா ,ஜன.28

ஆஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் உள்ள ஹோட்டலில் வைத்து பழங்குடியினரின் முற்றுகையில் சிக்கிய பிரதமர் ஜூலியா கிலார்ட் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.



பிரதமர் கிலார்ட் வெளியே வந்தவேளை போராட்டக் காரர்கள் சிலர் இவர் மீது பாய்ந்தனர்.

ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலார்ட் அங்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசிய தினக் கொண்டாடத்தில் கலந்துகொள்ள வருகை தந்திருந்தார்.தலைநகர் கன்பராவின் ஒரு ஹோட்டலில் விருதுகள்வழங்கும் விழா நடைபெற்றது. இதன்போது அவர்கள் இருந்த அறையை திடீரென 200க்கு மேற்பட்ட பழங்குடியின போராட்டக்காரர்கள் சுற்றி வளைத்துத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

கிலார்ட்டை எதிர்த்து பழங்குடியினர் இனவெறியர்கள் எனக் கோஷம் எழுப்பிய பின்னரே மக்களின் போராட்டம் புரிந்தது. நடப்பதை அறிய பிரதமர் கிலார்ட் வெளியே வந்தவேளை போராட்டக்காரர்கள் சிலர் இவர் மீது பாய்ந்தனர். இதில் பிரதமர் தாக்கப்பட்டதாகச் சில தகவல்கள் தெரிவித்தன.

ஆனால், வெளியே சத்தம் கேட்டதும் மீட்புப் படையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு அவர்கள் மூலம் கிலார்ட், அபாட் இருவரும் காரில் ஏற்றி அனுப்பப்பட்டனர். கூட்டத்தில் இருந்து மீட்கப்படும்போது ஒரு காலணியை பிரதமர் கிலார்ட் தவற விட்டார். காரில் ஏறும் வரை பலர் அவரை துரத்திச் சென்று கோஷமிட்டனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் ஆஸ்திரேலியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆஸ்திரேலியாவில் பழங்குடியின மக்களின் நில உரிமைக்கு 1972இல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. எனினும் பல்வேறு கோரிக்கைகளுக்காக அவர்கள் போராடி வருகின்றனர். இதனால், அரசு பழங்குடியினர் இடையே பிரச்சினை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கீதைக்கு வந்த சோதனை

## கிறிஸ்தவ தேவாலய நிர்வாகிகள் ஆவேசம்

மொஸ்கோ,ஜன.28



சமூக அமைப்பில் பிரிவினையைத் தூண்டும் வகையில் இஸ்கான் அமைப்பால் வெளியிடப்பட்ட பகவத் கீதையை ரஷ்யாவில் தடை செய்யாமல் ஓயப் போவதில்லை என்று கிறிஸ்தவ ஆர்த்தோடாக்ஸ் தேவாலய அமைப்பைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவின் டோம்ஸ்க் நகரில் பகவத்கீதைக்குத் தடைவிதிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இருப்பினும் அதே நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய கடந்த புதன்கிழமை வரை அனுமதியும் அளித்திருந்தது.

இந்தநிலையில் டோம்ஸ்க் நீதிமன்றத்தைவிட மேன் நீதிமன்றத்தில் முறையீடு செய்து பகவதக் கீதைக்குத் தடை வாங்கியே தீருவோம் என்று கிறிஸ்தவ தேவாலய நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

பகவத் கீதைக்கு தடையா? எனப் பொங்கியெழுந்த இந்து அமைப்பினரின் வேண்டுகோளை ஏற்று வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, ரஷ்யாவுக்குக் கடும் நெருக்கடி கொடுத்து சாதகமான தீர்ப்பைப் பெற்றுத் தந்தார். எனினும் பிரச்சினை முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை.

# நேட்டோ வாகனம் மீது ஆப்கனில் தாக்குதல்

காபூல்,,ஜன.28

ஆப்கானிஸ்தானில் நேட்டோ வாகனத்தை குறி வைத்து நடந்தப்பட்ட தாக்குதலில், நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மாண்ட் மாகாணத்தில் அமைதிப் பணியில் ஈடுபட்டுள்ள நேட்டோ படையினருக்கு உதவிப் பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் நான்கு பேர் உடல் சிதறிப் பலியாகினர். 31 பேர் படுகாயமடைந்துள்ளனர். கல்வித்துறை அலுவலகம் அருகே நடந்த இந்தத் தாக்குதல் குறித்து, ஆப்கன் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரபு லீக்கின் பிரதிநிதிகள் குழுவுக்கு சிரியா அனுமதி

சிரியாவின் நிலைமை குறித்து அரபு லீக் பிரதிநிதிகள் குழு ஒரு மாதம் தங்கி பார்வையிடுவதற்கு அந்த நாடு அனுமதி அளித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் வலுத்துவரும் நிலையில், தனக்கு எதிரான மக்கள் ஆர்ப்பாட்டங்களை இராணுவம் மூலம் அசுத் அடக்கி வருகிறார்.

இந்தநிலையில் கடந்தாண்டு டிசம்பர் மாதம் இறுதி தொடங்கி அரபு லீக்கின் 165 பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று சிரியாவில் நிலவரத்தை நேரில் பார்வையிட்டு வருகிறது. எனினும் அரபு லீக்கால் சிரிய அரசின் வன்முறை போக்கைத் தடுக்க இயலவில்லை. அத்துடன் வெளிநாடுகளின் சதிக்கு அரபு நாடுகள் சில பலியாகிவிட்டதாகவும் குற்றம் சாட்டியது. இதையடுத்து சிரியாவில் பார்வையிட்டு வந்த அரபு லீக் பிரதிநிதிகள் குழுவில் இருந்து, வளைகுடா கூட்டுறவு நாடுகளான சவூதி அரேபியா, பஹ்ரைன், குவைத், ஓமான், கட்டார் மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் ஆகிய ஆறும், தங்கள் பிரதிநிதிகள் 55 பேரை திரும்பி அழைத்துக் கொண்டன.

இந்த நிலையில் அரபு லீக் பிரதிநிதிகள் குழு மேலும் ஒரு மாதம் தங்கியிருந்து சிரியாவில் நிலவரத்தைப் பார்வையிட வேண்டும் என்ற அரபு லீகின் தீர்மானத்துக்கு சிரியா அனுமதி அளித்துள்ளது. அதன்படி அடுத்த மாதம் 23ஆம் திகதி அந்தக் குழு சிரியாவில் தங்கிப் பார்வையிடத் தீர்மானித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் பிரச்சினைக்கு மக்கள் அணி திரளவேண்டும்

## இந்திய கம்யூ. தலைவர் தெரிவிப்பு

சென்னை,ஜன.28

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினையில் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப் பாட்டுக்குழுத் தலைவர் நல்லக்கண்ணு தெரிவித்தார்.

இதுகுறித்து கோவையில் அவர் தெரிவித்ததாவது:

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, முன்னாள் இந்திய ஜனாதிபதிஅப்துல் கலாம் ஆகியோர் இலங்கையில் பேச்சு நடத்தி வந்த பின்னரும் தமிழக மீனவர்கள் சிறைப் பிடிக் கப்படுகின்றனர். ராஜபக்ஷவிடம் இந்திய உரிமைகள் விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினையில் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராட வேண்டும். முல்லைப் பெரியாறு விவகாரத்தில் நியாயமான தீர்ப்பை வழங்க மத்திய



அரசு தயக் கம் காட்டுகிறது. கூடங் குளம் விவகாரத்தில் மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டியது அரசின் கடமை - என்றார். (வ)

## தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஒரிசா பந்துகான் பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒரிசா மாநிலம், கோராபுட் மாவட்டம், பந்துகான் பகுதியில் மாவோயிட்ஸ் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகப் பொலிஸாருக்குத் ரகசிய தகவல் கிடைத்தது. உடனே பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதியை முற்றுகையிட்டு தீவிரவாதிகளைத் தேடினர். அப்போது இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்த மோதலில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் பெண் தீவிரவாதி என்று தெரிவிக்கப்படுகின்றது.

# 15,000 பேர் கூடி தேசிய கீதம் இசைத்து உலக சாதனை



இந்தியாவின் அவுரங்காபாத் நகரத்தில் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் ஒன்றாக தேசிய கீதத்தை இசைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

மஹாராஷ்டிரா மாநிலம் அவுரங்காபாத்தில் உள்ள ஒரு மைதானத்தில் 15 ஆயிரத்து243 பேர் கூடி தேசிய கீதம் இசைத்து உலக சாதனை படைத்துள்ளனர்.

ஒரு மைதானத்தில் ஒன்றாகக் கூடி ஒரே நேரத்தில் அதிகமானவர்கள் தேசிய கீதம் இசைத்த நிகழ்வு என்னும் வகையில் இந்த கின்னஸ் உலக சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இதற்கு முன்னர் பாகிஸ்தானில் 5800 பேர் கூடி இத்தகைய சாதனையை நிகழ்த்தினர் என்று இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்கள் தெரிவித்தனர்.

கின்னஸ் உலக சாதனை அமைப்பின் தலைமை கண்காணிப்பாளர் ஆண்டிரியா பான்ஃபி இதற்காக லண்டனில் இருந்து இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். அவரிடமிருந்து உலக சாதனைக்கான சான்றிதழை உள்ளூர் மக்களின் சார்பாக மாநிலங்களவை உறுப்பினர் விஜய் தர்தா பெற்றுக் கொண்டார். (வ)

## கடையில் தீ 5 கோடி ரூபா புத்தகங்கள் தீக்கிரை

தமிழ்நாட்டில் சென்னை அண்ணா வீதியில் அமைந்துள்ள புத்தகக் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ரூ.5 கோடி மதிப்புள்ள புத்தகங்கள் எரிந்து நாசமாகின.

சென்னை அண்ணா வீதியில் ஸ்பென்சர் நிறுத்தம் எதிரே அகர்சந்த் மேன்சன் என்ற கட்டடத்தில் 100 இற்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன.

முதலாவது மாடியில் எஸ்.சாந்த் என்ற பெயரில் புத்தகக்கடை உள்ளது. இந்த புத்தகக்கடையில் நேற்று முன்தினம் முற்பகல் 10.15 மணிக்கு திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது.

இதையடுத்து கடையிலிருந்த ஊழியர்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியில் ஓடினர். இது குறித்து தீயணைப்புத்துறைக்குத் தகவல் கொடுத்தனர்.

தீயணைப்புத் துறையினர் 10 வண்டிகளில் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இந்த தீ விபத்தில் சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் எரிந்து தீக்கிரையாகியதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (வ)




இந்திய கடலோரக் காவல்படையுடன் மேற்கொள்ளவுள்ள கூட்டுப் பயிற்சிக்காக சென்னை துறைமுகத்தை வந்தடைந்த ஜப்பான் கடலோர காவல் படை கப்பல் 'சிட்சு' .

## பட்ஜெட் மார்ச்சில் தாக்கல்

மத்திய பட்ஜெட் எதிர் வரும் மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமைச்சரவை கூட்டம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என்று குறிப்பிட்ட அவர் ஆனால் மத்திய பட்ஜெட் கூட்டத்தொடர் எப்போது நடத்தப்படும் என்பது குறித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அநேகமாக மார்ச் 9 ஆம் திகதிக்கு பின்பு ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார் என்றும் அதன் பின்பு பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரி வித்தார்.

மேலும் வெளிநாடுகளில் கறுப்பு பணம் வைத்திருப்போர் தொடர்பான விசாரணை குறித்து பத்திரிகையாளர்களின் கேள்விக்கு, இதன் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று பதிலளித்தார்.

# தமிழகத்துடன் சுமுகமாக செல்ல கேரளா விருப்பம்

முல்லைப் பெரியாறு பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க கேரளா விரும்புகிறது என்று கேரள முதல்வர் உம்மண் சாண்டி தெரிவித்தார்.

சென்னைக்கு பயணம் மேற்கொண்ட கேரள முதல்வர் உம்மன் சாண்டி பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு விவகாரத்தில் தமிழகத்துக்கு தண்ணீர், கேரளாவுக்கு பாதுகாப்பு முக்கியம் என்பதை கேரளா விட்டுக்கொடுக்காது.

மேலும் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையை சுமுகமாக தீர்க்க கேரளா விரும்புகிறது. தமிழகத்துடனும் சுமுகமாக உறவு நீடிப்பதை கேரளா விரும்புகிறது.

அணைப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்படுவதால் கேரள மக்கள் அச்சமடைந்துள்ளனர் என்று தெரிவித்தனர் - என்றார்.

முல்லைப்பெரியாறு அணை பலவீனமாக இருப்பதாகவும் அதனால் புதிய அணையைக் கட்ட வேண்டும் என்று கேரளா கூறிவருகிறது.

ஆனால் பெரியாறு அணை பாதுகாப்புடன் உள்ளது. தமிழகத்துக்குத் தேவையான அளவுக்கு தண்ணீரை அணைப் பகுதியில் உயர்த்த வேண்டும் என்று தமிழகம் தெரிவிக்கின்றது. (வ)


# உயிரைப் பறித்த சாகச நிகழ்வு

ஊட்டி, ஜன.28

இந்தியக் குடியரசு தின விழாவில் சாகசத்தில் ஈடுபட்ட பொலிஸ் கொன்ஸ்டபிள் தடுமாறி விழுந்ததில் கழுத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டு மரணமடைந்தார்.

குடியரசுதினத்தையொட்டி, நீலகிரி மாவட்டம் ஊட்டி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட மைதானத்தில் நேற்று முன்தினம் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாவட்ட ஆட்சியாளர் அர்ச்சனா பட்நாயக் தேசிய கொடியேற்றினார். தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

நிகழ்ச்சியின் இறுதியாக பிற்பகல் 12.30 மணிக்குகு நீலகிரி மாவட்ட ஆயுதப் படை காவலர் பாண்டியன் (வயது 30), ஜிம்னாஸ்டிக் சாகசங்களை நிகழ்த்தினார். முதலாவது நிகழ்ச்சியாக மோ.சைக்கிளில் ஆசனத்தில் அமராமல் ஒரு கையில் ஹேண்ட் பாரை பிடித்தபடி சல்யுட் அடித்தவாறே மைதானத்தை வலம் வந்தார். தொடர்ந்து பைக்கில் நின்றவாறே சல்யூட் அடித்து மெய்சிலிர்க்க



வைத்தார். பின் கராத்தே, ஜிம்னாஸ்டிக் சாகசங்களை நடத்தினார்.

முதலில் 5 பேரை படுக்க வைத்து பறந்து தாண்டினார். அடுத்து 7 பேர், 9 பேர் என இறுதியாக 13 பேரை படுக்க வைத்துத் தாண்டும் ஜிம்னாஸ்டிக் சாகச நிகழ்ச்சியில் ஈடுபட்டார். தாண்டி கீழே விழும்போது உடம்பில் அடிபடாமல் இருப்பதற்கு மெத்தை விரிக்கப் பட்டிருந்தது. அந்தரத்தில் பறந்தபோது பாண்டியன் பாய்ந்து சென்று தாண்டி கரணம் அடித்தபோது, மெத்தையை ஒட்டி படுத்திருந்த போலிஸ் மீது இவரது கைகள் பட்டது. மெத்தை லேசாக விலகியதில் இவரது கழுத்து தரையில் பட்டு மடங்கி அம்மா என்று சத்தம் போட்டவாறே சாய்ந்தார்.

உடனடியாக அவரை அம்புலன்ஸ் மூலம் ஊட்டி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் கழுத்து எலும்பு முறிந்து மூளைக்குச் செல்லும் ரத்த நாளம் சேதமடைந்ததால் வழியிலேயே உயிரிழந்ததாகத் தெரிவித்தனர். (வ)

# ஈழத் தமிழர்களின் பிரச்சினை: தீர்வுகாண்பதில் அரசு உறுதி

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது என்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.



இந்தியாவின் 63ஆவது குடியரசு தினவிழா தமிழ்நாடு காங்கிரஸ் குழு அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. மாநிலத் தலைவர் ஞானதேசிகன் தேசியக் கொடியை ஏற்றி, சேவாதள தொண்டர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் ஞானதேசிகன் தெரிவித்ததாவது:

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது. அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா பல்வேறு நலத் திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளார்.

தமிழர்களுக்கு அரசியல் உரிமை கிடைக்கும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்த எஸ்.எம். கிருஷ்ணாவிடம் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதி அளித்துள்ளார். அதனைக் கண்காணித்து நிறைவேற்ற மத்திய அரசை தமிழக காங்கிரஸ் வலியுறுத்தும்

காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் கொடியேற்றும் திட்டம் செயற்படுத்தப்படும் - என்றார், (வ)

## கூடங்குளம் போராட்டத்துக்கு வெளிநாட்டுப் பணம்

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையத்துக்கு எதிராகப் போராடி வந்தவர்களுக்கு வெளிநாட்டு பணம் வந்ததாக இந்திய அரசு தெரிவித்தது.

அந்தப் பகுதியில் செயற்படும் 6 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீது சந்தேகம் ஏற்பட்டு, உள்துறை அமைச்சகம் நடத்திய விசாரணைகளிலேயே இது தெரியவந்தது என்று பிரதமர் அலுவலகத்தின் துணை அமைச்சர் வி. நாராயணசாமி பி.பி.சி. தமிழோசைக்குத் தெரிவித்தார்.

குறிப்பாக தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் இவான் அம்புரோஸுக்கும், போராட்டக்குழுவுக்கு தலைமையேற்றுள்ள உதயகுமாருக்கும் வெளிநாட்டிலிருந்து நிதி வந்துள்ளதாக கண்டறியப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி



## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாளுக்கு

முப்பத்தி மூன்று குண்ட புனராவர்த்தன அஸ்டபந்தன
மகா கும்பாபிசேகமும் அதி சுந்தர நவதள
நவகலச 108 அடி இராஜகோபுர
கும்பாபிசேகமும் சிறப்புற

# வாழ்த்துகின்றோம்

29.01.2012

**அம்பிகையே போற்றி! ஆரணியே போற்றி போற்றி**

இந்துமா கடலில் இலங்கிடும் தீவு ஏழுள்
நயினை நாயகியே கோவில் கொண்டாள்
அந்தமில்லாத கோடி ஆண்டுகள் முன்னே
அறுபத்தி நான்கு சக்தி பீடமாய்
இந்திரன் அமைக்க இயற்றலை நாகம் காக்க
வந்தலை போதும் மண்ணில் வரங்கள் நல்கும்
சிந்துபுராதனியை தோழு தேத்திட சக்திப் பேறு
தந்து காத்திடும் நவதளசக்தியே போற்றி போற்றி

அலைகடல் தாண்டி படகில் அன்னையின் கரையை சேர
வேப்பிலை வேத மந்திர மணி ஒலிகள் கேட்ப
சிலை வடிவாகத் தோன்றும் சிற்பங்கள் கதைகள் சொல்லும்
கலைமகள் சக்திதாயை மறைத்துமுன் நந்தி நிற்கும்
கலை வடிவான அன்னை கருவறை தன்னில் நிற்பாள்
கருத்தலை நாகம் காத்திடபேறு ஏற்கும்
மலைமகள் நயினை தாயை வேண்டியே நிற்கும் அன்பர்
குறைகளைப் போக்கும் பூரணி முதலே போற்றி போற்றி

குண்டலி சக்தி கோமம் குவலயம் முழுதும் செல்ல
குண்டங்கள் முப்பத்தி மூன்றின் யாகம்
பண்ணொடு வேத விற்பன்னர் பகிர்ந்திடும் மந்திரங்கள்
அன்னையின் பாதம் செல்ல
அண்டங்கள் சக்தி பீடம் அறுபத்தி நான்கின் காட்சி
மாட்சியாய் அகிலம் முழுதுமாய் பரவி நிற்க
விண் ஏழு கோபுரத்தின் வியப்புறும் மாட்சி - சகஸ்ரநாமம்
நூற்றி எட்டினை ஒலிக்க போற்றி போற்றி

ஆதியில் நாகம் பூவை அம்பிகை பாதம் இட்டு
அன்று புண்ணியம் சேர்த்து நின்றிடவே
பாதி வழிவந்த மணிமேகலையும் மணிபல்லவத் தீவை ஏற்க
அட்சய பாத்திரமும் ஆபுத்திரன் விட்டுசெல்ல
போதி மாதவத்தின் புத்தர் யேசு நபி நல்ல சேதியை சொல்ல
சர்வம த சந்நிதி ஏற்கும் சக்தி தாயே
நீதியில்லா மக்களெல்லாம் நிறைவு பெற்று
நித்திலத்தில் வாழவைக்கும் தாயே போற்றி போற்றி

அன்னையே போற்றி நயினை நாயகியே போற்றி
அகிலம் காக்கும் ஈஸ்வரியே போற்றி போற்றி
பின்னையே பரமன் மகளே கீர்த்தனம் அருள்வாய் போற்றி
பாரினில் அனைத்தும் பகரும் பராசக்தியே போற்றி போற்றி
முன்னையே மூல சக்தியே போற்றி - என்றும்
கன்னியே காம யோகினி போற்றி போற்றி
உன்னையே தாயென்றுலகுக்கு அளித்தனை போற்றி
உலகமெல்லாம் அருள் பரப்பும் சக்தியே போற்றி போற்றி

(13589)(2-6-19)

இராமச்சந்திர மகிபன் ஆண் வழித்தோன்றல்
**நயினை நடராசா ஜெயசிதாசன் B.Com Dip - in Edu.**
கனடிய திருமண பதிவாளரும் கல்வி ஆலோசகரும், கனடா.

---

கலா பூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவனும்
இணுவில கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர்சபையின் பல்கலை மாணவனுமான
**செல்வன் பரமேஸ்வரன் கௌரீசன் அவர்களின்**

## மிருதங்க இசை அரங்கேற்றம்



காலம் :
29-01-2012
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00மணி

இடம் :
இணுவில்
கந்தசுவாமி கோவில்
இளந்தொண்டர் சபை
கலையரங்கு

கலை உள்ளங்கொண்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தங்கள் நல்வரவை இனிதே நாடும் ந. பரமேஸ்வரன் வானதி குடும்பம்.

---



## யஜ்ஞோபவீத தாரண பிரம்மோபதேச அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்கலகரமான ஹர வருஷம்
உத்தராயண காலம் தைத்திங்கள் 15 ஆம் நாள்
(29.01.2012) ஞாயிற்றுக்கிழமை ரேவதி நட்சத்திரமும் ஷஷ்டி திதி
யும் அமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில்
பகல் 09.30 மணிமுதல் 11.40 மணிவரையுள்ள மீனலக்கின சுப
முகூர்த்த வேளையில்
கௌண்டின்ய கோத்திரம்
**பிரம்மஸ்ரீ. குகநேசசர்மா** தம்பதியரின் பௌத்திரனும்
பாரத்வாஜ கோத்திரம்
**பிரம்மஸ்ரீ. பாலகுருசாமி சர்மா** தம்பதியரின் தௌஹித்திரனும்
எமது கனிஷ்ட குமாரனுமாகிய

**சிரஞ்சீவி ச.ஜீவகன் சர்மாவுக்கு**

தொல்புரம் துரையன் வளவு பிள்ளையார், காரைநகர் திக்கரை முருகமூர்த்தி, பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி, கம்பனை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் திருவருளுடன் சுழிபுரம் பறாளாய் ஆலய மண்டபத்தில் யஜ்ஞோபவீத தாரணப் பிரம்மோபதேசம் நிகழ்த்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்பசகிதம் வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்மோபதேச குரு
**கிரியா ரத்னா, கலாஜோதி, வாத்திய விசாரத்**
(ஆவரங்கால்)
**பிரம்மஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சாரியார்** (M.phil)
(மிருதங்கப் பேராசிரியர், லண்டன்)

**தங்கள் நல்வரவை நாடும்**


ஸ்ரீ.சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
பறாளாய், சுழிபுரம்
தொ.பே.இல. 0213216717, 0776515605

பிரம்மஸ்ரீ.கு.சற்குணராஜசர்மா
ஸ்ரீமதி ச.கிருபாகரி தம்பதிகள்

(13590) (2-6-19)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (28-01-2012) சனிக்கிழமை சென்னை லொயோலா கல்லூரியில் நடைபெறும் 84 ஆவது பட்டமளிப்பு விழாவில் ஊடகக் கலைகள் துறையில் முதுமாணிப் பட்டப்படிப்பை நிறைவு செய்து முதன்மை மாணவர் விருதையும், தங்கப்பதக்கத்தையும் பெறும் ஆனையூர் முதற்குருவும், பாதுகாவலன் ஆசிரியரும், பத்திரிசியார் கல்லூரியின் நிதிமுகாமையாளருமாகிய

அருட்பணி.

## எஸ். எயின்சிலி றொஷான்

அடிகளார்

அவர்களை வாழ்த்தி மகிழ்வதுடன் ஊடகத்துறையிலும், கல்வித்துறையிலும் அவர் பணி சிறக்க நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றோம்.

**ஆனையூர் புனித அடைக்கல
நாயகி ஆலயத் திருச்சபை.**

(C)8240) (6.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவேந்திராவுக்கு மற்றொரு முக்கியமான பொறுப்பு

ஐ.நா அமைதி நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய பொறுப்பு ஒன்றில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்

கொழும்பு,ஜன.28

ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும், போர்க் குற்றங்களை இழைத்ததாக அனைத்துலக மனித உரிமை அமைப்புகளால் குற்றம் சாட்டப்படுபவருமான சவேந்திர சில்வா, ஐ.நா அமைதி நடவடிக்கைகளுக்கான சிறப்பு ஆலோசனைக் குழுவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆசிய பசுபிக் நாடுகள் குழுவின் சார்பிலேயே இவர் இந்த ஆலோசனைக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.நா அமைதிகாப்புப் படையின் நடவடிக்கைகள் தொடர்பான விவகாரங்களைக் கவனிக்கும் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் உயர்மட்டத் தூதர்கள் மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்களுடன் இணைந்து இவர் பணியாற்றவுள்ளார்.

இந்த ஆலோசனைக் குழுவுக்கு ஐ.நாவின் முன்னாள் பிரதிச்செயலர் லூயிஸ் பிரெசிரே, ஐ.நா அமைதிப் படை நடவடிக்கைகளுக்கான கீழ்நிலைச் செயலர் ஜீன் மேரி குகேனோ ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.நா அமைதிகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய பொறுப்பு ஒன்றில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

அம்பாறை, ஜன.28

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், தகைமை பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை மீண்டும் இந்த வருடம் முதல் நடைமுறைப் படுத்தவுள்ளது.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையிலும், பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையிலும் தகைமை பெறும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக சங்கத் தலைவர் எம். அனஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

தகைமைபெற்ற இலங்கை இஸ்லாமிய ஆசிரியர்சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் திட்டம், முன்னாள் உயர் கல்வி அமைச்சர் மர்ஹூம் ஏ.சீ.எஸ்.ஹமீத் அவர்களினால் 1992ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்காக அவர் ஒரு லட்சம் ரூபாவினையும் அன்பளிப்புச் செய்திருந்ததுடன், சங்கம் இந்த நிதியைக்கொண்டு புலமைப் பரிசில் நிதியம் ஒன்றினையும் ஆரம்பித்திருந்தது.

அங்கத்தவர்களின் பல்கலைக்கழக கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு மாத்திரம் புலமைப் பரிசில் வழங்கவென அதன் மூல கர்த்தாவான மர்ஹூம் ஏ.சீ.எஸ். ஹமீதினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்திட்டம் நிதி நிலைமை காரணமாக சில காலம் தடைப்பட்டிருந்தது.

தற்சமயம் இப்புலமைப் பரிசில் திட்டம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தகைமை பெற்று, பாடசாலைக் கல்வி பயிலும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் புலமைப் பரிசில் வழங்கும் திட்டமாக விரிவாக்கம்பெற்று மீண்டும் இந்த வருடம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

(ச-30)

## பொன்சேகாவால் மேன்முறையீட்டு மனு

கொழும்பு,ஜன.28

இரண்டாவது இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதிக்கு இரண்டாவது இராணுவ நீதிமன்றம் விதித்த 30 மாத சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நியாயமான முறையில் விசாரிக்கப்படவில்லை.

மனுவை விசாரணை செய்வதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிக காலத்தை எடுத்துக் கொண்டதாகவும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சித்திரைப் புத்தாண்டுக்கான கொடுப்பனவை அதிகரிக்குக

கொழும்பு,ஜன.28

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வழங்கப்படும் பண்டிகைக்கான விசேட கொடுப்பனவு பத்தாயிரம் ரூபா வரையில் அதிகரிக்கும் படி கல்விசாரா ஊழியர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு செய்யப்படும் முன் ஏற்பாடுகளுக்கான செலவு அதிகரித்துள்ளது. அதனை ஈடு செய்யும் வகையில் பண்டிகைக்கான கொடுப்பனவை அதிகரிக்கும் படி ஜனாதிபதி க்கு மனு அனுப்பியுள்ளதாக இந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் இடம்பெற்ற போர் நிறைவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தநிலையில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் உரியவகையில் வழங்க வேண்டியது அரசின் கடமை என்பதை தாம் மனுவில் சுட்டிக் காட்டியுள்ளதாக கல்விசாரா ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

## களியாட்ட விடுதி சுற்றி வளைப்பு

கொழும்பு,ஜன.28

தலவத்துகொட தலங்கம பிரதேசத்தில், முன்னாள் உயர் பொலிஸ் உத்தியோகத்தரினால் நடத்தப்பட்டு வந்த கரோக்கே களியாட்ட விடுதி ஒன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இந்த களியாட்ட விடுதியில் அநாகரிகமான முறையில் நடந்துகொண்ட 13 பெண்களையும், 10 ஆண்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பணி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இந்த கரோக்கே களியாட்ட விடுதியை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட பெண்களை எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு கடுவெல நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் ஆதரவின் அடிப்படையில் இந்த கரோக்கே களியாட்ட விடுதி இயங்கி வந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)



கொழும்பு 02, கொம்பனித் தெருவிலுள்ள பாதுகாப்பு சேவைகள் பாடசாலையின் புதிய கட்டடத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்துவைத்தார். இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## இவர்களுக்கும் மரண தண்டனை

கொழும்பு,ஜன.28

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான உத்தேச சட்டத் திருத்தம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம்,வன்புணர்வு ஆகியவற்றில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இந்த மரண தண்டனை வழங்குவதை பரிந்துரை செய்துள்ளது. கடந்த ஆண்டில் அதிகளவான சிறுவர் துஷ்பிரயோகம், வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எதிர்வரும் காலங்களில் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுவோருக்கு பிணை வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# அதிகாரம் ஏதும் இல்லாத மாகாண சபை எதற்கு?

அம்பாறை,ஜன.28

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு ஒன்று வழங்கப்படும் வரை வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவது பொருத்தமானதல்ல. கிழக்கு மாகாணசபைக்கு ஏற்பட்டுள்ள கதி வடமாகாணசபைக்கும் ஏற்பட்டு விடக்கூடாது.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் எஸ்.லோகநாதன் தெவித்தார்.

அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் அதி உயர்பீடக் கூட்டம் கல்முனை சணச மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதி நிதிகளைக்கொண்ட மாகாண சபையில் எடுக்கப் படும் தீர்மானங்கள், நடவடிக்கைகளையே ஆளுநர் கட்டுப்படுத்தும் நிலைமையே அங்குள்ளன. இந்த நிலையில் அதிகாரமில்லாத மாகாண சபை தேவைதானா? என்று அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:

கிழக்கு மாகாண சபை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபையாக உள்ளபோதிலும் அந்தச்சபை அதிகாரமில்லாத ஒரு சபையாகவே உள்ளது.

அங்கு கிழக்கு மாகாண சபை ஆளுநரின் கைகளிலேயே அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட மாகாண சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடவடிக்கைகளையே ஆளுநர் கட்டுப்படுத்தும் நிலைமையே அங்குள்ளன. இந்த நிலையில் அதிகாரமில்லாத மாகாண சபை தேன்வதானா? எனக் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

எனவேதான் வட மாகாண சபைக்கான தேர்தல் இந்த நிலையில் நடை பெறுவது பொருத்தமானதல்ல. ஆளுநரால் கட்டுப்படுத்தும் நிலையிலுள்ள கிழக்கு மாகாண சபையின் கதி வடமாகாண சபைக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது-என்றார். (ச-30)

## மகஸின் சிறை தாக்குதல்: அதிகாரிகளுக்கும் தொடர்பு

கொழும்பு,ஜன.28

மகசின் சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் உயர் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு சிறைச்சாலை உயரதிகாரிகளும், எட்டு போதைப் பொருள் வர்த்தகர்களும் கூட்டாக இணைந்து இந்தத் தாக்குதல் சம்பவத்திற்குத் திட்டமிட்டுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் கூட் டாக இணைந்து நடத்திய விசாரணைகளின் மூலம் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.புதிய மகசின் சிறைச்சாலையின் பொறுப்பதிகாரியாக எமில் ரஞ்சன் நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து கப்பம் கோரல் மற்றும் போதைப் பொருள் வர்த்தக நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளன.

இதற்குத் தீர்வாக, சிறைச்சாலை பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்யும் நோக்கில் மகஸின் சிறைச்சாலையில் கலவரம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### Vacancies – Faculty of Arts

University of Jaffna will entertain applications up to **10th February 2012** from suitably qualified persons for the under mentioned posts **on contract basis.**

**Assistant Lecturer / Tutor**

Archaeology / Christian Civilization / Drama & Theatre Arts / Economics / Education / English Literature / Fine Arts / Geography / Hindu Civilization/ Hindu Philosophy / History / Law / Linguistics/Media Studies/ Planning / Philosophy / Political Science / Sociology / Tamil

**Assistant Lecturer / Instructor**

Art & Design / Dance (Bharathanatiyam / Kathakali) / Music (*Vocal / Violin*) / *English Language Teaching* / Home Economics

- **Note:** Candidates awaiting the results of the final degree examinations may also apply for Tutor/Instructor

**Visiting Lecturer/Instructor**

Art & Design /Archaeology/ Basic French / English Literature/ English Language Teaching/ Geography/ Home Economics/Hindu Philosophy /Law / Planning /Political Science/Sociology

**Salary:**

| | |
|---|---|
| Assistant Lecturer | Rs.25, 145/- per month fixed |
| Tutor/Instructor | Rs. 20,755/- per month fixed |
| Visiting Lecturer | Rs.500/- per hour |
| Visiting Instructor in Aesthetic studies | Rs.350/- per hour |
| Visiting Instructor | Rs.200/- per hour |

* In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self–addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

Registrar
2012.01.27

## இராசவீதிக்கு காப்பெற்

யாழ்ப்பாணம்,
ஜன.28

கோப்பாய் இராச வீதியும் காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளது.

இந்த வீதியை காப்பெற் வீதியாக மாற்றுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான முதற் கட்ட வேலைகள் இடம்பெற்றுவருகின்றன.

கடந்த மழையால் பெரும் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இந்த வீதியை விரைவில் அகலிப்புச் செய்து மக்கள் பாவனைக்கு விடவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.

இந்த வீதியில் காணப்பட்ட கிடங்குகள் கற்கள் போட்டு மூடப்பட்டுள்ளன.

எனினும் இந்த வீதியால் பயணிக்க முடியாதுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வீதி மிகவும் சேதமடைந்துள்ளதால் இந்தப் பாதையூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

(ம-17)



ஹ
குகமயம்

காரைநகர் பயிரிக்கூடல்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2012

*முருகன் அடியார்களே!*

எமது ஆலயத்தின் மஹோற்சவம் கரவருடம் தைத்திங்கள் 15ஆம் நாள் நாளை (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாள்கள் உற்சவம் நடைபெறும்.

மஹோற்சவ குரு: சிவஸ்ரீ கு. சண்முகராஜக்குருக்கள்
(ஆலயகுரு)

| | | |
|---|---|---|
| 2012.01.29 | ஞாயிற்றுக்கிழமை | கொடியேற்றம் |
| 2012.02.04 | சனிக்கிழமை | வேட்டைத்திருவிழா |
| 2012.02.05 | ஞாயிற்றுக்கிழமை | பெரிய சப்பரம் |
| 2012.02.06 | திங்கட்கிழமை | தேர்த்திருவிழா |
| 2012.02.07 | செவ்வாய்க்கிழமை | தீர்த்தம், கொடியிறக்கம் |
| 2012.02.10 | வெள்ளிக்கிழமை | வைரவர் பொங்கல் |

தேர்த் திருவிழாவன்று 1008 சங்காபிசேகம் நடைபெறும்
அடியார்கள் அனைவரும் வருகைதந்து எம்பெருமானின்
இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

(சி/8246) (6-19-45) **திருவிழா உபயகாரர்கள்**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் 13 ஆண்டு காலமாக அதிபராக அரும்பணியாற்றி உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் இக் கல்லூரியின் பழைய மாணவரும், இக் கிராமத்தின் மைந்தனுமாகிய, மதிப்புக்குரிய

**அப்பாத்துரை ஈஸ்வரநாதன்**

அவர்களது கல்விச் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், இவர் மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்றுக் கல்வித்துறைக்கும், உரும்பிராய் கிராமத்துக்கும் பெருமை சேர்க்க அருளுமாறு ஓடையம்பதி கற்பக விநாயகர் பாதம் பணிகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சபையினர்,**
**யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.**

(13598) (2-6-10)

## வாழ்த்துகிறோம் வளர்கவென

எமது கல்லூரி அதிபர்




உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்

**அ. ஈஸ்வரநாதன்** (B.Com.(Hons) Dip in Ed. S.L.P.S.I) அவர்கள், உரும்பிராய் இந்துவின் மைந்தன், எமது கல்லூரியின் நூற்றாண்டு விழா முதல்வர், 13 வருட காலம் அதிபராக இருந்து கல்லூரியைப் பல துறைகளிலும் மிளிர வைத்து, இன்று கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டுப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். கல்வித் துறையில் அன்னாரின் பணி மேன்மேலும் சிறந்து செழிப்புற வாழ்த்துகின்றோம்.

**உரும்பிராய் இந்துக் கல்லூரி**
(13599) (2-6-10) **பழைய மாணவர் சங்கம், உரும்பிராய்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் நடராசா பவாநாதன்

கடந்த 27.12.2011 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவர் அமரர் நடராசா பவாநாதனின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.01.2012) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறைபதச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வழிகளிலும் ஆறுதல் தெரிவித்து உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்).

பாலாவோடை,
உடுவில் தெற்கு, மானிப்பாய். **குடும்பத்தினர்**

सत्यमेव जयते

On the occasion of 62nd Anniversary of Republic Day of India,

## Consulate General of India
Jaffna

is pleased to invite you to a Contemporary Dance Performance

# Rhythm and Sound

by
Aditi Mangaldas Dance Company
New Delhi

at 4.30 p.m. on Saturday, 28 January 2012
at



**Kailasapathy Auditorium**
University of Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பெரும்பாலும் மேகக்கூட்டத்துடன் கூடிய கால நிலை நிலவும். வவுனியா மாவட்டத்தில் ஓரளவு மேகக்கூட்டம் காணப்படும்.

# லஞ்சம், ஊழல்களில் கல்வித்துறை முன்னணி

**மேற்படி ஆணைக்குழுவுக்கு கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் 1978. இதில் கல்வித்துறை சம்பந்தமாக கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் 310**

லஞ்சம் பெறுதல், ஊழல்கள் மற்றும் முறையற்ற விதத்தில் சொத்துக்களை சம்பாதித்தல் சம்பந்தமாகக் கடந்த 2010 ஆம் ஆண்டில் கல்வித்துறையில் பெருமளவிலான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் தலை வரும் முன்னாள் உயர் நீதி மன்ற நீதிபதியுமான ஜகத் பாலபட்ட பெந்தி கொழும்பின் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு கல்வித்துறை சம்பந்தமாகக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை மொத்தம் 310 ஆகும்.

இரண்டாவதாக பொலிஸ் துறைக்கு எதிராகவே அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவற்றின் எண்ணிக்கை 242 எனவும் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவிக்கிறது.

பிரதேச செயலர் அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இதற்கு அடுத்ததாகப் பெருமளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள பிரிவுகள்ளவும்மேற்படி ஆணைக் குழு தெரிவிக்கின்றது.

இவற்றிடையே லஞ்சங்களைப் பெறுதல், ஊழல்கள் மற்றும் முறையற்ற விதங்களில் சொத்துக்களை சம்பாதித்தல் சம்பந்தமாக மேற்படி ஆணைக்குழுவுக்கு கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 1978 ஆகும்.

இவற்றுள் ஆயிரத்து 50 முறைப்பாடுகள் அதே ஆண்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன எனவும் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ந-22)

# சைக்கிள் இலக்கத் தகடுகளை பெறுவதில் மக்கள் ஏமாற்றம்

**ஜனவரி மாதம் முடிவடையும் நிலையிலும் இன்னமும் உள்ளூராட்சி சபைகளால் தகடுகள் விநியோகிக்கப்படவில்லை.**

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் 2012 ஆம் ஆண்டுக்குரிய சைக்கிள் உரிம இலக்கத் தகடுகளின் விநியோகம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வருடாந்தம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சைக்கிள் இலக்கத் த்கடுகள் விநியோகித்து முடிவடைய வேண்டும்.

ஆனால் ஜனவரி மாதம் முடிவடையும் நிலையிலும் இன்னமும் உள்ளூராட்சி சபைகளால் தகடுகள் விநியோகிக்கப்படவில்லை. சைக்கிள் இலக்கத் தகடுகளைப் பெறுவதற்கு உள்ளூராட்சி சபைகளுக்குச் செல்லும் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தமது பிரதேசங்களில் மேற்கொள்ளும் பிரசாரத்தை நம்பி, உள்ளூராட்சி சபைகளுக்குச் செல்லும் பொதுமக்கள் இலக்கத் தகடுகள் வழங்கப்படாததால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-207)

# இன்று நாட்டிய நிகழ்ச்சி

இந்தியாவின் 62 ஆவது குடியரசு தினத்தையொட்டி யாழ்ப்பானத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை புதுடில்லியின் ஆதித்தி மங்கள தாஸ் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியொன்று நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கேட்போர் கூடத்தில் இன்றைய தினம் மாலை 4 மணியளவில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்ச்சியை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைப்பார். கௌரவ விருந்தினராக யாழ்.பல்லைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்துகொள்வார். (ப)

# இறை குருத்துவ பீடச் சித்தர் வருகை

யாழ்ப்பாணம்,ஜன.28

நயினை நாகபூசணி அம்மன் திருக்குட முழுக்குப் பெருவிழாவைச் சிறப்பிப்பதற்காக இறை குருத்துவ பீடத்திலிருந்து சித்தர் சிவயோகி மாணிக்கம் சிதம்பரம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

கொல்லிமலையில் ஐந்து தலை அரவை அழைத்து பேர் அற்புதங்கள் புரிந்த மகரிஷி பாம்பாட்டிச் சித்தரின் மகா குண்டலினி இறை குருத்துவ பீடத்திலிருந்து சித்தர் சிவயோகி மாணிக்கம் சிதம்பரம் இன்றும், நாளை தங்கியிருந்து அம்பாளின் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வார். அத்தோடு அடியவர்களுக்கு அருளாசியும் வழங்க உள்ளார். (ந-ரி)

# இலவச வகுப்பு

கிராமத்தின் அபிவிருத்தி கருதி பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினால் இலவசக் கல்வி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இதில் தரம் ஒன்றில் இருந்து க.பொ.த. சாதாரண தர வகுப்புக்கள் வரை நடத்தப்படுகின்றன. பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி மாலை நேரங்களில் இந்த வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இது தொடர்பாக மன்றத் தலைவர் ப.ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் வசிக்கும் பனிப்புலம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இந்த சேவைக்குரிய நிதியுதவியை வழங்குகின்றனர். இதில் எமது பிரதேச வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சப்பாத்து போன்றவையும் வழங்கப்பட்டுள்ளன.- என்றார். (ந)

## நீங்காத நினைவில் 3 ஆம் ஆண்டு



அன்னையின் மடியில் 28.05.1986

ஆண்டவன் அடியில் 30.01.2009

**அமரர் வில்லியம் மரியதாஸ் கென்றி (தீபன்)**

அருமருந்தாய் நீ உதித்தாய்
ஆருயிர் பிள்ளையானாய்
இன்பத்தில் திளைக்க வைத்தாய்
எமக்கும் காந்தமானாய்
உனக்கொன்றும் இல்லையானாய்
ஊருக்கே சொந்தமானாய்
எம்மை ஏன் மறக்கலானாய்
ஏன் எம்மை விட்டுச் சென்றாய்
ஐயனை மறவோம் என்றும்
ஒருபொழுதும் மறவாதே எமை
ஓயாது என் துன்பம்

உனை என்றும் மறவா
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, உற்றார், உறவினர்

எமது அன்புச் செல்வத்தின் நினைவாக நாளை (29.01.2012) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(13395) (2-6-1)

## விற்பனைக்கு

Honda மோட்டார் சைக்கிள் C 50, C90 மற்றும் ஸ்கூட்டர் விற்பனைக் குண்டு

தொடர்புகளுக்கு:
075 040 4227

## வேலையாள் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைசெய்யக் கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:
021 7900637



சீரடி சாயி மந்திரில்

## மஹா கும்பாபிஷேகம்

(29.01.2012)

அன்பான அடியார்களே!

உற்சவ மூர்த்தி ஸ்ரீ சீரடி சாயி பாபாவுக்கு நாளை(29.01.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

பூர்வாங்கக் கிரியைகள் யாவும் காலை 7.30 மணியளவில் ஆரம்பமாகும்.

பால்காப்பு: நாளை (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிமுதல் 11மணி வரை

அனைவரும் வருக!
பாபா அருள் பெறுக!

சீரடி சாயி மந்திர்
314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 4815336

ஆலயத்தினர்

(13524) (45-6)

## பொது மக்கள் கவனத்துக்கு



பல நோயாளர்களின் முறைப்பாடுகளுக்கு இணங்க பொது மக்களுக்கு இந்த அறிவித்தலைத் தருகின்றோம். வைத்திய கலாநிதி க.இராமசுவாமியின் இராமசுவாமி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கிலுள்ள (பழம் சந்தி) மேல்மாடி வீட்டில் மட்டும் ஆரம்பம் முதல் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இந்த வைத்தியசாலைக்கு வேறு எந்தவிதமான தொடர்போ, கிளைகளோ இல்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றேன். நோயாளர்கள் வரும்போது தயவு செய்து விளம்பரப் பலகையையும் மேல்மாடிவீட்டையும் அவதானித்து வரவும். வதந்திகளினால் நோயாளர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவது டன் எமது வைத்தியசாலையின் பெயருக்கும் களங்கம் ஏற்படுகின்றது. எனவே வதந்திகளை நம்ப வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கு சகல விதமான வியாதிகளுக்கும் ஆயுள்வேத முறைப்படி சிகிச்சை அளிக்கப்படும்.

தொலைபேசி: 021 222 3809.

(11890)(3.6.7)

டாக்டர் இராமசாமி மகேஸ்வரன் (D.A.M)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பர்கள் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி, புதிய பொருள்கள் வாங்கலாம். உறவினர்கள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். பல மணி நேரமாகும் என்று நினைத்த வேலை ஒன்று சில நிமிடங்களில் முடியலாம்.

**இடபம்:** உறவினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். நேற்றே சில வேலைகளை முடிக்காததால், இன்று அவதிகளுக்கு ஆள்படலாம். தொழில் ரீதியாக சிலரின் சந்திப்பு நிகழும். கடன் பிரச்சினைகளை மாற்றி அமைப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். தொழிலில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** சந்தோஷமான, உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். இரண்டு நாள்களாக வராமல் இருந்த பணவரவுகள் இன்று வரலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். விளையாட்டாகச் செய்த காரியங்கள் விபரீதமாக முடியலாம். வியாபாரிகள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களுக்காக கணிசமாகச் செலவு செய்வீர்கள். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் ஏற்படலாம். சிலர் உங்களிடம் கோபம், வேகமாக நடந்து கொள்ளலாம்.

**சிங்கம்:** உறவினர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். வரவுகளை மிஞ்சிய செலவுகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். கொடுக்கல், வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். வெளியூர் பயணங்களின்போது சிலரை எதிர்பாராத விதமாக சந்திக்கலாம். அலைச்சல் இருந்தாலும், திட்டமிட்ட வேலை ஒன்று முடிவுக்கு வரும்.

**கன்னி:** வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். நண்பர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு நீங்கி பாசம் அதிகரிக்கும். கடந்த கால இழப்பு ஒன்றை ஈடுகட்ட முற்படுவீர்கள். கடன் வசூலிப்பு முயற்சிகளில் பலன் உண்டு. சுபகாரிய விடயங்களில் நினைத்தது நடக்கும் வாய்ப்பு உருவாகும். சகோதரர்கள் வழியில் தொல்லைகள் நேரலாம்.

**துலாம்:** குடும்பத்தினரின் அன்புத்தொல்லைகளைச் சந்திக்கலாம். கையிருப்பு குறைந்து பணப்பற்றாக்குறை ஏற்படும். குழந்தைகள் வழியில் மருத்துவச் செலவுகள் உருவாகலாம். உத்தியோகத்தர்கள் தொழிலில் அதிக கவனமுடன் செயற்பட வேண்டும். குலதெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மனக்குழப்பம் ஏற்படும்.

**விருச்சிகம்:** மற்றவர்கள் பேச்சைக் கேட்டு நடப்பதன் மூலம், சில விடயங்களில் சிரமங்களுக்கு ஆள்படலாம். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தினரின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமை பேசுவீர்கள். வீண் கவலை ஆள்கொள்ளும்.

**தனுசு:** உத்தியோகத்தர்கள் ஊக்கம், உற்சாகத்துடன் செயற்படுவர். பணப்பற்றாக்குறை அகன்று நிதி நிலைமை மேம்படும். உங்களின் யோசனைக்கு உறவினர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை இருக்கும். நண்பர் ஒருவருக்கு ஓடிச்சென்று உதவி செய்வீர்கள். தவறு என்று தெரிந்தே சில காரியங்களை துணிச்சலாகச் செய்வீர்கள்.

**மகரம்:** எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தேடிவந்த ஒருவருக்கு பிறரிடம் கடன் வாங்கியாவது உதவி செய்வீர்கள். உறவினர்கள் சிலரின் பாச மழையில் நனைவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளலாம். சிலரை கேலி பேசி மகிழ்வீர்கள். பேசும் சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும் நாள். வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். காலை முதல் மாலை வரை காலில் சக்கரம் கட்டிக் கொண்டு செயற்படுவீர்கள். நெருக்கமான உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி, உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சைத் தவிர்க்கவும்.

**மீனம்:** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். பணவரவுகளை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவினர்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். திடீர் பயணங்கள் செல்ல நேரிடலாம். உங்களின் அருமை, பெருமைகளைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். மறதியால் அவதியுண்டு.

**நாளை**

தை 15 ஞாயிற்றுக்கிழமை 29.01.2012
திதி: சஷ்டி பி.இ. 06.47 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.இ. 12.50 வரை
சுபநேரம்: 09.36 - 11.06 வரை,
ராகு காலம்: 05.06-06.36 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | 5 | | 4 | | 3 |
| 1 | 4 | | 3 | | 8 | | 2 | 9 |
| 3 | | | | | 9 | 1 | | 8 |
| | 3 | | 9 | | | | 8 | |
| 7 | | | | | | | | 2 |
| | 2 | | | | 6 | | 9 | |
| 9 | | 8 | 6 | | | | | 7 |
| 6 | 7 | | 5 | | 3 | | 1 | 4 |
| 4 | | 3 | | 2 | | 9 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 29 - 04 - 1945

மறைவு 29 - 12 - 2011



**அமரர் சுப்பிரமணியம் இராஜேஸ்வரி**

பொன்னுத்துரை கண்மணி (சின்னத்தங்கச்சி) அம்மாளின்
சிரேஸ்ட புத்திரியாக மண்ணில் உதித்து
அமரர் சுப்பிரமணியத்தைக் கரம்பிடித்து வாழ்ந்து வந்த வேளையில்
தமது பிள்ளைகளுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு
வண். கிழக்கு கலட்டி அம்மன் கோயில் துணை என எண்ணி
கோயில் தொண்டுகளில் ஈடுபட்டு தன் பிள்ளைகளை ஆளாக்கி,
ஆளாகிய பிள்ளைகளால் நல்லதொரு வாழ்வை
அச்சுவேலியாம் பத்தமேனி பதியில் மனையைப் பெற்று
மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்த வேளையிலும்
தமது கோயில் தொண்டினைச் செய்து வந்தீரே
இறைவன் துணையோடும் பிள்ளைகளின் அன்போடும்
வளமாக வாழ்ந்து வந்த வேளையில் சகுதியாக வந்த காலனும்
உறங்கச் சென்ற உம்மை மீளாத் துயிலில் ஆழ்த்தினானோ?
மண்ணில் இனி வாழ்ந்தது போதுமன்றோ உம்மை
பரமனின் பாதத்தில் கொன்று சேர்த்தாரோ.
தாயே நீர் எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
எமக்கு நீர் தாயாக வேண்டும்

எங்கள் அன்புத் தாயார் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும், ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறித் தொடர்பு கொண்டோருக்கும், பல இதர வழியில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

சு.குணசேகர் (கண்ணன்)
சூசையப்பர் வீதி, பத்தமேனி, அச்சுவேலி.
0777361870

(13501) (2,6,19)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



## பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகலவித மோட்டார் வாகனங்களின்
பிளாஸ்ரிக் பொருள்களும் சிறந்த தொழில்
நுட்ப முறையில் செய்து கொடுக்கப்படும்

1. ஸ்பிறே பெயின்ரிங்
2. பிளேற்றிங் (மொப்பிங்)
3. கண்ணாடி வகைகள் பொலிசிங்
4. பைவர் மோல்டிங்

வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்
286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு: 0773512591

## புதிய கடைகள் வாடகைக்குண்டு

இல. 60, ஜும்மாபள்ளிவாசல்
வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட
கடைகள் வாடகைக்குண்டு
தொடர்பு: 077 899 5431,
075 043 4277
(13581) (6-19-45)

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு, கோயிலா மனை,
கொடிகாமம் எனும் இடத்தில்
29¼ பரப்பு தென்னங் காணி விற்பனைக்கு
உண்டு. (சர்வானந்தனின் காணி)
தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்
075 7063369

## அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலியில் கலாசாலை வீதியை,
அண்மித்து இரண்டு அறைகள் உள்ளன.
சிறிய குடும்பமும் தங்கலாம்.
தொடர்பு: 021 222 0568
077 2517 640
(13556) (6-19-45)

## வீடு வாடகைக்குண்டு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு
களஞ்சியப்படுத்தல் மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கும் உகந்தது
வாகன தரிப்பிட வசதியும் உண்டு.
தொடர்பு: R. சத்தியசீலன்
3 ஆம் கட்டை, கட்டைப்பிராய், கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
T.P. 077 7179927
(13521)(19-6-45)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச்
சேர்ந்த வெளி நாட்டில் குடியுரிமை
உள்ள மணமகனுக்கு அழகிய, படித்த
[illegible]
Nicetalk 2012 @yahoo. Com
00 1647 5322773
(13566) (6-45)



## இலங்கைத் திருச்சபை முன்னாள் யாழ். குருமுதல்வர் அருட்பணி எஸ். பி. நேசகுமார் அடிகளாரின் குருத்துவ வெள்ளி விழா



காலம்: இன்று (28.01.2012) சனிக்கிழமை
பிற்பகல் 3 மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
பிற்பகல் 4.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் சேவை நலன் பாராட்டி வாழ்த்தும் நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(13579) (6-19-45) - விழாக்குழுவினர்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 ★ 12 ★ 1946

மறைவு 08 ★ 02 ★ 2011



**திருமதி நாகராசா நாகேஸ்வரி**

திதி: பூர்வபக்க பஞ்சமி

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து
அன்பும் பாசமும் ஊட்டி வளமுடன்
வாழ வைத்த - எங்கள் அம்மா
தாயினைப் போல தெய்வம் தரணியில்
இல்லையென்ற நியதியை உணர
வைத்த - எங்கள் அம்மா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுகள்
நிலைத்திருக்கும்

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

என்றும் உங்கள்
நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,

(13588)(2-6-19)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் பெற்றோல் இல்லை

யாழ்ப்பாணம், ஜன.28

காரைநகர் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோல் விநியோகம் இடம்பெறவில்லை. இதனால் காரைநகர் பகுதி வாகனப் பாவனையாளர்கள் சித்தன்கேணி போன்ற பல கிலோமீற்றர் தூரம் உள்ள எரிபொருள் நிலையங்களுக்குச் சென்றே எரிபொருள் நிரப்ப வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

காரைநகர் துறைமுகம் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் உள்ள பெற்றோல் தாங்கி கடந்த மாதத்தில் சேதமடைந்துள்ளதன் காரணமாகவே பெற்றோல் பெற முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டது (ந-251)

# நுண்கலைப்பீடத்தின் அரையாண்டுப் பரீட்சை

இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் வருட மாணவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வியாழக்கிழமையும், இரண்டாம் வருட மாணவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி திங்கட்கிழமையும், மூன்றாம் வருட மாணவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமையும் இடம்பெறவுள்ளதாகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

(ந-313)

## கல்விச் சுற்றுலா

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவர்கள் அனுராதபுரத்துக்கு கல்விச் சுற்றுலா செல்லவுள்ளனர்.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவர்கள் அனுராதபுரத்துக்கு கல்விச் சுற்றுலா செல்லவுள்ளனர் எனப் பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்தச் சுற்றுலாவில் பெற்றோர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (ந)




வலி .வடக்கு ஜன 28

அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய மணவாளக்கோல விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு 108 கலச சங்காபிசேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். அதனைத் தொடர்ந்து விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும். தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் ஊஞ்சல் பாட்டும் இடம் பெற்று நண்பகல் 12 மணியளவில் விநாயகப் பெருமான் வெளிவீதியுலா வரும் நிகழ்வும் இடம் பெறும். (வ-86)

* * *

வலி வடக்கு, ஜன.28

சிலாபம் மாதம்பை ஹல ஹிட்டியாவவில் புதிதாகக் கட்டப்பட்ட அருள்மிகு ஸ்ரீ கலியுக வரத முருகன் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்டபந்தன நவ குண்ட பஷிமகா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப 9.01 முதல் நடை பெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை அதிகாலை முதல் நடைபெறவுள்ளது. சிலாபம் கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள இந்த முருகன் ஆலயம் மலேசியா முருகன் ஆலயத்தை ஒத்ததாகத் தென்னிந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட சிற்பிகளால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இயற்கை வனப்புடன் கூடிய அழகிய சூழலில் இவ் முருகன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதுடன் மிகவும் அழகிய சிற்பங்களையும் மற்றும் பரிவார மூர்த்திகளையும் கொண்டமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

(86)

* * *

யாழ்ப்பாணம், ஜன.28

குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

இதன் ஆரம்பக் கிரியை வழிபாடுகள் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும் (த-313)

* * *

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆறாம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பக் கிரியை வழிபாடுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் நடைபெறவுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி நண்பகல் 12 மணிக்கு தூபிஸ்தாபனமும், 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

313

* * *

யாழ்ப்பாணம், ஜன.28

பொன்னாலை சித்தி விநாயகர் ஆலயத்தின் இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.34 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பக் கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளன. (ந-28)

* * *

அளவெட்டி, ஜன.28

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தைப்பூசம் இலட்சார்ச்சனை நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப்பூச தினத்தில் முற்பகல் 10 மணிக்கு இலட்சார்ச்சனை பொது உபயமாக இடம்பெற்று நிறைவடையும் (ம-36-ரி)

* * *

யாழ்ப்பாணம், ஜன.28

ஏழாலை தெற்கு வசந்தபுரம் களபாவோடை வசந்த நாகபூசணி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

திருவிழாக் காலத்தில் தினமும் காலை 7 மணிக்கு அபிஷேகமும், முற்பகல் 10 மணிக்கு மூலஸ்தானப் பூசையும், முற்பகல் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆறாம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந-313)

* * *


வடமராட்சி, ஜன.28

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு இறைவழிபாடு என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ. சிவநாதன் நிகழ்த்துவார்.

(ந-236)

## மரண அறிவித்தல்



## இராமு சின்னத்தம்பி

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சின்னத்தம்பி நேற்று (27.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - சின்னன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி, சின்னத்துரை, நாகம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணமணி (மணி -மலேசியா), சரஸ்வதி (பேபி), தனலட்சுமி (மலர்), கமலாதேவி (தேவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குலசேகரம் (மலேசியா), செல்லத்துரை, பாலேந்திரா, அன்ரன் ஆகியோரின் மாமனும், குணராஜா (மலேசியா), குணரத்தினம் (மலேசியா), குணவதி (மலேசியா), குகன் (டோகா), பிரதீப் (டோகா), கபினா ஆகியோரின் அன்புப் பேரனும், கவின், கவிஷா, பிருத்திஷா, நிஷா, சுகன், புகன், சிவாஜினி, டிலக்ஷி, திபிஷன், அஜிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
உரும்பிராய் தெற்கு. (13503) (43-6-19)

தகவல்:
குடும்பத்தினர்

## விற்பனைக்கு

அரிந்தகல்: I. கண்டாவளை மண்ணில் அரிந்த கற்கள் - 34/=
II. கருங்கல் கலந்த கற்கள் -38/=
விறகு: வீரை விறகு 1 லோடன் லொறி விறகு 87000/=
(வீட்டில் கொண்டு வந்து கொடுக்கப்படும்).
தொடர்பு: 077 7885491 (13594) (6-19-45)

## T Vகள் மலிவு விற்பனை

யாழ்நகரில் எங்கும் கிடைக்காத மிக மிக மலிவு விலையில் Japan Sony Waga Flat T Vகள் 21"-10000/=, 25"-12500/=, Pioneer Amp-10000/=, குளிர் சாதனப்பெட்டிகள் - 20000/=, CD-Casstte-Radio- 2000/=
தொடர்புகளுக்கு: 077 0440570 - 077 9712958 (அப்பளம்)
சொனி றேட்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.(13290) (45-7-9)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

விஜயகுமார்,
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.
(13523) (6,10)

## மணமகன் தேவை

89இல் பிறந்த RC வேதமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அந்நாட் டிலோ, ஊரிலோ RC வேத மணமகன் தேவை.

83இல் பிறந்த 4 இல் செவ்வாய் உடைய 71 பாவமுள்ள கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அந்நாட்டிலோ, ஊரிலோ மணமகன் தேவை.

82இல் பிறந்த 12 இல் செவ்வாய், 10 1/2 பாவ முடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அந்நாட்டிலோ, ஊரிலோ படித்த மணமகன் தேவை.

86இல் பிறந்த 8 இல் செவ்வாய் உள்ள 74 பாவ முடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அந்நாட்டிலோ, ஊரிலோ படித்த மணமகன் தேவை.

79இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 55 1/4 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அந்நாட்டில் படித்த மணமகன் தேவை.

88இல் பிறந்த 2 இல் செவ்வாய் உள்ள 36 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அந்நாட்டிலோ, ஊரிலோ படித்த மணமகன் தேவை.

84இல் பிறந்த 8 இல் செவ்வாய் உள்ள 44 1/2 பாவமுடைய லண்டனில் சட்டப்படிப்பு முடித்து அந்நாட்டிலே பணிபுரியும் மணமகளுக்கு லண்ட னில் படித்த மணமகன் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன்
திருமண சேவை,
இல 320, கோவில் வீதி,
நல்லூர். T.P:0776070862
(13592) (6,10)

## பரம் திருமண நிறைவேற்றுனர் பிரான்ஸ்

ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தங்கள் தகுதிக்கேற்ற மணமக்களைப் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் ஜாதகத்துடன் புகைப்படங்களையும் சேர்த்து எமது யாழ்ப்பாணத்திலுள்ள காரியாலயத்தில் பதிவு செய்த பின்னர் அவர்களால் ஏற்றுக்கொண்டு எமக்கு அனுப்பப்படும் ஜாதகங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

P.T.P. திருமண சேவை
313, யாழ்.வீதி,
மானிப்பாய், யாழ்ப்பாணம்.
021 321 9840

Param Wedding Service
67, Rue de & angelus
9150 Le Blanc Mesnil
France.
0033669058368

(13526) (2,6,19)

உ
சிவமயம்

## கைதடி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயக தேவஸ்தானம்
கண்டி வீதி, கைதடி.



### அறிவித்தல்

விநாயகப்பெருமான் அடியார்களே!

கைதடியூரின் கண்டி வீதியருகே வீற்றிருந்து வேண்டுவோர் வேண்டுவதை மெய்யடியார்களுக்கு வாரி வழங்கும் கைதடி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான ஆவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 2012 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25ஆம் திகதி நடைபெற விநாயகப் பெருமான் திருவருள் கைகூடியுள்ளது. எனவே பக்த அடியார்கள் கும்பாபிஷேக நிகழ்வுகளுக்கும் அதற்கு முன்னதாகத் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருப்பணிகளுக்குமான பேருதவிகளை பணமாகவோ, பொருளாகவோ தந்துதவுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

நிதியுதவி செய்ய விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் நேரடியாகவும் இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை 7788785 கணக்கு இலக்கத்தினூடாகவும், பொருளாளர், கைதடி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம், கண்டி வீதி, கைதடி என்ற முகவரிக்கு தபால் மூலமாகவும் தங்கள் அன்பளிப்புக்களைச் செய்யலாம்.

முக்கிய குறிப்பு: இந்த ஆலயத்தின் சார்பாகப் பணமோ, பொருளோ சேகரிப்பதற்கு நாம் எவரையும் நியமிக்கவில்லையென்பதையும் இவ்வாலயத்திற்கு இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ கிளைகள், வழிபாட்டு மன்றங்கள் இல்லையென்பதையும் அறியத் தருகின்றோம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| சி.நாகன் | சு.தர்மகுலசிங்கம் | இ.சிறிதரன் |

கைதடி அருள்மிகு ஸ்ரீ கற்பக
விநாயகர் தேவஸ்தானம்,
கண்டி வீதி, கைதடி.

தொ.பே:0213213536

(13580) (6,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் உங்கள் வீட்டில் இருந்தபடியே பணம் சம்பாதிக்க வேண்டுமா?

# MCN COMPUTER PARK

## MCN நிறுவனத்துடன் இணைந்து பணியாற்ற விரும்புபவர்களுக்கு

**உங்கள் வீட்டில் இருந்தபடியே MCN நிறுவனத்துடன் இணைந்து கணினிப் பயிற்சி வகுப்பை நடத்த விரும்பினால் எம் நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு கட்டுப்படவேண்டும்.**

**விவரம் வருமாறு-**

* நீங்கள் ஒரு COMPUTER COURSE முடித்த சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
* நீங்கள் ஒரு COMPUTER வகுப்பை உங்கள் வீட்டில் ஆரம்பித்தால் அது முடியும் வரை நடத்தி முடிக்க வேண்டும். (இடையில் விட்டு விலக முடியாது)
* நீங்கள் G.S. CHARACTER (2012) வைத்திருக்க வேண்டும்.
* நீங்கள் குறைந்தது 15 பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும்.

**Ms Office, Photoshop 6மாத Course** க்கான கட்டணமாக தலா ரூ 3000/- வைப் பெற்று நிறுவனத்திடம் ஒப்படைக்கவேண்டும். மேலும் தலா ரூ.1000/- கட்டணத்துடன் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எம்மால் வழங்கப்பட்ட COMPUTER க்கான பாதுகாப்புப் பணமாக ரூ 25000/- செலுத்த வேண்டும்.

நீங்கள் 25000/- பணம் செலுத்த முடியாதவராக இருந்தால் 25 பிள்ளைகளை கட்டாயம் கணினிப் பயிற்சிக்கு இணைக்க வேண்டும்.

**15 பிள்ளைகளை சேர்த்து 25000/- கட்டி பயிற்சி நெறியை ஆரம்பிப்பவர்களுக்கு 8000/- மாத சம்பளமும், 20 பிள்ளைகளைச் சேர்த்து 25000/- கட்டி பயிற்சி நெறியியை ஆரம்பிப்பவர்களுக்கு 10000/- மாத சம்பளம் MCN நிறுவனத்தால் வழங்கப்படும்.**

* எமது நிறுவனத்தால் மின்சாரக் கட்டணமாக மாதம் 250/- வழங்கப்படும்.
* நீங்கள் கட்டாயம் எமது நிறுவனத்தால் நடத்தப்படும் Seminar களில் கலந்து கொள்ளவேண்டும்.
* நீங்கள் எங்கள் நிறுவனத்தின் வகுப்பு ஒழுங்குக்கேற்ப உங்கள் வகுப்பை நடத்தவேண்டும்.
* உங்களுக்கு எங்கள் நிறுவனத்தால் மாதச் சம்பளம் வழங்கப்படும்.
* எமது நிறுவனத்தால் உங்களுக்கு 2 COMPUTER உட்பட அனைத்துத் தளபாடங்களும் வழங்கப்படும்.
* எமது நிறுவனத்தால் மாதம் இரு தடவைகள் Seminar நடத்தப்படும்.
* நீங்கள் எம்மிடம் செலுத்திய 25000/- பணம் எம்மால் உங்களுக்கு வழங்கப்பட்ட COMPUTER உட்பட அனைத்துத் தளபாடமும் உங்களால் எமது நிறுவனத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டதும் எமது நிறுவனத்தால் உங்கள் பணம் திருப்பி ஒப்படைக்கப்படும்.
* உங்கள் வகுப்பு பிள்ளைகளுக்கு மாதம் ஒரு தடவை Exam நடத்தப்படும்.
* வகுப்பு முடிவில் MCN COMPUTER PARK ன் சான்றிதழ் வழங்கப்படும்.

**2012.02.01 ஆரம்பமாகும் இடங்கள்-**
யாழ்ப்பாணம், நல்லூர், அளவெட்டி, அச்சுவேலி, கிளிநொச்சி.

**MCN COMPUTER PARK, TEL.0094-212262744**


# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயப்பிரபா கமல்ராஜ்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமல்ராஜ் ஜெயப்பிரபா 25.01.2012 அன்று காலமானார்.

அன்னார் ஜெகதீசன் - வடிவாம்பிகை தம்பதியரின் செல்ல மகளும் கமல்ராஜின் அன்பு மனைவியும் ஆகாஷின் பாசமிகு தாயும் பூவையா - பங்கயம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற மயில்வாகனம், மங்கையர்க்கரசி, குஞ்சன் பரமேஷ்வரியின் ஆசைப் பேர்த்தியும், ஜெகதாம்பிகை, ஜெயச்சித்ரா, ஜெயவதனி, ஜெயபிர காஷ் ஆகியோரின் சகோதரியும், விமல்ராஜ், நிமல்ராஜ், அமல் ராஜ், கமலினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சறோஜா, லதா, சாந்தி, வனஜா, கலா, காலஞ்சென்ற சீதா, கௌரி ஆகி யோரின் அன்பு மருமகளும் குட்டி கிளி ஆகியோரின் பெறாமக ளும் கங்காதரன் வரதராஜன், ஞானசேகரம், கிரிதரகோபாலன், காலஞ்சென்ற சந்திரன் ஆகியோரின் அன்பு மருமகளும் இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயாணத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (13536)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை இராஜதுரை



காரைநகரைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடம், கொக்குவிலை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய ஐயாத்துரை இராஜதுரை (26.01.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காரைநகர் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் முத்துசயம்புவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஐயாத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நமசிவாயம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், கனகரத்தினம், பரம்சோதி, இராஜேஜஸ் ஆகியோரின் சகோதரனும், சாந்தசொரூபி, ரஜகசொரூபி, ராஜ்மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரசேகரப்பிள்ளை, தர்மலிங்கம், ரதி ஆகியோரின் மாமனும், அனோஜன், தனுஜா, ஆனந், ஜெனா, லவன், அமிர்தினி, யான்சினி, யான்சன் ஆகியோரின் பேரனும், அபிரா, ஓவியன், அனிரா, அனிஷா, அஷ்விகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 5 - 9 மணிவரை 1591,Elgimills Rd East Richmonhill இல் அமைந்துள்ள Funeral Home இல் பார்வைக்காக வைக்கப்பட்டு 28.01.2012 சனிக்கிழமை நண்பகல் 12- 3 மணிவரை அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு-
சாந்தசொரூபி- 4162879525,
ஜெகசொரூபி- 9052091472,
ராஜமோகன்- 6475027640

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை, யாழ்.அணிகள் மேசைப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.28

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான மாவட்ட மட்ட மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ்.பிரதேச செயலர் அணியும், பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை பிரதேச செயலர் அணியும் சம்பியனாகின.

கடந்தவாரம் யாழ்.மத்திய கல்லூரி மேசைப்பந்தாட்ட உள்ளகத் திடலில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். பிரதேச செயலர் அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டியது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலர் அணியை எதிர்த்து யாழ்.பிரதேச செயலர் அணி மோதிக் கொண்டது.

இதில் தெல்லிப்பழை பிரதேச செயலர் அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டியது. ஆண்கள் பிரிவில் சிறந்த வீரனாக யாழ். பிரதேச செயலர் அணியைச் சேர்ந்த பா.அஜுந்தனும், பெண்கள் பிரிவில் சிறந்த வீரராக தெல்லிப்பளை பிரதேச செயலர் அணியைச் சேர்ந்த ஐ.டென்சிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(த-23)

## விளையாட்டு அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வு

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுத்துறையின் அபிவிருத்தி செயல் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் சுன்னாகம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள மாகாண கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் வட மாகாண கல்வித் திணைக்களத்தின் உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வட மாகாணத்துக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பன்னிரெண்டு கல்வி வலயங்களின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கலந்துரையாடலில் 2012 ஆம் ஆண்டின் உடற்கல்வி சம்பந்தமான செயற் பாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் எனப் பல விடயங்கள் எடுத்து ஆராயப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதகிருஸ்ணன், திட்டப் பணிப்பாளர் எஸ்.மணிமாறன உட்பட மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

(த-86)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.28

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மற்றும் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலம் ஆகியன இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பாடசாலைகள் வேலைப் பகுதிப் பொறியியலாளர் எட்வேட் சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கந்தசாமி கலந்து சிறப்பிப்பார்.

(த)

***

வடமராட்சி,ஜன.28

வல்வெட்டித்துறை றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு அதிபர் சோ.ஜெயதேவா தலைமையில் இடம் பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வல் வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க. மயிலேறும்பெருமாள் கலந்து கொள்வார்.

(த-23)

***

வடமராட்சி, ஜன.28

புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ந.அனந்திஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(த-23)

***

வடமராட்சி,ஜன.28

பருத்தித்துறை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி ஜமுனா நந்தகுமார் பரிசில்களை வழங்குவார்.

(த-236)

***

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு வித்தியாலய பழைய மாணவரும் ஓய்வுபெற்ற கொழும்பு இந்துக் கல்லூரி அதிபருமாகிய சி.வா. கிருஷ்ணமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(த-236)

***

மானிப்பாய் இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி முதல்வர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'அஸ்பெஸ்ற்' தொழிற்சாலை முகாமையாளர் எம்.கணேசன் பிரதம விருந்தினராகவும் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைச் சங்கத் தலைவர் ஏ.இராமநாதன், வலிகாமம் வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா, பழைய மாணவரும், நாடக நெறியாளருமான ஏ.நற்குணலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்கள் ஆகவும் கலந்து கொள்வர். அன்றைய தினம் முதலியார் 'மகேசன் ஞாபகார்த்த' கட்டடமும் திறந்துவைக்கப்படவுள்ளது.

(த-38)

***

யாழ்ப்பாணம், ஜன.28

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 1 மணியளவில் அதிபர் மா. நவநீதமணி தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவனும் புத்தளம் ஆதார வைத்தியசாலை அதிகாரியுமான வைத்திய கலாநிதி ஜனார்த்தனன் கலந்து கொள்வார். பரிசினை திருமதி ஜனார்த்தனன் நிவேதா வழங்கி கௌரவிப்பார்.

(த-23)

## கரப்பந்தாட்டப் போட்டிகள்



யாழ்ப்பாணம், ஜன.28

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான தேசிய மட்டக் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இரத்தினபுரி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்ட ஆண், பெண் அணிகள் இரத்தினபுரிக்குப் பயணமாகியுள்ளன.

ஆண்கள் அணி சார்பாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியும், பெண்கள் அணி சார்பாக காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் தேசிய மட்டக் கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-23)

***

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இன்று சனிக் கிழமை காலை ஆண்கள், பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டிகள் நெடுந்தீவு சிக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய போட்டியில் சென்.ஜேம்ஸ், உதயசூரியன், ஸ்ரார், சென்.அன்ரனிஸ், ஐக்கியதீபம் விளையாட்டுக் கழகங்கள் மோதுகின்றன.


(த-7)

உங்கள் இல்லங்கள் தலை முறைகள் தாண்டியும் நீடித்து நிற்க,
ரசனை மிக்கவர்களின் முதன்மை தெரிவாய் இருக்கும்,
உங்கள் இல்லத்திற்கே நாடி வரும்
சர்வதேச தரத்திலான CERAMIC வகைகள்......

ASSOCIATE SPONSOR FOR SLIA-2012

Ranjanas CERAMIC (PVT) LTD.
For Quality Tiles & Sanitaryware

யாழ் மண்ணில் புதுப்பொலிவுடன்
புதுமையான CERAMIC வகைகளுடன் தடம் பதிக்கின்றது!



சர்வதேச அங்கீகாரமும் பிரபலமான CERAMIC வகைகளான,
NIRO GRANITE (MALAYSIA), RAK CERAMICS (U.A.E.), GRANITO (INDONESIA), LATICRETE
மற்றும WALL TILES, FLOOR TILES (தரைக் கற்கள்). குளியலறை சாதனங்கள் அனைத்தையும்
தன்னிகரற்ற தரத்தில், யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ள...........

Metro Engineering
RANJANAS CERAMIC இன் பிரத்தியேக விநியோகஸ்தர்கள்
இல: 05A, கொடிகாமம் வீதி, நெல்லியடி.
021-226-2000 / 021-226-3111 / 021-222-0033

ஏனைய கிளைகள்
Metro Engineering, இல: 5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222-4777
Metro Engineering, இல: 212, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021-222-0033

நெல்லியடியில் Metro Engineering
நிறுவனம் புதுப்பொலிவுடன் மற்றுமொரு
புதிய கிளையினை இன்று வைபவரீதியாக ஆரம்பிக்கின்றது.

Ranjanas CERAMIC (PVT) LTD.
For Quality Tiles & Sanitaryware
*conditions apply
RANJANAS GROUP SINCE 1946

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இது தற்காலிகமானதே!



Pic Courtesy : AFP





இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியை தான் தற்காலிகமாக ஏற்றுள்ளதாக மஹேல ஜெயவர்தன கூறியுள்ளதுடன் அணியில் உள்மோதல் நிகழ்கின்றன என்ற தகவல்களையும் நிராகரித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

ஒருவருட காலத்திற்கு நான் தலைவராகப் பதவியேற்றுள்ளேன். எமது இலக்கு போட்டியில் வெற்றி பெறுவதும் டெஸ்ட் தரவரிசையில் முதல் நான்கு நாடுகளில் ஒன்று எனும் பெருமையை மீண்டும் பெறுவதுமாகும்.

கடந்த காலத்தில் நாம் தோல்விகளைத் தழுவினோம். இப்போது எதிர்காலத்தை நோக்குகிறோம். இந்தியா, ஆஸ்திரேலியாவை அடுத்த மாதம் நாம் எதிர்கொள்ளவுள்ளோம், என்று அவர் கூறினார்.

2006 முதல் 2009 ஆம் ஆண்டுவரை இலங்கை அணியின் தலைவராக மஹேல ஜெயவர்த்தன பதவி வகித்தார். அதன்பின்னர் குமார் சங்ககார அணித் தலைவரானார்.

கடந்த உலகக் கிண்ணத் தொடரின் பின்னர் அணித் தலைவர், உபதலைவர் பதவிகளிலிருந்து சங்ககாரவும், ஜெயவர்த்தனவும் ராஜினாமா செய்ததையடுத்து திலகரட்ன டில்ஷான் அணித் தலைவராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(15)


## சும்மா சொல்கிறார் அமைச்சர்....!

அணிக்குள் நிலவும் அரசியல் காரணமாக வீரர்களின் மனவுறுதி பாதிக்கப்பட்டதென்பதையும் அதுவே தோல்விக்கு வழிவகுத்தது என்றும் இலங்கையின் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே தெரிவித்ததை மஹேல ஜெயவர்தன அடியோடு நிராகரித்தார்.

குமார் சங்கக்கார உலகின் முதல் நிலை துடுப்பாட்ட வீரர். உள்வீட்டு அரசியல் காரணமாக அவர் தனது திறமைக்கு குறைவாக விளையாடினார் என்று எண்ணுவது அபத்தமான கருத்தாகும், என்று அவர் தெரிவித்தார்.

பயிற்றுநர் பதவியிலிருந்து ஜொவ் மார்ஷ் நீக்கப்பட்டு, கிரஹம் போர்ட் புதிய பயிற்றுநராக நியமிக்கப்பட்டமை குறித்து கருத்து கூற மஹேல ஜெயவர்தன மறுத்தார். அது எனது துறையல்ல. அது தேர்வாளர்களைப் பொறுத்தது. என்னுடன் உள்ளதைக்கொண்டு நான் பணியாற்ற வேண்டும். கிரஹம் அனுபவமிக்கவர். அணியை கட்டியெழுப்புவதற்கு அவரின் சேவை எமக்கு வேண்டும் - என்றார்.

இதேவேளை, ஜொவ் மார்ஷ் தனது 100 சதவீத சேவையை வழங்கியதாக திலகரட்ன டில்ஷான் கூறினார். எனினும் இது தொடர்பாக மேலதிக கருத்து எனவும்கூற அவர் மறுத்துவிட்டார். (15)



## எல்லோரும் என்னையே திட்டுகிறார்கள்

ஆஸ்திரேலிய அணி வீரர்கள் தகாத வார்த்தைகளால் திட்டியதாக இந்தியாவின் விராத் ஹோக்லி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து ஹோக்லி கூறியதாவது:

களத்தில் இருக்கும் போது ஆஸ்திரேலிய வீரர்கள் தொடர்ந்து வசைபாடுகின்றனர். இதன் மூலம் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களின் கவனம் சிதறடிக்கப்படுகிறது. நான் 99 ஓட்டங்கள் எடுத்த போது 100 ஆவது ஓட்டம் எடுக்க முற்படுகையில் ஆட்டமிழக்கும் வாய்ப்பில் இருந்து தப்பினேன். அப்போது ஹில்பெனாஸ் மோசமான வார்த்தைகளால் திட்டினார்.

இதை நாகரிகம் கருதி வெளியில் சொல்ல முடியாது. இதற்கு நானும் பதிலடி கொடுத்தேன். பின்னர் பொண்டிங் தலையிட்டு சமாதானம் செய்து வைத்தார். நாங்கள் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள், போட்டியில் பங்கேற்கத் தான் ஆஸ்திரேலியா சென்றுள்ளோம், திட்டு வாங்குவதற்காக அல்ல.

ரசிகர்களும் மோசமாக நடந்து கொள்கின்றனர். பதிலுக்கு நான் ஏதாவது செய்தால் (சிட்னி டெஸ்டில் நடுவிரலை காட்டியது) அபராதம் விதிக்கின்றனர் - என்றார் வேதனையுடன். (15)




டெண்டுல்கரின் ஆட்டமிழப்பு; ஆர்ப்பரிக்கும் நதன் லயோன்.

### ஆஸ்திரேலியா - இந்தியா

### இறுதி டெஸ்ட்

# தோல்வியை தவிர்க்கப் போராட்டம்



**இந்திய அணி இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் தோல்வியிலிருந்து தப்பிக்க வேண்டுமாயின் கைவசம் உள்ள நான்கு இலக்குகள் இன்றைய நாள் முழுவதும் தடுத்தாட வேண்டும். அதன் மூலம் ஆட்டத்தை சமநிலைப் படுத்த முடியும். ஆஸ்திரேலிய அணியைப் பொறுத்த வரையில் இலகுவாக இறுதி ஆட்டத்திலும் வெற்றி பெறும் நிலையில் உள்ளது.**

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி முதலில் நான்கு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது. முதலில் இடம்பெற்ற மூன்று டெஸ்ட் ஆட்டங்களிலும் ஆஸ்திரேலிய அணியிடம் இந்திய அணி அடி வாங்கியது. இந்த நிலையில் நான்காவது டெஸ்ட் ஆட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதலாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகளை இழந்து 604 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. பொண்டிங் 221, கிளார்க் 210, ஹடின் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் அஸ்வின் 3, சகீர்கான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி வழமை போன்று சொதப்பி சகல இலக்குகளையும் இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. ஹோக்லி 116, சகா 35, கம்பீர் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிடில் 5, ஹில்பென்ஹாஸ் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

332 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவில் 3 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் பொண்டிங் [illegible], கிளார்க் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இவர்கள் இருவரும் மீண்டும் பாரிய இணைப்பாட்டத்தினைப் பகிர்ந்து கொள்வார்கள் என்ற நிலையில் நேற்றைய ஆட்டம் ஆரம்பமானது. அதற்கமைவாக 50 ஓட்டங்களையும் தாண்டியும் இவர்களது இணைப்புத் தொடர்ந்தது. இறுதியில் 71 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிர்ந்த பின்னர் கிளார்க் 37 ஓட்டங்களுடன் யாதவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நுழைந்த ஹஸி 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இருப்பினும் மறுமுனையில் அசத்திய பொண்டிங் 61 ஆவது அரைச்சதத்தை கடந்தார். இறுதியில் 46 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக ஆஸ்திரேலிய அணி அறிவித்தது. பொண்டிங் 60, ஹடின் 11 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர்.

500 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. சேவாக் அதிரடியில் போட்டுத் தாக்கினார். அணித்தலைமை பதவி ஏற்றதற்கு அணியை வெற்றி பெற வைக்க அவர் கடுமையாக போராடினார். இருப்பினும் மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கம்பீர் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி 14 ஓட்டங்களினைப் பெற்ற நிலையில் முதலாவது இலக்கை பறிகொடுத்தது.

தொடர்ந்து டிராவிட் களம்புகுந்தார். மறுமுனையில் சேவாக் தனது தாக்குதலைத் தொடர்ந்தார். சேவாக் 36 பந்துகளில் தனது 31 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். டிராவிட் களத்தில் நிலைத்து நிற்க கடுமையாகப் போராடினார். அணி 80 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சேவாக்கின் ஆட்டத்துக்கு முடிவு கட்டப்பட்டது. சேவாக் 53 பந்துகளில் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டிராவிட் 25, சச்சின் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 110 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் இணைந்த லக்ஸ்மன், ஹோக்லி ஜோடி நின்றாடியது. அனுபவமும், இளமையும் சேர்ந்து புதிய இணைப்பாட்டத்தை தொடங்கியது. இருப்பினும் 52 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிர்ந்த நிலையில் லக்ஸ்மன் 35 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். மறுமுனையில் முதல் இன்னிங்ஸில் சதமடித்த ஹோக்லி 22 ஓட்டங்களுடன் 'ரன்அவுட்டாக' இந்திய அணி 166 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது. நேற்றைய ஆட்டநேரநிறைவில் இந்திய அணி 56 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் இசாந் சர்மா 2, சகா 0 ஆட்டமிழக்காமல் உள்ளனர். பந்து வீச்சில் நதன் லயோன் 3, ஹரிஸ் 2 இலக்குகளை கைப்பற்றியுள்ளனர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைரவன் சின்னத்தம்பி



சிறுப்பிட்டி தெற்கைப்பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் சின்னத்தம்பி நேற்று (27.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2012) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நவரஞ்சனா துரைராஜா

(ஆசிரியை- பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, பண்டாரநாயக்கா மாவத்தை)



தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நவரஞ்சனா துரைராஜா நேற்று (27.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் திருமதி பாக்கியலட்சுமி நமசிவாயம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கனகசேகரம் ஈஸ்வரி தம்பதியரின் மருமகளும், கனகசேகரம் துரைராஜாவின் அன்பு மனைவியும், துர்க்கா, சங்கரி ஆகியோரின் அன்புத் தாயும், நவஜீவனா, நவநீதா, நவசாந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இருந்து கல்கிசை பொது மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

49, 1/2, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு- 06.

தகவல்:
கணவர்.


**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

ஆங்கிலம் – சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் (28.01.2012 இன்று)


| | |
|---|---|
| நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி | காலை 11.30 – 12.30 |
| 182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் | மாலை 2.00 – 3.00 |
| இலங்கை வங்கி மாடி, சங்கானை | மாலை 5.00 – 6.00 |

சிங்களம் – சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் (28.01.2012 இன்று)

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி | காலை 9.00 – 10.00 |
| 182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் | காலை 3.00 – 4.00 |

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தப்பு இராமச்சந்திரா**
(முன்னாள் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)

மண்ணில்
18.12.1949

விண்ணில்
31.01.2009

ஆண்டுகள் மூன்று கடந்து சென்றாலும்
ஆறாத்துயர் இன்னும் ஓயவில்லை
நித்தம் புலம்புகின்றோம்
உந்தன் திருமுகத்தைக் காணாமல்
அம்மா என என்னை அழைக்கும்
உங்கள் குரல் கேளாதோ என் காதில்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

"சத்தியபவனம்", சந்நிதி ரோட், உடுப்பிட்டி

சத்தியவதி (மனைவி), சத்தியவான் (மைத்துனர், கணக்காளர், பொட்சுவானா), நாகதேவி (பொட்சுவானா), புருசோத்தமன் (B.Sc Computer engineer, பொட்சுவானா), மதுசூதனன் (கணக்காளர்,பொட்சுவானா)

## சிறைச்சாலைக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ். சிறைச்சாலைக்கான அடிக்கல் நாட்டும் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-14)

## பிற்போடப்பட்டது

தென்மராட்சி, ஜன.28

தென்மராட்சிக்கல்வி வலயத்தினால் இன்று சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ்ப் பாட ஆசிரியர்களுக்கான தரவட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (எ-207)


**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

2 மாதம் நிரம்பிய டோமன் பெண் குட்டியும் 2 மாதம் நிரம்பிய டாசோன் பெண் குட்டியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779185723, 0214903565

**R.S.F தராசு**

பழைய தராசுகள் திருத்திக் கொடுக்கப்படும். புதிய தராசுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0774635125

R.S.F தராசு
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.
(பூபதி வெதுப்பகம் அருகில்)

**உடனடி வேலைவாய்ப்பு**

GDM Management நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

01. Team Leader - 07
02. Supervisor - 04

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். + தங்குமிட வசதி செய்து தரப்படும். (தனிப்பட்ட சலுகைகளும் உண்டு)
O/L பரீட்சைக்குத் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 0728012111, 0774766422
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்) (சி-8274)


**தவறிவிட்டது**

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இராசரத்தினம் புவனேந்திரா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.680281017V), சாரதி அனுமதி அட்டை அடங்கிய பேர்ஸ் இணுவிலுக்கும் யாழ்.ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0213210714 இலக்கத் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.


**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

26/10, ஒட்டுமடம், செழியன் வீதியில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0750687478

**German, Swiss மொழிகள்**

தமிழ் மொழி பெயர்ப்புடன் Embassyயில் கேட்கப்படும் Certificate க்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது. அடுத்த வகுப்புகள் எதிர்வரும் (01.02.2012) புதன்கிழமை ஆரம்பமாகின்றது. வன்னிப் பிரதேசத்தில் இருந்து வருவோருக்குத் தங்குமிட வசதியும் ஏற்படுத்தித் தரப்படும்.
தொடர்புகளுக்கு: 10, Palaly Road, Jaffna, T.P.: 0771604823

**ஆஸ்திரேலியா குடும்ப விசா**

குடும்பமாக ஆஸ்திரேலியா செல்ல 5 வருட வீசாவிற்கு சட்ட ரீதியான ஆலோசனை. இறுதி நாள்- 07.02.2012

திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 221 9016

**அறை வாடகைக்கு**

Campus மாணவர்களுக்கும் Nurses களுக்கும் மட்டும் (பெண்கள்), சாப்பாட்டு வசதிகளுடன் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் அறைகள் வாடகைக்கு உண்டு. T.P.: 0771304944

**காணி விற்பனைக்கு**

"புங்கடியிற்புளம்" கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் (அந்தோனியார் கோயிலுக்கு அருகில்) 150m தூரத்தில் ¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 0774801761

**வான் விற்பனைக்கு**

59 - XXXX இலக்க நல்ல நிலையில் உள்ள டொல்பின் வான் லீசிங்குடன் விற்பனைக்கு உண்டு.
Alloyweel, White, Adjustable Seat, A/C 4 Door
தொடர்பு: 0778918765, 0774366997


## கண்ணீர் அஞ்சலி



இன்றும் எம் நெஞ்சோடு
வாழ்ந்துகொண்டிருக்கும் ஊறணியின்
முன்னை நாள் பங்குத் தந்தை அருட்தந்தை
**பீற்றர் துரைரெட்ணம் அடிகளார்**
இறைவனடி சேர்ந்தமையை அறிந்து துய[illegible] அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பங்கு மக்கள்
புனித அந்தோனியார் ஆலயம்,ஊறணி.
(சி-8270)


**ஆண்மைக்குறைவா? குழந்தையின்மையா?**
**உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை**

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்



எயிட்ஸ் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்!
பெண்களுக்கான மாதப்பிரச்சனை,
கருமுட்டை உற்பத்தியின்மை,
வளர்ச்சியின்மையால் பாதிப்பா?
தாம்பத்தியக் குறைபாடா?
கவலை வேண்டாம்.



தூக்கத்தில் சக்தி வெளியாதல், விரைவில் வெளியாதல், தன்னால் முடியாமல் என்ற பயமா? திருமணத்துக்கு தயாராகும் வாலிபர்களே இந்தப் பயத்திலிருந்து விடுபட்டு 45 நாட்களில் முழு ஆண்மையும் பெற்று முழுமையான வளர்ச்சியில் நீண்ட நேரம் இன்பம் பெறுவது உறுதி. எந்த வயதினராலும் சரி எந்த நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி பலன் பெறுவது உறுதி.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (பெண்கள் மட்டும்)
செல்: 0091 9842457673

100% உறுதி மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.
யாழ் வருகை 29.012012 காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரை டாக்டரை நேரடியாக சந்திக்கலாம்.

Website: www. Sexualproblem.in
Email: sridevisiddha@gmail.com



செல் : 0091 9600336009
இலங்கை செல்: 0754 518 639

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
APGraphic


# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா கணேசன்



பொகலந்தலாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கணேசன் கடந்த 25.01.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா- மாரியா தம்பதியரின் அன்பு மகனும், சிவமணியின் அன்புக் கணவரும், சண்முகம் (தேனீர்ச்சாலை உரிமையாளர்) அன்புத் தம்பியும், தங்கவேல், சரோஜா, விஜயலட்சுமி (மைனா), பானுமதி (தேவி) ஆகியோரின் சகோதரனும், மஞ்சுளா, ஜெகதீசன் (சுதா) ஆகியோரின் தந்தையும், சதீஸ்வரன், ரவீந்திரன், திருமாறன் ஆகியோரின் மாமனும், பொன்னம்பலம் (கொழும்பு), ராமையா ஆகியோரின் மருமகனும், சிவகுரு, மணியம், ரமேஸ், ஜெயம், ராகுலன், சிறி, செட்டி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக தாவடியிலுள்ள கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53, அரசடி வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, மகன்.

## திருமதி புனிதவதி குகேந்திரன்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பெருமாக் கடவை அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி குகேந்திரன் நேற்று (27.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசையா - சோதிமதியம்மா தம்பதியரின் மருமகளும் குகேந்திரனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தெய்வநாயகி, தனபாக்கியம் மற்றும் யோகராஜா, விஜியகுலசேசரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவாம்பிகை குலேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் லம்போதரன் (முகாமைத்துவ உதவியாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்), தாரணி ஆகியோரின் பாசமிகு தாயும் சுதர்சன்,மாதுரி ஆகியோரின் அருமை மாமியும் வைஷ்ணவி, கல்பனா, லஷ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருமாக் கடவை,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:
இ.குகேந்திரன்
(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை
# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ் வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றது. கீழ் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

*01.* **கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:**
*28.01.2012 தொடக்கம் 10.02.2012 பி.ப. 4.00மணிவரை*

*02.* **கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:**
*13.02.2012 மு.ப. 10.00 மணிவரை*

*03.* **கேள்வி திறக்கப்படும் திகதி:**
*13.02.2012 மு.ப. 10.30 மணிக்கு*
*(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்)*

*04.* கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.

*05.* இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.

*06.* கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

*07.* கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/ செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இட வேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப் படல் வேண்டும்.

*08.* மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | குமரக்கோட்டம் பேச்சி அம்மன் வீதி கல்லிட்டுத் தாரிடல்- கோண்டாவில் | 3270.00 | 500.00 | M10/C10 |
| 02 | தம்புபரியாரியார் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் - கல்வியன்காடு | 4070.00 | 500.00 | M10/C10 |
| 03 | மஞ்சத்தடி குறுக்கு வீதி கல்லிட்டுத் தாரிடல் -இணுவில். | 3810.00 | 500.00 | M10/C10 |
| 04 | பாரதிபுலம் குறுக்கு வீதி கல்லிட்டுத் தாரிடல் - திருநெல்வேலி | 3930.00 | 500.00 | M10/C10 |
| 05 | கலாசாலை 6ம் குறுக்கு வீதி (முத்துத்தம்பி பாடசாலைக்கு அருகில்) கல்லிட்டுத் தாரிடல் - திருநெல்வேலி | 8490.00 | 500.00 | M09/C10 |
| 06 | கருவப்புலம் குறுக்கு வீதி கல்லிட்டுத் தாரிடல் - கொக்குவில் | 3790.00 | 500.00 | M10/C10 |
| 07 | இந்து மயான குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் - திருநெல்வேலி | 2370.00 | 500.00 | M10/C10 |
| 08 | பலாலி வீதி குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் - திருநெல்வேலி | 2610.00 | 500.00 | M10/C10 |
| 09 | ஆடியபாதம் 1ம் குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் - திருநெல்வேலி | 2190.00 | 500.00 | M10/C10 |
| 10 | கேணியடி வீதி 1ம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல்- கொக்குவில் | 2385.00 | 500.00 | M10/C10 |
| 11 | கே.கே.எஸ் வீதி குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல்- கோண்டாவில் | 2630.00 | 500.00 | M10/C10 |
| 12 | நேதாஜி சனசமூகநிலைய முன் வீதி கல்லிட்டுத் தாரிடல்- | 1900.00 | 500.00 | M10/C10 |
| 13 | காளிகோவில் வீதி கல்லிட்டுத் தாரிடல் - கொக்குவில் | 4010.00 | 500.00 | M10/C10 |
| 14 | வாமஸ் 1ம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் - கோண்டாவில் | 4010.00 | 500.00 | M10/C10 |
| 15 | கேணியடி 1ம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் - திருநெல்வேலி | 2020.00 | 500.00 | M10/C10 |

**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

**திரு.ப.வசந்தகுமார்**
**தவிசாளர்**

## ஆங்கில சிங்கள வகுப்புகள்

ஆசிரியர் திரு.ஸ்ரீ அவர்களினால் எழுத, பேச, வாசிக்க சிங்கள வகுப்புகள் ஆரம்பம். பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்

விவரங்களை பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும்.
**124/2, பலாலி வீதி, திருநெல்வேலி.**

யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் இருந்து 600m தொலைவில் வடக்குப் பக்கமாக அல்லது **0775533060, 0715647422** இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

அலுவலக நேரம்: திங்கள் - வெள்ளி காலை 9.00 - 4.00 மணிவரை. *(13603)*

## 25ஆம் ஆண்டு திருமண வாழ்த்தும்
## 15ஆம் ஆண்டு தேவ பணி வாழ்த்தும்
## 28.01.2012



**Rev. Fr. P.அருமைநாயகம்**
**Sis.A.பற்றீசியா**

*திகழ் பரிசுத்தரின் சேவைக்காக பிறந்தனை*
*தகவுடைய நிலை திறமைகள் பெற்றனை*
*கர்த்தரின் பணியைத் தேர்ந்தனை*
*கிறிஸ்துவுக்குள் நலமேவிச் சேவைபுரிந்தனை*
*என்று மகிழ்வுடனே எம் பிலிவர்ஸ் சபையிலே*
*கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு*
*உண்டாவதாக*

*வாழ்த்துவோர்:*
**பிள்ளைகள்,**
**பிலிவேஸ் சேச் சபையினர்.**

திருநெல்வேலி. *(13600)*

## அறிவித்தல்

*யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின் 51ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் நாளை (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மருத்துவ கிளினிக் பகுதியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.*

*அங்கத்தவர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

**சி.பாக்கியலிங்கம்**
*செயலாளர்*

*(13601)*

# மரண அறிவித்தல்கள்

## *திருமதி கந்தசாமி அன்னபூரணம்*



கல்வியங்காடு புலவனார் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தசாமி அன்னபூரணம் (அன்னக்கிளி) அவர்கள் கடந்த 23.01.2012 (திங்கட்கிழமை) இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்வும்.

**தகவல்:**
அருள்நாயகம் குடும்பம், கருணாகரன் குடும்பம்,
செல்வநாயகி குடும்பம், நந்தகுமார் குடும்பம்.
மகேந்திரன் குடும்பம், (பிள்ளைகள்)

## *செல்வி கனகரத்தினம் தர்மரூபி (ரூபி)*



சாயுடை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தையா வாத்தியார் வீதி, கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் தர்மரூபி (ரூபி) நேற்றுமுன்தினம் (26.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கனகரத்தினம் காலஞ்சென்ற நகுலேஸ்வரி தம்பதியரின் மகளும் கிரிதரனின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரியும் மைதிலியின் (ஆசிரியை, யா/சைவப்பிரகாச வித்தியாலயம், தெல்லிப்பழை) அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (27.01.2012) வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
**ஆ.கனகரத்தினம்**
(தந்தை)

**கந்தரோடை.** (13652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப் பெறுபேற்றை எதிர்த்து அடிப்படை உரிமை மீறல் மனு

2011 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்தமுறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 16 மாணவ, மாணவிகள் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் சார்பில் சட்டத்தரணி சஞ்ஜீவ கலுஆராய்ச்சியினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அனைத்து மாணவர்களின் நலன்கருதியே இதனைத் தாக்கல் செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

இஸட் புள்ளி கணிப்பீட்டின் போது தவறான முறையொன்று கையாளப்பட்டதால் கடந்த வருட பரீட்சைப் பெறுபேறுகளில் குளறுபடிகள் ஏற்பட்டன என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல மாணவர்கள் பெற்றுள்ள இஸட் புள்ளிகளின் மூலம் இந்த விடயம் தெளிவானதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் ஒட்டு மொத்த பெறுபேறுகளும் சட்டத்திற்கு ஏற்புடையது அல்ல என அறிவிக்குமாறு இந்த மனுவின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ருமேனிய நாட்டவர் இருவருக்கு இலங்கையில் 8 வருடகால சிறை

### கொழும்பு நீதிமன்றம் விதிப்பு

போலிக் கடனட்டையைப் பயன்படுத்தி வங்கியொன்றில் ஒரு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம் ரூபாவை மோசடி செய்த இரண்டு ருமேனிய நாட்டவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா எட்டு வருடகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு ஐந்து வருடத்தால் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் இரண்டு ருமேனிய பிரஜைகளில் ஒருவருக்கு 90 ஆயிரம் ரூபாவும், மற்றைய நபருக்கு 80 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அபராதத் தொகையை செலுத்துவதற்கு தவறும்பட்சத்தில், தலா மூன்று மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. போலிக் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இந்த சந்தேகநபர்கள் இருவரும் மீண்டும் இலங்கை வருவதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## குற்றவாளிகள் எவரும் தப்பிவிட முடியாது

1 »

பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்க்குமாறு அவர்கள் கூறுகின்றனர்.

எமது நாட்டு சட்டத்தை அனைவருக்கும் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவோம். இராணுவ சிப்பாய் தவறான முறையில் மனிதக் கொலை புரிவராயின் அவருக்கும் நாம் தண்டனை வழங்குவோம். அவ்வாறு எத்தனையோ பேருக்கு தண்டனை வழங்கியிருக்கிறோம்.

எமது நாட்டில் மனிதக் கொலை புரிந்த குற்றவாளி இராணுவ சிப்பாயாகவோ பொலிஸ் அதிகாரியாகவோ இருந்தால்கூட அவர்கள் தப்பித்துவிட முடியாது. பொலிஸ் அதிகர்ரி ஒருவர் கைதுசெய்யப்பட்ட நபரொருவரை சுட்டுக்கொலை செய்தார். அவர் இன்னும் சிறையில் தான் இருக்கிறார். அவருக்கு ஆயுள் தண்டனையும் பெற்றுக்கொடுத்தோம். அது தான் எமது நாட்டுச் சட்டம். நாம் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் - என்றார் ஜனாதிபதி. (உ-சி)

## ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஒருபோதும் நடைமுறைக்கு வரா

1 »

வெளியிட்டுவரும் கருத்துக்களையும் கடந்த கால வரலாறான பண்டா - செல்வா ஒப்பந்தம் மற்றும் இந்திய - இலங்கை ஒப்பந்தங்களுக்கு நடந்தவற்றையும் பார்க்கும்போது நல்லிணக்கத்துக்கான பரிந்துரைகள் ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படாது என்றே தோன்றுகிறது'' என்றார் ரங்கா. (உ-01)

## ஐ.நா. அலுவலகத்தில் போதைப்பொருள் மீட்பு

1 »

வும் பொறிக்கப்பட்டிருக்கவில்லை என பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நியூயோர்க் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும், இந்த போதைப் பொருள் பொதி, ஐக்கிய நாடுகள் சபையின் அல்லது, சபையின் தலைமையத்தில் உள்ள ஒருவருக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம் என சபையின் பேச்சாளர் மார்ட்டின் நெர்கீ தெரிவித்துள்ளார். (த)

## அமைதியான பேரணிகளைக் குழப்ப கையாள்களைப் பயன்படுத்தும் அரசு

### ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 28

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தையும், அமைதியாக ஒன்றுகூடும் உரிமையையும் அரசு மதிக்க வேண்டும் - என்று ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தும் மக்களின் அடிப்படை உரிமையை அரசும் அதன் கையாள்களும் மறுத்துள்ளனர் - என்று அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் லால் விஜேநாயக்க குற்றம்சாட்டினார்.

ஊடக அமைப்புகள் இவ்வாரம் ஒழுங்கு செய்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை இந்த அமைப்பு கண்டித்துள்ளது.

அமைதியான பேரணிகளையும், ஆர்ப்பாட்டங்களையும் குழப்புவதற்கு அரசு மறை முகச் செயற்பாட்டாளர்களைப் பயன்படுத்துவது உட்பட பல்வேறு தந்திரங்களை பயன்படுத்துவதையிட்டும் நாம் கவலை கொண்டுள்ளோம். இந்தக் குழுவினர்கள் தண்டனை பற்றிய பயமேதுமின்றி தொழிற்படும் விதம் பயமூட்டுகின்றது.

காடையர்கள் ஆர்ப்பாட்டத்தை ஒடுக்கவென குறித்த இடத்துக்கு வந்தபோது பொலிஸார் அவர்களை தடுக்க ஏதும் செய்யாது வாளாவிருந்தனர். இவ்வாறான சம்பவங்கள் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதை காட்டும் அடையாளங்களாகும் - என்றும் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

## இலங்கையின் உதவிக்கு விரைகிறது ஓமான் நாடு

1 »

இருந்து இலங்கை மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதிலும் பிரச்சினை வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படிப்பட்ட ஒரு நிலையைச் சமாளிப்பதற்கான முயற்சியாக கடந்த இரு நாள்களாக ஓமான் நாட்டுடன் பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த பேச்சு நடத்தி வந்தார். நேற்று நடந்த இறுதிப் பேச்சின் பின்னர் நெருக்கடி நேரத்தில் ஓமான் உதவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

''ஓமான் நாட்டு அமைச்சருடன் இது தொடர்பில் பேசப்பட்டது. ஈரானில் இருந்து மசகு எண்ணெய்யை இறக்க முடியாத நெருக்கடியான நிலை ஏற்பட்டால் ஓமான் இலங்கைக்கு எப்படி உதவ முடியும் என்பது பற்றி ஆராயப்பட்டது'' என்று பெற்றோலியத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-01)

## 13+ஐ நிறைவேற்றுவதற்கு ஐ.தே.க. ஒத்துழைக்காது

1 »

தனக்கு இக்கட்டான நிலை வரும்போதே அரசு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது என்று குற்றஞ்சாட்டிய அவர், 18 ஆவது ''திருத்தத்தைக் கொண்டுவந்த போது எதிர்க்கட்சிகள் அரசின் கண்களுக்குத் தென்படவில்லையா?'' என்றும் சீறினார்.

அதிகாரப் பகிர்வு மற்றும் 13 பிளஸ் என்பன குறித்து அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

**இந்தியாவுக்கு போய் வாக்குறுதி**

இறுதிப் போரின்போது இந்தியாவின் தலையீட்டைத் தவிர்க்கும் நோக்கில் இலங்கை அரசு வைத்த தடைக்கல் தான் இந்த 13 பிளஸ். அரசின் போலியான உறுதிமொழியை நம்பி ஏமாந்துள்ள இந்திய அரசு இப்போது தமிழ்நாட்டைப் பகைத்துக் கொள்ளவேண்டிய பரிதாபகரமான நிலையிலுள்ளது.

13 பிளஸ் தொடர்பில் தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர்கள் தொடுக்கும் கேள்விக்கணைகளால் திக்குமுக்காடுகிறது மத்திய அரசு. அன்று (1987) வடமராட்சி இராணுவ நடவடிக்கையில் இந்தியா தலையிட்டது போன்று இறுதிப் போரிலும் தலையிடுமென அஞ்சிய அரசு அதனைத் தடுக்கும் நோக்கில் இந்தியாவுக்குக் கொடுத்த கயிறே இந்த 13 பிளஸ். இதனை நம்பி இந்தியாவும் தமிழ்நாட்டு மக்களுக்கு வாக்குறுதியை அள்ளி வீசிவிட்டது. ஆனால், தற்போது நடைபெறுவது என்ன? இலங்கைக்கு வந்த கிருஷ்ணா எதைச் சாதித்தார்?

மாகாணசபைகளுக்கு அதிகாரத்தைப் பகிரச் சொல்லிக் கேட்டால் சம்மந்த சம்மந்தமுமில்லாமல் செனட் சபையை அமைக்க மஹிந்த முயல்வது கேலிக்கூத்தான விடயம்.

**அன்று செனட்டை எதிர்த்த மஹிந்த இன்று ஏன் கொண்டு வருகிறார்?**

செனட் சபைக்கு எதிராக அன்று போர்க்கொடி தூக்கிய மஹிந்த ராஜபக்ஷ, இன்று அதனை மீண்டும் அமைக்க முயல்வது ஏன்? நாட்டு மக்கள் செனட்சபை அமைக்குமாறு அவரிடம்போய்க்கேட்டார்களா?

செனட் சபை, ஏகாதிபத்தியவாதிகளின் சபையென 70களில் விமர்சித்து அதனை இல்லாதொழிப்பதற்குப் பக்கபலமாக இருந்தவர் ஜனாதிபதி. மீண்டும் செனட் சபை என்ற யோசனையை அவர் முன்வைத்துள்ளமை புரியாத புதிராகவே உள்ளது.

அரசு அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஒருபோதும் இணங்காது. காலத்தைக் கடத்தவேண்டும்; அதுதான் அரசின் தேவை. அதற்காகத் தான் அரசு முழு மூச்சாய் காரியம் பார்க்கிறது. - என்றார். (உ-சி)

## யாழ். – கொழும்பு பஸ்ஸில் குண்டு

1 »

பையிலிருந்து 3 டெற்றனேற்றர்கள், 300 கிராம் கன்பவுடர், 24 ரவைகள் மற்றும் வெடிபொருள் கொள்கலன் என்பவற்றைப் படையினர் கண்டெடுத்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்களும் விசாரணைகளை மேற்கொண்டனர். நீண்ட நேர விசாரணையின் பின்னர் ஒரு தொகுதிப் பயணிகள் தமது பயணத்தைத் தொடரப் படையினர் அனுமதித்தனர். எனினும் குண்டை வைத்தவர் யார் என்பது கண்டுபிடிக்கப்பட்டதா என்பதைப் படைத் தரப்பிடம் இருந்து உறுதிப்படுத்த முடியவில்லை. (உ)

## விடாப்பிடிப் போக்கில் அரசு இனி அகிம்சைப் போர்தான்

1 »

என்று அரசு செனட் சபையைத்தான் கூறியது என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது குறித்துக் கேட்டபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் தீர்வு தொடர்பாகக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அரசுக்கு ஏற்கனவே தெரிவித்து விட்டோம். இந்தியா உட்படச் சர்வதேச நாடுகளுக்கும் சொல்லிவிட்டோம்.

13 பிளஸ் என்பது செனட் சபை தான் என்பதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு தனது நிலைப்பாட்டில் இப்படி விடாப்பிடியாக இருந்தால் மக்களை ஒன்று திரட்டி நாம் அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுப்போம். இதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை - என்றார் சுரேஷ்.

தெரிவிக்குழுவில் பங்குகொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சாரார் விருப்பம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் கெஹலிய ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்ட போது,

தெரிவுக்குழுக்கு ஆதரவாகக் கூட்டமைப்பில் எவரும் இல்லை. கூட்டமைப்புக்குள் குழப்பத்தை உண்டாக்குவதற்கு அமைச்சர் கூறும் பொய் புரட்டுத்தான் இது. தெரிவுக்குழுவை நாம் முற் றாக எதிர்க்கிறோம் - என் றார். (த-15)


## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியராசா திலகவதி



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியராசா திலகவதி நேற்று (27.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாம்பசிவம்-பத்மாவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் -இராசம்மா தம்பதியரின் மருமகளும் பாக்கியராசாவின் அன்பு மனைவியும் ஜெயந்தி (முகாமைத்துவ உதவியாளர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை), குருபரன் (கணினி ஆய்வுகூட உதவியாளர், யாழ்.இந்துக் கல்லூரி), சிவலோஜிதா ஆகியோரின் அன்புத் தாயும், ஸ்ரீகரன்ஜீ (ஆசிரியர், பொகவந்தலாவ) அன்பு மாமியும் அபிர்சனின் பாசமிகு பேர்த்தியும் இராஜேந்திரன் (வவுனியா), காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி மாதவன் மற்றும் கமலா ஆகியோரின் சகோதரியும் கிருஷ்ணசாமி கலைமணி (பெகவந்தலாவ) தம்பதியரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

*17/7, நாவலடி லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

*தகவல்: குடும்பத்தினர்.*

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகுரு நாகம்மா



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தம்பாலை அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுரு நாகம்மா (27.01.2012) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி சிவகுருவின் அன்பு மனைவியும் சிவச்செல்வம் (வல்வெட்டி விநாயகர் வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர்), அமிர்தாம்பிகை, புஸ்பராணி, இராஜேஸ்வரி, வசந்தீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற அப்பாத்துரை (விநாயகா Transport உரிமையாளர்) மற்றும் அழகேஸ்வரன் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), கண்ணகியம்மா, காலஞ்சென்ற பேரின்பமூர்த்தி மற்றும் ஸ்ரீதரநாதன் ஆகியோரின் மாமியும் சிவதர்சினி, பரோபன், தர்சீபன், விஜிதா, சஜிதா, சுந்தரேஸன், செந்தூரன், ரமணதாஸ், முகுந்ததாஸ், குணாளதாஸ், கீர்த்தனா, கேதுஷன், கஜானனி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இ[illegible]ற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்வச்சன்னிதி வீதி, தம்பாலை, அச்சுவேலி.*

*தகவல்: சி.சிவச்செல்வம் (மகன்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலாகல திறப்பு விழா

# UNITED HOME NEEDS

(நாராயணா ஹாட்வெயரின் இணை நிறுவனம்)

மிகவும் அதிநவீனமயமாக்கப்பட்ட
காட்சியறையில் இன்று
(28-01-2012) சனிக்கிழமை
நண்பகல் 12 மணிக்கு
உதயமாகிறது.

- பலவகையான இறக்குமதி செய்யப்பட்ட தரமான கொமட் வகைகள்
- அனைத்து குளியலறை சாதனங்கள்
- வீட்டு உபகரணப் பொருள்கள்
- Lanka Floor Tiles, Wall Tiles வகைகள்
- மற்றும் பலவகையான தரமான பொருள்களை நியாயமான விலைகளில் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட எமது காட்சியறையில் பெற்றுக்கொள்ளலாம்.

LANKA

**No:469, K.K.S Road, Jaffna.**
**Tel : 021-2228157, Fax: 021-2225390**

(யாழ். சிவன் கோயிலுக்கும் மனோகரா தியேட்டருக்கும் இடையில்)



## FIRST FORM

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் FIRST FORM இன்று கொழும்பில் வெளிவருகிறது. நாளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.2229881



## விற்பனையாகிறது

"புகழ்"

தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டி (புதிய பாடத்திட்டத்துக்கு அமைய பகுதி I,II, பாடப்பரப்பை முழுமையாக உள்ளடக்கியது)

இலவச மாதிரி வினாத்தாள், கூப்பன் கருத்தரங்கு விவரம், பரிசுக் கூப்பன் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்- L.விஜேந்திரன்.

விலை - 490/-

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தொடர்புகளுக்கு- ஸ்ரீலங்கா புத்தகசாலை.
இல. 234, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம்.
தொ-பே-0212222573


# மரண அறிவித்தல்

## செல்வராசா இரத்தினலீலா (சந்திரா)



வீரபத்திரர் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும், கலைமணி வீதி, கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா இரத்தினலீலா 23.01.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் -ஞானபூங்கோதை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம்- பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும், செல்வராசாவின் அன்பு மனைவியும், குபேதினியின் (யா/திருக்குடும்ப கன்னியர் மடம், வணிகப் பிரிவு-2014) பாமிகு தாயும், இலிங்கேஸ்வரி (பிரான்ஸ்), இரவீந்திரன், வசந்தலீலா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், நவரத்தினம் (பிரான்ஸ்), பபீந்தி, யேசுதாஸன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சுபதர்சினி, தாரகேகோகுலன் ஆகியோரின் சிறியதாயும், ஜொசி, விஜய்குமார், அனோஜா, மைக்கல், அகல்யன், அபிநயன் ஆகியோரின் மாமியும், குபேரகா, கிரிதாரணி, மதுரன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

கலைமணி வீதி,
கட்டைப்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.


# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

## அனைத்துப்பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

| Batch I: 29.01.2012 | Batch II: 03.02.2012 | Batch III : 04.02.2012 |
|---|---|---|
| 11.00 - 02.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L மற்றும் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Duration : 2 Months

### Diploma In English (2 Month)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS (International English Language Testing System)

(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We guarantee minimum band 5.0 Upwards

### A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
- 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

| Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207 | Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550 | Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliam Kulam, Vavuniya. Tel: 024 324 5287 |
|---|---|---|

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074



50 W நிகரான ஒளியைத்தரும்
எமது 3W -ECO LED ஐ
30 நாட்களுக்கு பாவித்தால்
உங்கள் மின்சாரக்கட்டணம்



1 ரூபா 62 சதம்
மட்டுமே!

சர்வதேச கண்காட்சியில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட எமது ECO LED மின்குமிழுக்கு மாபெரும் ஆதரவைத்தந்த உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

எமது மின்குமிழை நீங்கள் தெரிவு செய்யனவதன்மூலம்

- மின்சாரச் செலவை 80 வீதமாக குறைத்துக் கொள்ள முடியும்
- 3 வருடங்களுக்கான உத்தரவாதம்/10 வருடங்களுக்கு மேலான பாவனை உத்தரவாதம்
- சூழலை மாசுபடுத்தாத, பக்கவிளைவுகளை ஏற்படுத்தாது.
- 6 வருடங்களுக்கு மேலாக, Swissmineral - Yallaruvi நிறுவனங்களை நடாத்திவரும் Jaffna Chember of commerce இன் அங்கத்துவமுடைய Global Business Network () நிறுவனத்தின் உத்தரவாதம்.

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், மண்டபங்கள், விளம்பர ஒளி அமைப்புக்கள் என உங்கள் அனைத்து மின் ஒளித் தேவைகளையும் உத்தரவாதத்துடன் நிறைவு செய்துகொள்ள

## Global Business Network

231 Temple Road, Nallur, Jaffna.
Tel: 021 320 1771 / 021 222 8122 / 077 85 35625.

யாழ் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விற்பனை பிரதிநிதிகள் தேவை

ECO LED + SWISSMINERAL-YALLARUVI


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மக்கள் அனைவருக்கும் கல்வி அளிக்காமல் வாக்குரிமை அளிப்பது சாபக்கேடாய் அமையும்.
ஹெர்மன் எல். லேலேண்ட்.

# வார வசந்தம்

01

உதயன் | 28 ஜனவரி 2012 சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு



# சிதறடிக்கப்பட்ட தமிழினம்...

வன்னி இறுதிக்கட்ட போரில் ஈழச் சமூகத்தினரை நலிவடைந்த சமூகமாக உருவாக்கிவிட்டது இலங்கை அரசு. அவயங்களை இழந்தவர்கள், பெற்றோரை இழந்தவர்கள், பிஞ்சுகள், மன அழுத்தங்களுக்கு உள்ளானவர்கள் என சமூகத்தின் பெரும் பகுதி வலுவிழந்திருக்கிறது.

குடும்பத் தலைவரை இழந்த 89,000 குடும்பங்கள் பெண்களால் தலைமை தாங்கப்படும் குடும்பங்களாக வடக்கு கிழக்கில் வாழ்வதாக சர்வதேச நெருக்கடிகளுக்கான அமைப்பின் அண்மைய புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. பெண்களுக்கான பொருளாதாரப் பாதுகாப்பு மிகவும் பின்தாங்கிய நிலையில் இருப்பதாகவும் உதவிக்கான வாய்ப்பை பொறுத்தவரை பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள் என்றும், தமது வாழ்க்கை குறித்த கட்டுப்பாடு எதுவும் அவர்களது கையில் இல்லை, அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் எதுவும் அங்கு கிடையாது என்றும் தெரி வித்துள்ளது.

அங்கவீனமானவர்கள், பெற்றோர்களை இழந்த குழந்தைகள் கல்விக்கான வசதியற்ற பிள்ளைகள், பொருளாதார முயற்சிக்கு வாய்ப்பில்லாத அல்லது முதலீட்டுப் பாய்ச்சல் இல்லாத நிலையில் இருப்பவர்கள் என எண்ணற்றவர்கள் தமது எதிர்காலம் தொடர்பாகத் தெளிவற்ற நிலையில் தற்போதும் போக்கிடமின்றி இருக்கின்றனர். முக்கியமாகக் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள காணாமல் போனோரின் குடும்பங்கள் இந்த மண்ணுக்காக மடிந்த ஆயிரமாயிரம் மா வீரர்களின் குடும்பங்கள் விடுவிக்கப்பட்டு வாழ்வாதாரத்துக்கு வழியற்றிருக்கும் முன்னாள் போராளிகள் என ஈழத்து சமூகத்தின் பலர் வாழ்வாதார உதவிகளை எதிர்பார்த்து காத்திருந்து கருகிக் கொண்டிருக்கிறார்கள்.

இதே வேளை கலாச்சாரச் சீரழிவுகள், இளைய சமுதாயத்தைத் தவறான வழிகளில் தூண்டிவிடும் நோக்கத்துடனான செயற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளன. இதன் மறுவிளைவாக சிறுவயதுக் கர்ப்பம் தரிப்போர் எண்ணிக்கை பெருகி வருகின்றது என அண்மைய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

30 வருடங்களுக்கு மேலான ஈழ விடுதலைப் போரட்டத்தின் சுமைகளைத் தாங்கக் கரம் கொடுத்து நின்ற புலம் பெயர் தேசத்தில் இன்று குறிப்பிட்டளவு தொகையினர் மட்டுமே உதவிகளை செய்கின்றனர்.

அடிப்படை வாழ்வியல் ஆதாரங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்ட வலுவிழந்த சமூகத்தின் மீள் கட்டுமானம் என்பது முழு அளவில் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் ஒட்டு மொத்த புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும். முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னர் முனைப்படைந்து நிற்கும் குழப்ப நிலைகள், நம்பிக்கைத் துரோகங்கள், ஏமாற்றுகள் போன்வற்றைக் காரணம் காட்டிக் குறிப்பிட்ட தொகையிலான சமூகம் ஒதுங்கியுள்ளதுடன் இன்னொரு பகுதியினர் தமது தார்மீகக் கடமையைப் பற்றி அதிக அக்கறை கொள்ளவில்லை என்ற கசப்பான உண்மை ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இவற்றையெல்லாம் கடந்து எமது உறவுகளின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதில் எமக்கான பொறுப்பை உணர்ந்து பயணிப்பதற்கான வழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அரசியல் தீர்வற்ற பொருளாதார நிமிர்வற்ற சூழ்நிலையில் திசையற்ற எதிர்காலச் சக்கரத்துக்குள் பயணிக்கும் எம் மக்களின் மறுவாழ்வுக்கும் பொறுப்புக் கூற இலங்கை அரசு தயாரில்லை .

வலுவிழந்தவர்களின் கரங்களைப் பற்றித் தூக்கிவிட புலம்பெயர்ந்த தமிழ் மக்களால் மட்டுமே முடியும். தமிழீழக் கனவைத் தோள் மீது சுமந்த அந்த ஜீவன்களுக்கு ஒரு வாழ்க்கையிருக்கின்றது. ஈழம் முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டில் கட்டுண்டு இருக்கிறது. ஆயுத முனையிலான அச்சுறுத்தல்கள் மத்தியில் ஒருமைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்க முடியாது.

நலிவடைந்த சமூகத்தை அடையாளம் காட்டும் பணியில் இருப்போருக்கான அன்பான வேண்டுகோள். தயவு செய்து உங்கள் கரங்களைச் சரியான இடம் நோக்கி நீட்டுங்கள். நலிந்தோரின் அவலங்களைக் காட்டிப் பிழைக்கும் இழிநிலை வாழ்க்கை வேண்டாம். கருணை உள்ளம் கொண்டு உதவுவோரின் கரங்களை நியாயமாக நிலைப்படுத்திய திருப்தியை உங்களிடம் வைத்துக் கொள்வதில் உறுதியாகச் செயற்படுங்கள். கைகளை இழந்து ஒற்றைக் கையால் விறகு வெட்டி விற்று, தன் குடும்பத்தின் வயிற்றைக் கழுவும் அண்ணன், பாடசாலை செல்லும் வயதில் வெடித்துச் சிதறிய ஷெல் துண்டுகளைப் பொறுக்கி விற்றுப் பிழைக்கும் சிறுவன், வெள்ளம் புகுந்த ஓலைக் குடிசைக்குள் தூங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கும் தமது நான்கு மகன்களையும் இந்த மண்ணுக்காக மாவீரராகக் கொடுத்து விட்ட வயதான பெற்றோர், தந்தையை பறிகொடுத்து தனது மூன்று பெண் குழந்தைகளையும் வளர்த்தெடுக்கப் போராடும் தாய், இவ்வாறாக எம் உறவுகளின் கண்ணீரைத் துடைக்க எம்மைத் தவிர யாருமில்லை.

புலிகளின் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்தவரும் எழுத்தாளர் - கவிஞருமான தமிழ்க்கவி அக்கா அண்மையில் ஒரு இணையத்தளத்துக்கு நேர்காணல் ஒன்றை வழங்கி இருந்தார்.

அந்த நேர்காணலில் வன்னியில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் அவலம் பற்றி குறிப்பிட்டிருந்தார். ''பதுங்கு குழியே படுக்கும் பாய் ஆகவும், செத்து விழும் பாடையாகவும் மாறிப்போனது எங்களது வாழ்க்கை. ஆளுக்கு ஒரு மாற்றுத்துணி, குழந்தைகளுக்குக் கொஞ்சம் பால், குடிக்கச் சிறிதளவு தண்ணீர், கொஞ்சம் பருப்பு என இதை மட்டுமே தூக்கிக் கொண்டு ஷெல் அடிக்கும் திசைக்கு எதிராக சென்று கொண்டே இருப்போம். ஓர் இடத்தைத் தேர்ந்து எடுத்து அங்கு பதுங்கு குழி தோண்டுவோம். குழந்தைகளை அதில் படுக்க வைத்து விட்டு, நாங்கள் களைப்பு தீருவதற்காக குழியின் மேல் அமர்ந்திருப்போம். திடீரென ஷெல் தாக்குதல் ஏற்படலாம். குழிக்குள் குதித்து விடுவோம். அந்த நேரங்களில் உணவுக்காக நாங்கள் பட்டபாடு எதிரிக்குக் கூட நேரக் கூடாது. ஆங்காங்கே இருந்த கிணறுகள் எங்கள் தாகத்தையும் பல நேரங்களில் பசியையும் தனித்தன.

பெரியவர்கள் நாங்கள் பல நாள்கள் பட்டினி கிடந்தாலும் பாலுக்கு அழும் குழந்தையை என்ன செய்வது? 245 ரூபா மதிப்புள்ள பால் மா 3000 ரூபாவரை விற்கப்பட்டது. சாயத் தண்ணீர் குடித்துத்தான் எங்கள் பிள்ளைகள் உயிர் பிழைத்தனர்.

என் மகன் இறந்துவிட்டதாகத் தகவல் சொன்னார்கள். அதே நேரத்தில் நான் எனது பேரப் பிள்ளைக்கு பால் மா வாங்குவதற்காக அலைந்து கொண்டிருந்தேன். என் கவனம் கதறிக் கொண்டு இருந்த குழந்தைகள் மீதே இருந்தன. கொஞ்சம் பால்மா வாங்கி வந்து குழந்தைகளுக்கு கொடுத்து விட்டேன். அன்று இரவுதான் எனது மனதில் தோன்றியது எனது மகன் இறந்து விட்டான் என்ற எண்ணம். சற்றுத் தொலைவில் என் மகள் ஒரு பதுங்கு குழியில் இருந்தாள். உடனே சென்று அவளுக்கு தகவல் சொன்னேன். அப்போது கூட எங்களுக்கு அழுகை வரவில்லை. இதுதான் அனைத்து மக்களதும் மன நிலை'' இவ்வாறு அவரது குமுறல் விரிந்து சென்றது.

தமிழ் மக்களுக்கு நேர்ந்த அவலங்கள் எத்தனை எத்தனை. முழுவதுமாக சொல்ல முடியாது. இப்படியாக எமது ஈழம் இருக்கும் போது இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணாவோ, விஞ்ஞானி அப்துல் கலாமோ என்ன நினைக்கிறார்கள்.

இவர் கள் தமிழ் மக்களுக்காக அல்ல அரசுக் காகத்தான் வந்து போகின்றார்கள். அந்த கிருஷ்ணா போருக்கு முன்னர் போரை நிறுத்தவும். அழிவுகளைத் தவிர்க்கவும் துரியோதனனிடம் தூது சென்றார்.

இந்தக் கிருஷ்ணா போர் கொடூரமாக நடைபெற்று தமிழினம் பேரழிவுகளுக்குட்படுத்தப்பட்ட நிலையில் என்ன செய்தார். லட்சத்திலும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டு, தப்பிப் பிழைத்தவர்கள் முள்வேலி முகாம்களுக்குள் மந்தைகள் போல் அடைக்கப்பட்டு, வடிகட்டுதலில் சிக்குண்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு தமிழ் மக்கள் அனைவரும் திறந்த சிறை வாழ்க்கைக்குள் மௌனிக்க வைக்கப்பட்ட பின்னர், சிங்கள தேசத்தின் மீதான போர்க் குற்றச்சாட்டுக்களையும் சர்வதேச அரங்குகளில் சந்தி ஒலிக்காதபடி தடுத்து நிறுத்திய உரிமையுடன் கிருஷ்ணா தூது வந்திருக்கிறார்.

அவர் கேட்க வந்தது தமிழர்களுக்கான தீர்வை அல்ல. இலங்கைத் தீவில் தனக்குரிய பாகத்தையே. இலங்கைத் தராசு சீனாவின் பக்கம் அதிகம் சாய்ந்து விடாமல் சிங்கள தேசத்தைத் தடுத்து

**துன்னாலைச் செல்வம்**

நிறுத்த ஈழத்தமிழர்களது வாழ்வை மீண்டும் சூதாட்டத்தில் வைத்து வெல்வதற்காகவே இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா வந்து சென்றுள்ளார்.

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது உருவாகவுள்ள வெளி அழுத்தங்களிலிருந்து இலங்கையைக் காப்பாற்றுவதற்கான இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டிருக்கலாம். தமிழ் மக்களின் பிரதான பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் கடப்பாட்டிலிருந்து விலகிப் போகக் கூடாது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனநாயகத்துக்காக நீண்ட காலமாகப் போராடி வரும் இடதுசாரியான பேராசிரியர் ஜோசே மலியாசிசன் ஈழத்தமிழர்கள் தொடர்பான வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.

அதில் அவர் ஈழத் தமிழர்களின் இறையாண்மை தொடர்பாகவும் இலங்கை அரசின் காட்டுமிராண்டித் தனத்தையும் பற்றித் தனது கருத்துக்களை தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஈழத் தமிழர்கள் ஒரு தேசிய இனம். இவர்களுக்கு என்று ஒரு இறைமை இருக்கிறது. அதனைத் தமிழர்கள் கையில் எடுத்தால்தான் அவர்கள் இன அழிப்பில் இருந்து காக்கப்படுவார்கள் என்று சுட்டிக் காட்டியுள்ளார். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (22)

**புதன் ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விவரங்கள் மேலும் தொடர்கின்றன.**

பிறப்பு எண் 5 விதி எண் 9

உறவை விடவும் நண்பர்களே அதிகம் இருப்பார்கள். இணைபிரியாத நண்பர்கள் இருப்பார்கள்.

செலவு செய்வதில் தாராளமானவர்கள். அரசியலில் புதுமை செய்வார்கள். எதைச் செய்தாலும் முன்னெச்சரிக்கையுடன் செய்வார்கள். எந்தத் துறையைப் பற்றியும் விரிவாகத் தெரிந்து வைத்திருப்பார்கள். புத்தகப் பிரியர்கள். அனுபவசாலிகள். யாருக்கும் தலை வணங்கமாட்டார்கள். அதிஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிஷ்ட திகதிகள்**

1, 10, 19, 28, 6, 15, 24, 5, 14, 23, 9, 18, 27

**அதிஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், நீலம், பொன்னிறம், சிவப்பு, சாம்பல் நிறம், சிலிமெண்ட் நிறம்

**அதிஷ்ட ரத்தினங்கள்**

வைரம், சிர்க்கான், பவளம், ப்ளட்ஸ்டோன், கார்னட், ஓபல்

**அதிஷ்டப் பெயர் மாற்றம்**

புதன் ஆதிக்கத்தினர் தங்கள் பெயரை அதிஷ்டகரமானதாக்க புதன், சூரிய ஆதிக்க எழுத்துக்களையும், விதி எண் சார்ந்த எழுத்துக்களையும் சரியான முறையில் முரண்பாடு இன்றிச் சேர்த்துப் பெயரமைக்க வேண்டும். கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக் கொண்டு வளமான வசியமான வாழ்க்கையைப் பெறலாம்.

1ம் எண் பெயர்கள் மிகுந்த அதிர்ஷ்டத்தை நல்கும். 10, 19, 37, 46, 55, 82, 73, 5, 14, 23, 41, 59, 77 போன்ற எண்களின் வரிசையில் பெயரமைக்கவும். நல்ல விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும். விதி எண் வலுவாக இருந்தால் விதி எண் சார்ந்த அதிர்ஷ்ட எண்ணுடைய பெயரை அமைக்கலாம். பெயரமைக்கும் போது மாத, வருட எண்களையும் கவனத்தில் கொண்டு பெயரமைக்கவும். அவரவருடைய பெயரானது அதிர்ஷ்டகரமாக இருந்தால் அதிர்ஷ்டமான அதிர்வுகளுடன் இயக்கங்கள் நடைபெற்று அனைத்தும் சுபமாக இருக்கும். வாழ்க்கை வெற்றிகரமாக அமைந்துவிடும்.

**அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்**

| பிறப்பு எண் | கூட்டு எண் | அதிர்ஷ்டப் பெயர் எண் |
|---|---|---|
| 5 | 1 | 1,5 |
| 5 | 2 | 1,5,6 |
| 5 | 3 | 1,5,9 |
| 5 | 4 | 1,5,6 |
| 5 | 5 | 5,9,1 |
| 5 | 6 | 5,6,9 |
| 5 | 7 | 1,6 |
| 5 | 8 | 5,1,6 |
| 5 | 9 | 5,9 |



## எண் 6 (சுக்கிரன்)

**(சுகபோகவான்கள்)**

6ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 6,15,24 தேதிகளில் பிறந்தவர்கள். எந்தவொரு மாதத்திலும் வரும் மேற்கண்ட தேதிகளில் பிறந்தவர்கள் 6 என்னும் சுக்கிர ஆதிக்கத்தில் பிறந்தவர்களாவர். இவர்கள் மிகுந்த தைரியசாலிகளாகவும் கவர்ச்சியான காந்தப் பார்வையுடையவர்களாகவும் இன்பகரமான விசயங்களின் ஈடுபாடுகளையே அதிகம் உடையவர்களாவும் இருப்பார்கள். சந்தோஷமான வாழ்க்கையே இவர்களின் இலட்சியமாகும்.

நன்கு யோசித்த பின்னர்தான் எந்தவொரு முடிவையும் எடுப்பார்கள்.

தோல்வியால் சோர்வு அடைய மாட்டார்கள். வசீகரமான தோற்றமும் விடாமுயற்சியும், காரியத்தில் கண்ணாக இருத்தலும் இவர்கள் பழக்கம். செல்வந்தர்களாக இருப்பார்கள். இவர்கள் மிக்க அதிர்ஷ்டசாலிகள்.

இறைவழிபாட்டில் அக்கறை கொண்டவர்கள். தாங்கள் விரும்பும் நாணம், கருணை, அன்பு, இரக்கம் உடையவர்களாக இருப்பார்கள். மற்றப் பிற இனத்தவருடன் நிதானமாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்வார்கள். எப்பொழுதும் மனமகிழ்ச்சி சிரித்த முகத்துடன் நடந்து கொள்வார்கள்.

எப்போதும் ஆரோக்கியத்தில் கவனமாகவே இருப்பார்கள் மருந்துப் பொருள்களை அடிக்கடி உட்கொண்டவாறு இருப்பார்கள்.

பரோபகார சிந்தையிருக்கும். பிறர் துன்பமறிந்து உதவுவார்கள். ஆண்கள் நல்ல அந்தஸ்தான மனைவியையும் பெண்கள் அந்தஸ்தான கௌரவமான கணவனையும் அடைவார்கள். சுக்ர தோஷமுடைய நபர்கள் வாக்கு சாமர்த்தியசர்லிகள். பிறரைத் தன்னுடைய வசீகரமான வார்த்தைகள் மூலம் கவர்ந்து சமூகத்தையே தவறான வழிக்குக் கொண்டு சென்று விடுவார்கள்.

அன்றாட வாழ்க்கையை அன்போடும், சுகத்தோடும் அனுபவிப்பார்கள். சந்தோஷமாக வாழ்வதே இவர்களின் லட்சியம். யோசிக்காமல் எந்த முடிவுக்கும் வரமாட்டார்கள். அப்படி எடுக்கும் எந்த முடிவும் அவர்களின் சுயலாபத்துக்காகவே இருக்கும்.

ஒரு தோல்வி ஏற்பட்டால் சோர்ந்து விடாமல் அசுரத் தன்மையுடன் மேலும் முயற்சி செய்து வெற்றி பெறுவார்கள். நண்பர்களிடம் நிதானமாகப் பழகுவார்கள்.

**சுக்கிர ஆதிக்கத்தினரின் தொழில்கள்**

கலைத்தொழில்கள், உத்தியோகத்தில் அதிகாரமிக்க பதவிகள். கட்டுமானப் பொருள்கள் விற்பனை, கண்ணாடி, மருந்து, கலைநயமிக்க பொருள்கள் தயாரிப்பு, விற்றல் போன்ற தொழில்கள் வெற்றியைத் தரும்.

**சுக்கிரன் ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாள்கள்**

6,15,24,9,18,27 ஆகிய தேதிகள் அதிர்ஷ்ட நாள்களாகும். தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண் 6,9 வரும் நாள்களும் அதிர்ஷ்ட தினங்கள் ஆகும். மேற்கண்ட நாள்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும். நீடித்து நிலைக்கக் கூடிய காரியங்களைக் கூட்டு எண் 6 வரும் நாள்களில் செய்துவர வேண்டும். அதேநேரத்தில் தேதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும்.

**அதிர்ஷ்டமான நிறங்கள்**

பச்சை, வெளிர்நீலம், வெளிர்பச்சை போன்ற வர்ணங்கள் சூரிய ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

மரகதம், ஜேட், டர்க்குவாஸ், பெரில், அக்கோமரின், டெரிடாட், மர்குயூஸ் போன்றவை அதிர்ஷ்ட ரத்தினங்களாகும். வலது கை மோதிர விரலில், தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

(தொடரும்)

# தமிழ் இனி மெல்லச் சாகும்

அருந்ததி

காலம் காலமாய் பூர்வீகமாய்த் தமிழைத் தாய் மொழியாய் பேசும் யாழ். மண்ணில், தாய் மொழியை முற்றா கவே மறந்து வந்திருக்கும் ஒரு சில விருந்தினர்களுக்காக ஆங்கிலத்திலேயே எல்லாவற்றையும் பேசி விட்டுப் போவது சரியா? உண்மையிலே தமிழில் பேசி விட்டு வந்திருப்பவர்களுக்கு ஆங்கிலத்தில் அதைச் சொல்வது தான் அழகும். நியாயமானதுமாகும்.

''எல்லோரும் எப்பிடிச் சுகமா இருக்கிறியளே''... ஏதோ நீங்களெல்லாம் நல்லா இருக்கிறியள் எண்டு அறிஞ்சாலே எனக்குச் சந்தோசம்தான். ஆனா, நான் மட்டும் கொஞ்சம் கடுப்பா இருக்கிறன்... ''ஏனெண்டு பார்க்கிறியளே'' நான் பாருங்கோ... எனக்குப் புதினம் அறியிறது எண்டா நல்ல விருப்பம். அதுதான் எந்த மூலை முடுக்கில, என்ன நடந்தாலும் முதல் ஆளா... என்ர வயசக் கூடப் பார்க்காம முன்னால போயிருந்திடுவன். எனக்குப் பாருங்கோ நிறைய மொழிகளில பரீட்சயம் இருக்கு. என்ன சும்மா கணிப்பிட்டிருக்கக் கூடாது கண்டியளே... அந்தக் காலத்திலையே உலகைச் சுற்றிப் பார்த்தவன் நான்...

சரி... சரி.. அதெல்லாம் கிடக்கட்டும் நான் சொல்ல வாற விஷயத்தைக் கொஞ்சம் கவனமாகக் கேளுங்கோ. இப்ப ஓர் இரண்டு மூன்று வாரத்துக்குள்ள நடந்த நிகழ்வுகளில் என்ர மனசைப் பாதிச்ச விடயம் பற்றிச் சொல்லியே தீர வேண்டிய கடமைப்பாடு எனக்கு இருக்கு.

நல்ல கருத்துக்கள் சொல்லப் போறமெண்டா அதை யாருக்குச் சொல்லப்போறம், என்று தீர்மானிக்க வேண்டும். அதையும் விட அது யாரைச் சென்றடையப் போகுது என்பதைப் பற்றியும் யோசிக்க வேணும். ஒரு நிகழ்வுக்கு விளம்பரப்படுத்திறம் என்றால் அந்த விளம்பரத்தைப் பார்க்கின்ற சமூக அக்கறையும் ஆர்வமும் தேடலும் உள்ள சாதாரண குடிமகனில் இருந்து பள்ளிக்குப் போகும் சிறுவர் வரை நிகழ்வுகளுக்குச் சமுகம் அளிப்பது வழமை. மேடைகளில் பேசப்படும் நல்ல கருத்துக்களைக் காவிச் சென்று நாலுபேருக்குச் சொல்லுவதும் வழமை.

ஆனால் நிகழ்வில் நல்ல விடயங்களை அறியும் ஆவலில் சென்றோர் என்ன நடக்கிறது என்றே புரியாமல் எழும்பி வந்ததையும் முன்னால் மேடையில் நிகழ்வு நடக்கப் பின்னால் இன்னொரு நிகழ்வு மாதிரி தங்களுக்குள் கூடிக் கூடிக் கதை[illegible]தையும் அவதானிக்க முடிந்தது.

என்ன காரணம் [illegible]ன்று பார்க்கிறியளா?

நிகழ்வு முற்று முழுதாக ஆங்கிலத்திலேயே நடந்தது.

ஆங்கிலம் சர்வதேச மொழி, மும்மொழிக் கொள்கை அமுலாக்கத்தின் மூலம் ஆங்கில மொழியும் பிரதான மொழிகளில் ஒன்றாக இருக்கலாம்.

ஆனால்... காலம் காலமாய் பூர்வீகமாய்த் தமிழைத் தாய் மொழியாய் பேசும் யாழ். மண்ணில், தாய் மொழியை முற்றாகவே மறந்து வந்திருக்கும் ஒரு சில விருந்தினர்களுக்காக ஆங்கிலத்திலேயே எல்லாவற்றையும் பேசி விட்டுப் போவது சரியா? உண்மையிலே தமிழில் பேசிவிட்டு வந்திருப்பவர்களுக்கு ஆங்கிலத்தில் அதைச் சொல்வது தான் அழகும். நியாயமானதுமாகும்.

ஒவ்வொருவருமே அ[illegible] பிடித்து எழுதிய தமிழை மறந்து தாய்மொழியை விட்டு தூர விலகிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. உலகத்தில் எந்த நாட்டை எடுத்துப் பார்த்தாலும் அவனவன் தன் தாய் மொழியில் பேசுவதைத்தான் பெருமையாக நினைக்கின்றான். ஆனால் இங்கே ஆங்கிலத்தில் பேசுவதைத்தான் பெருமையாக நினைக்கின்றார்கள்.

இதுவே பொதுமேடைகள் இல்லாமல் தொழில்சார் கலந்துரையாடல்கள், அரச பிரதிநிதிகளின் கலந்துரையாடல்கள், தூதுவர்களின் கலந்துரையாடல்கள், விசேட வெளி விருந்தினர்களின் கலந்துரையாடல்களாக இருந்து மட்டுப்படுத்தப்பட்ட நிகழ்வுகளாய் அமைந்தால் அதில் எல்லோருக்கும் அறிமுகமான ஆங்கில மொழியில் உரையாடுவதில் தப்பே இல்லை.

ஆனால், அதுவே சாதாரண குடிமக்கள் கலந்துகொள்ளும் ஒரு பொது நிகழ்வாக இருந்தால் அங்கு அவர்களின் தாய் மொழியில் உரையாடல் இருக்க வேண்டும்.

அப்போதுதான் அது அந்த நிகழ்வுக்குப் பெருமை சேர்க்கும். தமிழ் மொழி தெரியாத முக்கிய பிரமுகர்கள்கூட ஆங்கிலத்தில் பேசிவிட்டு அதை மக்களுக்குத் தெளிவாகச் சொல்வதற்காகத் தமிழ் மொழி பெயர்ப்பைச் செய்கிறார்கள்.

அதைத்தான் சொல்ல வருகின்றேன். மக்களுக்குப் புரியும்படி பேசுங்கள். அதுவே உங்கள் நிகழ்வுகளுக்கான அர்த்தத்தைத் தரும். ஓர் இனத்தை இனங்காட்டிக் கொள்வதில் மொழிதான் முதலிடத்தை வகிக்கின்றது. அந்த மொழியை மறந்து நாங்கள் செல்லும் இந்தப் பயணம் எங்கே செல்லப் போகின்றது. சரி பிள்ளைகள். நான் வரட்டே மீண்டும் சந்திப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைப் பாம்பும் மான் குட்டியும்



(கடந்த வாரத் தொடர்ச்சி)

'' நாவல் பழங்களைக் கொடுத்துவிட்டு நீ தப்பிக்கலாம் என்று நினைத்தால்.... அப்புறம் நோய் வாய்ப்பட்டிருக்கும் உனது அம்மா எனக்கு உணவாக நேரிடும்'' என்றது குறட்டி.

'' நீ செய்த உதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன் என் வார்த்தையை மீறமாட்டேன்'' என்று சொல்லிவிட்டு துள்ளி ஓடியது மான் குட்டி குறட்டி மெல்ல ஊர்ந்து மரங்களின் ஊடே மறைந்து கொண்டது. அங்கு அதற்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு பதினைந்து இருபது மான்கள் உடல் நலம் விசாரித்தபடி இருந்தன.

அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்று சேர்ந்தால் கூட அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விட முடியும். இப்படித்தான் சென்ற வாரம் ஒரு மலைப்பாம்பை இரண்டு பெரிய மிளா மான்கள் கொம்பினால் நசுக்கி எடுத்துவிட்டன. அந்த மலைப்பாம்பு அங்கேயே உயிரை விட்டது.

பயம் என்றால் என்னவென்று தெரியாத குறட்டிக்குக்கூட கொஞ்சம் நடுக்கமாக இருந்தது. ''கையில் கிடைத்ததை விட்டு விட்டோமோ?'' என்று கூட ஆதங்கமாக இருந்தது.


எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. குறட்டி பெரிய தனது உடலை வளைத்து நெளிந்தபடி மறைவிடம் நோக்கி நகர ஏதோ அரவம் கேட்டது. அதே மான்குட்டி தனியாக வந்தது.

'' என் கடமை முடிந்தது.... எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன். உனக்கு எனது நன்றி என்று சொன்னவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான்குட்டி.

குறட்டியின் முரட்டுத் தோலையும் மீறி அதன் உடல் புல்லரித்தது.

'' என்னைப் பற்றியா சொன்னாய்'' என்றது குறட்டி '' இல்லை எனக்கு உதவி செய்த உன்னை காட்டிக்கொடுக்க மாட்டேன்''

உன்னைக் கொன்று தின்னப் போகும் நான் எப்படி உனக்கு உதவியவன் ஆவேன்?''



நீ சொன்னது சரிதான். ஆனால் நீ உதவாவிட்டால் என் அம்மாவைக் காப்பாற்ற முடியாது போயிருக்கும் பெற்றோருக்காக தனது உயிரைத் தருவதை விட பெருமை தரக்கூடிய விஷயம் உலகத்தில் வேறு என்ன இருக்க முடியும்?'' குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான்குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது.

'' தாய்க்காக தனது உயிரைத் தரத் துணிந்த உன்னை வணங்கினாலே... எனக்குப் பெருமை'' என்று சொல்லியபடி குறட்டி அதனை உயிரோடு விட்டுச் சென்றது.

மான்குட்டி குறட்டியை ஆச்சரியமாகப் பார்த்தது. மரக்கிளைகளில் தவழ அதன் உடம்பின் கரும்புள்ளிகள் வைரமாக மின்னின.


(முற்றும்)

## தெரிந்து கொள்ளுங்கள்

★ உலகில் உள்ள ஜீவராசிகளுக்குள்ளேயே அதன் உருவத்தோடு ஒப்பிடும் போது மிகப் பெரிய மூளை எறும்புக்குத் தான் உள்ளது.
★ வெட்டுக்கிளிகளின் இரத்தம் வெள்ளை நிறம்.
★ ஆரோக்கியமான புறாக்கள் தூங்காது.
★ திபெத்தில் வசிக்கும் யாக் என்ற எருமையின் பால் இளம் சிவப்பு நிறம்.
★ ஒரு கோழிக் குஞ்சுக்கு 8000 இற்கு மேற்பட்ட இறகுகள் முளைக்கின்றன.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## நீலத் திமிங்கிலம்



இந்தப் பூமிக் கிரகத்தில் படைப்பினங்களிலேயே மிகப் பெரியது இந்த நீலத்திமிங்கிலம். இது டைனோசர்கள் எனப்படும் மிருகங்களை விட இரண்டு மடங்கு பெரியது.

இதன் எடை 200 தொன்கள், இது 25 ஆசிய யானைகளை விட கூடுதல் எடையாகும். 100 அடி நீளம், நீளவாக்கில் வளரக்கூடியது. இரண்டு பஸ்களை ஒன்றின் பின் ஒன்றாக நிற்க வைத்தால் வரும் நீளத்திற்குச் சமனானது. இது ஒரு நாளைக்கு உட்கொள்ளும் உணவு 4 தொன்கள் ஆகும். இதன் இதயம் 450 கிலோ கிராம் நிறையுடையது. ஒரு மனிதன் அதன் இதய நரம்புகளுக்குள் ஊர்ந்து செல்ல முடியும். இது படைப்பினங்களிலேயே அதிக சத்தம் உண்டாக்கும் விலங்கு ஆகும். இதன் சத்தம் ஜெட் விமானத்தின் சத்தத்தை விட அதிகமாக இருக்கும். எழும்பும் சத்தம் 188 டெசிபல் ஆகும். இது தன் சக திமிங்கிலத்துடன் 1600 கி.மீ. தூரத்துடன் இருந்தாலும் தொடர்பு கொள்ள முடியும். 20 நிமிடங்களுக்கு ஒரு முறை தாவிக் குதிக்கிறது. 100 மீட்டர் ஆழம் வரை சென்று வருகிறது. ஏறத்தாழ தன் வாழ்நாள் முழுவதும் கடலில் அடிமட்டத்திலேயே கழிக்கிறது.

ஒரு வருடத்துக்குப் பிறகு இது குட்டி ஈனுகிறது. அதன் எடை பிறந்த உடன் 2700 கி.கி.அது. 8 மீட்டர் நீளம் இருக்கும்.





சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கலைவிழா அண்மையில் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்களை நிலையச் சிறார்கள் பாண்ட் வாத்திய சகிதம் மேடைக்கு அழைத்து வருவதையும், சிறார்களின் கலை நிகழ்வையும் காணலாம். (207)

## எமது பாடசாலை




1. எமது பாடசாலையின் பெயர் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
2. எமது பாடசாலையின் அதிபர் பெயர் அ.அகிலதாஸ்
3. எமது பாடசாலை யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ளது.
4. எமது பாடசாலையில் 100 ஆசிரியர்களும், ஓர் அதிபரும், இரு பிரதி அதிபர்களும் இரண்டாயிரம் மாணவர்களும் உள்ளனர்.
5. எமது பாடசாலையில் எல்லா வசதிகளும் உள்ளன.
6. எமது பாடசாலையை பேணிக் காப்பது எமது கடமையே. ஆகையால் நாம் பூங்கன்று, மரம் போன்றவற்றை எமது பாடசாலையின் உட்புறமும் வெளிப் புறமும் நட்டிருக்கிறோம்.
7. எமது பாடசாலை எதிர்காலத்தில் பிரசித்தியடைய மாணவர்களாகிய நாம் நன்றாகப் படித்துப் பாடசாலைக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

த.சரண்யா
7ஏ, கொக்குவில் இந்துக் கல்லூரி.

## வண்ண வண்ணக் குடை





வண்ண வண்ணக் குடையாம்
வகை வகையான குடையாம்
சின்னஞ்சிறு குடையாம்
சிறுவர் வாங்கும் குடையாம்
முதியோர் வாங்கும் குடையாம்
மனதைக் கவரவைக்கும் குடையாம்
வர்ண நிறக் குடையாம்
வண்ண வண்ணக் குடையாம்

வி.பாரதி
தரம் -6சி, அச்சுவேலி மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நங்கையர் விரும்பும் பட்டு ஆடைகளின் பூர்வீகம்



அருணா தருமலிங்கம்,
வந்தாறுமூலை, மட்டக்களப்பு

உலகெங்கும் பட்டு ஆடைகளை உற்பத்தி செய்வதில் சில நாடுகள் முன்னணி வகிக்கின்றன. ஆனால் பட்டின் (SILK) தாயகம் சீனாதான் என்பது மறுப்பதற்கில்லை.

ஏலவே பட்டுத் தோன்றிய வரலாறு, பட்டுப்பூச்சியின் உருவமைப்பு, பூச்சியின் உணவு, பட்டு உற்பத்தி செய்யும் முறை எமது அண்டை நாடான இந்தியாவில் பட்டு உற்பத்தி நடைபெறுகின்ற மாநிலங்கள் என்பவற்றைப் பற்றி நாம் அறிந்திருந்த போதும் சற்று விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.

சுமார் நாலாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் சீன அரசர் ஒருவர் தன் மனைவியுடன் பூங்காவொன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அப்பொழுது அரசி அங்கு வளர்ந்து நின்ற முசுக்கட்டைச் செடியில் புழுவொன்று அழகிய இழைகளால் (FIBRES) கூடுதயாரிப்பதைக் கண்ணுற்றார். அதை எடுத்து பரிசீலனை செய்தபொழுது ஒரு முனையிலிருந்து இழையைப் பிரிக்கலாம் போல் தோன்றியதாம். அதனைப் பிரித்துப் பார்த்த பொழுது அது பளபளப்பாகவும் மென்மையாகவும் காணப்பட்டது. அரசி அதனாலான ஆடையை (CLOTHE) அணியவிரும்பி தனது கோரிக்கையை அரசனிடம் கூறினாள். இதனைத் தொடர்ந்து அரசர் தொழில் நுட்பம் தெரிந்தவர்களை அரண் மனைக்கு அழைத்து அரசியின் விருப்பத்தைக் கூறி அந்த இழைகள் மூலம் பட்டுத்துணி தயாரிக்க முடியுமா? என்று பரீட்சிக்குமாறு கட்டளையிட்டார். பரிசோதனைகளின் வாயிலாக அரசியின் வேண்டு கோள் வெற்றி அளித்தது. இதனைத் தொடர்ந்து பட்டுத்துணி உற்பத்தி செய்யும் பணி ஏக காலத்தில் ஆரம்பமானது.

**பட்டுப்பூச்சியின் தோற்றம்:** பட்டுப் பூச்சியானது சுமார் மூன்றரை சென்ரி மீற்றர் நீளமுடையது. இதன் நிறம் வெண்மையானது. கூடுகளிலிருந்து வெளிவரும் பட்டுப் பூச்சிகள் முட்டையிட்டதன் பின்னர் மூன்று நான்கு நாட்களில் இறந்துவிடும் இயல்புடையன. பட்டுப் பூச்சி (SILKWORM) சுமார் இருநூறு தொடக்கம் ஐநூறு முட்டைகளை இடும் வல்லமை கொண்டது. முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் பழுப்பு நிறம் கொண்டவை. கம்பளிப் பூச்சியின் சாயலை யொத்த இப் புழுக்களைப் பரந்த தட்டுக்களில் வைத்து முசுக்கட்டை இலைகளை சிறு சிறு துண்டுகளாக அரிந்து இவற்றுக்கு உணவாக வழங்குவார்கள். இவை முசுக்கட்டை இலைகளை விரும்பி உண்டு ஐந்து வாரம் வரை வாழும். முழுமையாக வளர்ச்சியடைந்த புழு சுமார் ஏழரை சென்ரி மீற்றர் நீளமிருக்கும். பட்டுப் புழுவின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு சுரப்பிகள் காணப்படும். இவற்றின் கீழ்ப் பகுதியில் இருந்து பிசின் போன்ற திரவம் வெளிவரும். பிசின் காற்றில் காய்ந்ததும் கெட்டியாகிப் பட்டு நூலாகிறது. பட்டுப்புழு தலையை முன்னும் பின்னும் லாவகமாக அசைத்து பட்டு இழைகளினால் கூடுகட்டுகிறது. இரண்டு அல்லது மூன்று வாரங்கள் கூட்டினுள் இருந்த பின் கூட்டின் முனையை தன் உடலிலிருந்து வெளிவரும் நீர் போன்ற பதார்த்தத்தினால் ஈரலிப்பாக்கி அதனூடாகப் பட்டுப் பூச்சி வெளிவருகின்றது.


இதன் காரணமாக கூடாகக் காணப்பட்ட பட்டு இழைகள் அறுந்து சிறு துண்டுகளாகிவிடும். இதனால் முட்டையிடுவதற்குத் தேவையான காலகட்டத்திற்கு மட்டும்தான் பட்டுப்பூச்சி வெளிவர விடுவார்கள். ஏனைய கூடுகளைக் கொதிக்கும் நீரில் இட்டு பூச்சி இறந்த கையோடு கூடுகளிலிருந்து பட்டு எடுக்கிறார்கள். ஆரம்பத்தில் சீனர்கள் பட்டு உற்பத்தியை இரகசியமாகப் பேணி பாதுகாத்தனர். நீண்ட நாள்களுக்குப் பின்னரே பட்டுத் தொழில் கொரியா ஊடாக ஜப்பானிலும் காலப் போக்கில் இந்தியாவிலும் பரவியது.

**உற்பத்தி-** பட்டுப் பூச்சி கட்டும் கூடுகளைத் தரம் பிரிக்கிறார்கள். அவற்றில் நல்ல நிலையில் உள்ள கூடுகளைத் தெரிவு செய்து சுமார் 90° செல்சியஸ் வெப்ப நிலையில் வேகவைத்து உள்ளே இருக்கும் பூச்சிகளை இறக்க வைக்கிறார்கள். பின்னர் சூடான காற்றைச் செலுத்தி ஈரலிப்பை நீக்குகிறார்கள். இந்த நிலையில் பட்டுக் கூடுகள் நூல் எடுப்பதற்கு ஏற்றவையாக அமைகின்றன.

பட்டுக்கூடு பட்டு இழையாலும் செர்சின் (SERCIN) என்னும் பசையாலும் ஆனது. இக் கூடுகளைக் கொதிக்கும் நீரில் போட்டு செர்சின் பசையை நீக்குகிறார்கள். பருமனுக்குத் தக்கபடி நான்கு அல்லது ஐந்து கூடுகளை ஒன்று சேர்த்து துணிகளைக் கட்டி ஒரு பொத்தான் துவாரத்தின் வழியாக இழுத்து பட்டு நூல்களை உருளைகளில் சுற்றுகிறார்கள். பட்டு நூலுக்கு முறுக்கேற்றிய பின் பாவனைக்கு உகந்த நூல் தயாராகிறது. பின்னர் சாயமேற்றுதல், ஆடைநெய்தல், அச்சடித்தல் போன்ற கருமங்கள் நடைபெறுகின்றன.

கர்நாடகம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு போன்ற இந்திய மாநிலங்களில் பட்டு உற்பத்தி நடைபெறுகின்றது. பாரதத்தில் பட்டுப் பூச்சி இனத்தைச் சேர்ந்த வேறுவகை பட்டுப் பூச்சிகளின் கூடுகளிலிருந்து டசூர் (TUSSURE), ஈரி (ETI), முகா (MUGA) ஆகிய பட்டு வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியா மற்றும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் நாடுகள் அனைத்திலும் மங்கள மற்றும் திருமண நிகழ்வுகள் என்பனவற்றுக்கு பட்டுச் சேலைகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதையும் காணக் கூடியதாக வுள்ளது. மிலேனியம் ஆண்டாக மிளிருகின்ற இன்றைய காலகட்டத்தில் கூட மங்கை யர் மனதில் நவீன ''டிஸைன்'' பொருந்திய பட்டுச் சேலைகள் உகந்த இடத்தைப் பிடித்துள்ளது என்பதும் அவைகள் என்ன விலையானாலும் சரி பட்டுச் சேலைகளைக் கொள்வனவு செய்வதில் என்றுமே பின்நிற்க மாட்டார்கள் என்பதும் வெள்ளிடைமலை. அதேவேளை பட்டு ஆடை [illegible] வியப்பில் [illegible]



# அறிவு என்பது அனைத்திலும் உண்டு!



**அனுபவம்**
பட்டபோது பகுத்துணர்ந்து கொள்பவை, விட்ட தவறுகளிலிருந்து, பெற்றுக் கொள்பவை, வீழ்கின்ற போது, எழுந்திருக்கக் கற்றுக்கொள்பவை!

**கல்வி**
ஆசானின் அனுசரணையுடன் அறிவைப் பெற்றுக்கொள்ள நூலறிவை அடிப்படையாகக் கொண்டு, பரீட்சையை இலக்காக வைத்து ஆடப்படும் சூதாட்டம்!

**கலை**
உணர்வுகளில் வசப்பட்டு கைவரப் பெறுபவை கல்வியாலும் கற்றுக் கொள்பவை, கற்றல் என்றாலும் மதிநுட்பம் என்றாலும் ஒன்றே!

**கேள்வி**
புகட்டல் இல்லாது மனதில் புகுந்து கொள்பவை கேட்டல் மட்டுமல்லாது புலன்கள் வழியால் பெறும் அனைத்தும், பத்திரிகை வாசித்தலுமடங்கும்!

இ.ஜெயபாலன்
தொட்டிலடி, சங்கானை



# அவனருள் இன்றி அவனடி தாழ்தல் அரிது

- மணி




(சென்றவாரத் தொ

கேதாரநாதரை வணங்
தித்த பின்னர் ஆலயத்தி
கத்தில் உள்ள 'உதக்கு
வற்றாத நீரூற்றுக்கு
தீர்த்தம் பெற்றுப் பருகி
வந்து தீர்த்தம் வாங்கிப்
தான் எமது தரிசனம் பூ
பெறும் என்று கூறினா
இளைப்பாறிய பின்ன
குதிரைகளில் ஏறி கௌரி
நோக்கி மலைத்தொடரி
இறங்கிவந்து, முன்ன
விடுதியிலேயே இரவுப்
ஓய்வாகக் கழித்தோம். ம
காலை கௌரிகுண்டத்
பின்னர் பரந்தாமன் வீ
பத்ரிநாத்தை நோக்கிப் பி
மேற்கொண்டோம். பத்
லும் பாதை பிற்பகல் 6.0
மூடப்பட்டதால் இ
விடுதியில் தங்கி மறுந
5.00 மணிக்கு பத்ரிநாத்
கான பிரயாணத்தை
டோம்.

பத்ரிநாத்:

இமாலயப் பிரதேசத்
நாற்படை புனித யாத்தி
ளுள் நான்காவதாகத் தரி
டியது பத்ரிநாத். பத்ரி எ
தையைக் குறிக்கும். இ
கள் அடர்த்தியாகக் கா
இப்பெயர் ஏற்பட்டதாக
றார்கள். இத்தலம் கடல்
இருந்து 3,133 மீற்றர் (1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவில் பலமிருந்தால்...





மன்மதனுக்கும், ரதிக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்தது.

ஆரண்யத்தில் கடுந் தவம் புரிந்துகொண்டிருந்த ஒரு முனிவனைக் காமுகனாக மாற்ற முடியுமா என்பதே இருவருக்கும் நடந்த விவாதம்.

''முடியும்!'' என்றாள் ரதி. ''முடியாது'' என்றான் மன்மதன்.

''புலன் – உணர்ச்சிகளைக் கல்லாக்கிய பிறகே ஒருவன் முனிவனாகிறான். அதிலே ஈரம் உள்ளவரை தான் அதில் காமக் குழம்பு கொதிக்கிறது. துறப்பு என்பது உடல், உள்ளம் அனைத்தையும் துறப்பதே. அப்படிப்பட்டவன் அந்த முனிவன். அவனைக் காமுகனாக்க உன்னால் முடியுமானால் சிவஞான தத்துவம் செத்துவிட்டதாக அர்த்தம்'' என்றான் மன்மதன்.

''பஞ்சபாணா! இவ்வளவு பழகியும் என்னை நீ அறியவில்லை. எனது அங்கங்களின் ரஸவாதத்தில் அகிலமே சுருண்டு கிடக்கிறது. காமதேவியின் மைய மண்டபத்தில்தான் விசுவாமித்திரன் மதியிழந்தான், ராஜ்யங்கள் மூழ்கின. சரித்திரத்தின் பெரும் பகுதியே இதுதான்; இதிலே மயங்காத ஒருவன் இன்னும் பிறக்கவில்லை!'' என்றாள் ரதி.

''முடியுமானால் அந்த முனிவனை முயன்றுபார்'' என்று அவளுக்கு அனுமதி தந்தான் மாரன்.

ரதி தன்னை அலங்கரித்துக் கொண்டாள். மார்பகங்கள் விம்மி நிற்குமாறு கச்சையைக் கட்டிக் கொண்டாள். ஞான முனிவன் தவம் செய்யும் இடத்தை நோக்கி விரைந்தாள்.

''நமோ நாராயணா! நமோ நாராயணா!''

காட்டு மிருகங்களைத் துரத்தியடிக்கும் அளவுக்கு அந்தக் கோஷம் முனிவனின் வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது.

ரதி, கால் சலங்கைகளால் ஒலி எழுப்பினாள்.

முனிவன் கண் திறக்கவில்லை.

கைவளையோசை பிறந்தது.

முனிவன் அப்படியே இருந்தான்.

இசையும், ஸ்வரங்களும், சுதியும் தோற்று விடும்படி அவள் சிரித்தாள்.

முனிவன் கண் திறக்கவில்லை.

ரதி பாடிக்கொண்டே ஆடத் தொடங்கினாள்.

''என் அன்பே! சிறியதொரு கோபுரத்தின் சிங்காரக் கலசங்களைப் பார். இந்தக் கோயிலின் வாசலில் பரமனே பல தடவை மயங்கி விழுந்திருக்கிறான். இதனை நீ ஒரு முறை பார்த்துவிட்டால் மூச்சுத் திணரும்; பேச்சுத் தடுமாறும் மறு உலகம் பற்றிய சிந்தனை மரத்துப்போகும் சிருங்கார லயமே சுகம், சுகம் என்று ஓசையிடும் காலங்கள் மறந்து போகும், கவலைகள் பறந்து போகும், வலிமைகளைச் சேர்த்து வைத்திருக்கும் உனது உடலை, இளமையைச் சேர்த்து வைத்திருக்கும் என்னிடம் கொடுத்துப்பார் பிறகு தவம் உனக்குக் கசந்து போகும்!''

ஆனால், முனிவரிடமிருந்து 'நமோ நாராயணா!' என்ற குரலன்றி வேறொன்றும் இல்லை. எனினும் உரத்து நின்ற அந்தக் குரல் தாழ்ந்து கொண்டே வந்தது.

''நமோ நாராயணா! நமோ நாராயணா!'' ஏழு ஆண்டுகளுக்கு முன்னே மூடிய முனிவனின் கண்கள், மெதுவாகத் திறந்தன. அவை கோவைப் பழம் போல் சிவந்திருந்தன.

ரதியின் மேனியை அவன் உற்றுப் பார்த்தான். பார்த்துக்கொண்டே இருந்தான்.

''நமோ நாராயணா'' என்ற குரல் கீழ் ஸ்தாயிக்கு வந்துவிட்டது. ரதி அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

அவன் கன்னங்களை வருடினாள். ஆள்காட்டி விரலினால் உதடுகளைத் தடவினாள். மார்பினில் சாய்ந்தாள். அவனை மார்போடு அணைத்தாள்.

''நமோ நாராயணா!''

முனிவன் குரல் மெதுவாக மேலெழுந்தது. ஏதோ ஒரு வகை உணர்ச்சி அவனை உந்தித் தள்ளியது.

''நமோ நாராயணா!''

கூடைக்குள்ளிருந்து தலை தூக்கும் பாம்பு போல் அவன் மார்பிலிருந்து மெதுவாக விலகினாள் ரதி.

இப்போது அவள் அவனையே உற்றுப் பார்த்தாள்.

அவள் கண்கள் சிவந்தன. அவை மெதுவாக மூடின.

''நமோ நாராயணா!''– இப்போது அவள் அதை உச்சரிக்கத் தொடங்கினாள்.

சுதியும், லயமும் கூடிக்கொண்டே போயின.

முனிவனைக் காமத்துக்கு அழைக்க வந்த ரதி, தான் ஞானத்துக்குள் நுழைந்துவிட்டாள்.

முனிவன் சிரித்தான். மன்மதன் அலறினான்.

''தவத்தைக் கலைக்கப் போன என் அருமை ரதியே, நீயுமா தவம் செய்யத் தொடங்கிவிட்டாய்?''

திடீரென்று ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது; இறைவன் பிரத்தியட்சமானான். அவன் சொன்னான்.

''பலவீனமான ஆத்மாக்கள் மற்றவர்களாலே மாற்றப் படுகின்றன. ஆன்ம பலம் உள்ளவர்கள் மற்றவர்களை மாற்றிவிடுகிறார்கள்.'' ★


*[நன்றி: கண்ணதாசனின் கடைசிப்பக்கம்]*

---

**(...வாரத் தொடர்ச்சி)**

...தரை வணங்கிப் பிரார்த்
...ர் ஆலயத்தின் முன்பக்
...ள 'உதக்குண்டம்' என்ற
...ருற்றுக்கு வந்து நாம்
...றுப் பருகினோம். இங்கு
...ம் வாங்கிப் பருகினால்
... தரிசனம் பூரணத்துவம்
...று கூறினார்கள். சற்று
...றிய பின்னர் மீண்டும்
... ஏறி கௌரிகுண்டத்தை
...லத்தொடரில் இருந்து
...து, முன்னர் தங்கிய
...யே இரவுப் பொழுதை
...ழித்தோம். மறுநாள் அதி
...ரிகுண்டத்தில் நீராடிய
...ந்தாமன் வீற்றிருக்கும்
... நோக்கிப் பிரயாணத்தை
...டோம். பத்ரிநாத் செல்
...பிற்பகல் 6.00 மணியுடன்
...தால் இடைத்தங்கல்
... தங்கி மறுநாள் காலை
...கு பத்ரிநாத் செல்வதற்
...ணத்தை மேற்கொண்

...ப் பிரதேசத்தில் உள்ள
...னித யாத்திரைத் தலங்க
...வதாகத் தரிசிக்கவேண்
...நாத். பத்ரி என்பது இலந்
...றிக்கும். இலந்தை மரங்
...யாகக் காணப்பட்டதால்
...ற்பட்டதாகக் கூறுகின்
...தலம் கடல் மட்டத்தில்
...33 மீற்றர் (10,445 அடி)



உயரத்தில் அமைந்துள்ளது. ஆலய முன்றில் வரை வாகனங்களில் செல்லக்கூடிய ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன. இதனால் எவரும் தாம் பிரயாணம் செய்யும் வாகனங்களுடன் செல்ல முடியும். இவ் ஆலயம் எத்தனை வருடங்களாக இருக்கின்றது என்பதற்கு வரலாற்று ரீதியான ஆதாரங்கள் கிடையாதென்றும் வேதங்களில் இவ்வாலயம் பற்றிக் கூறப்பட்டிருப்பதாகவும் கூறினார்கள்.

நாராயண பர்வதத்தின் மடியிலே அமைந்திருக்கும் இத்தலம் 108 வைஷ்ணவ திருப்பதிகளுள் ஒன்று. நாரத முனிவர் உபதேசம் பெற்றதற்குச் சான்றாக நாரதருடைய சிலையும் நாரத குண்டமும் இங்கே இருக்கின்றன.

காலையில் வரும்போது பனி மலைச் சிகரங்களையும், பல இடங்களில் பனி உருகிச் சிற்றாறுகளாக வருவதையும் பார்த்தவாறே ஆலயத்தை அடைந்தோம். ஆலயத்தை அடைந்ததும் எம்மிடையே புதிய உற்சாகமும் ஆனந்தமும் ஏற்பட்டது. எவ்வளவு செல்வம் இருந்தாலும் தெய்வ அனுக்கிரகம் இல்லாமல் பத்ரி நாராயணரைத் தரிசிக்க இயலாது. அவ்வாறு தரிசித்தாலும் யாத்திரையைநிறைவுசெய்துதிரும்பி வருவதற்கு தெய்வ அனுக்கிரகம் இன்றியமையாதது.

ஆதியில் மகாவிஷ்ணு மக்களை உய்விக்கும் பொருட்டு இமாலயத்தில் தவக்கோலம் பூண்டதாகவும், அப்போது இலக்குமிதேவி இலந்தைமரமாக உருப்பெற்று (இலந்தை-பத்ரி) அவருடைய தவம் நிறைவுபெற நிழலாக நின்று உதவி செய்ததாகவும் இதனாலேயே இவ்விடம் பத்ரிநாத் என அழைக்கப்பட்டதாகவும் உலகத்தில் தோன்றிய ஞானம் அனைத்துக்கும் இதுவே ஆரம்ப இடம் எனவும் கூறினார்கள்.

ஏனைய இமாலயப் புனிதத் தலங்களைப் போலவே இவ்வாலயமும் சித்திரை மாதத்தில் திறக்கப்பட்டு தீபாவளியின் பின்னர் மூடப்படுகின்றது. ஆகவே இந்த ஆறு மாதங்கள் மட்டுமே பூலோகத்தவர்கள் தரிசித்து வணங்க முடியும். மீதி ஆறு மாதங்களும் தேவர்கள் இங்கு வந்து நாராயணப் [illegible] கின்றனர்.

(தொடரும்)

---




-பாஷோவின் கரும்பலகை-

அந்தக் காலை நேரத்தில் ஆற்றங்கரை ஓரம் நடந்துகொண்டிருந்தார்.

இரண்டுபேர் துணி மூடைகளை ஆளுக்கு ஒன்றாகப் பிரித்து துவைக்க ஆரம்பித்தார்கள்.

அவர்களை நெருங்கிய பாஷோ கேட்டார், ''எப்போது துவைத்து முடிப்பீர்கள்...?''

ஒருவர் சொன்னார், ''இப்போது ஆறு மணி ஆகிறது... பதினொரு மணிக்குள் முடித்துவிடுவேன்...''

மற்றொருவர் சொன்னார், ''இது என்ன கேள்வி? துவைத்துக்கொண்டே இருக்கவேண்டியது... துணி தீர்ந்ததும் எழுந்து போகவேண்டியதுதானே...''

பாஷோ சற்றுத் தூரம் சென்று அவர்கள் இருவரும் துணி துவைப்பதைக் கவனிக்க ஆரம்பித்தார்.

முதலில் சொன்னவர், சொன்னபடியே பதினொரு மணிக்கு தனது துணிகளைத் துவைத்து முடித்துவிட்டுக் கிளம்பினார்.

பன்னிரண்டு, ஒன்று, இரண்டு மணி.

இரண்டு மணிக்கு இரண்டாவதாக இருந்தவர் வெயிலில் மிகச் சிரமப்பட்டு தனது துணிகளைத் துவைத்து முடித்தார். முடித்ததும் துணிகளை உலர வைக்கக்கூட சுமந்துசெல்ல முடியவில்லை அவரால். தள்ளாடிச் சென்று அருகில் உள்ள மரநிழலில் படுத்துக்கொண்டார்.

புன்னகைத்துக்கொண்டே பாஷோ தனது கரும்பலகையில் எழுதினார்.

நேர வரையறை இல்லாமல் வேலை செய்தீர்களானால் நீங்கள் வெயிலில் சிரமப்படவேண்டியிருக்கும்.

உங்கள் சக்தியைத் தாறுமாறாகச் செலவழித்தால் துணிகளை உலரப்போடும் முன் உறங்கப் போய்விடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## புதிய பொது அறிவு

### வெளியீடு: சிவகாமி பதிப்பகம்




''புதிய பொது அறிவு'' எனும் பெயரிலான பொது அறிவு நூலை சிவகாமி பதிப்பகத்தின் வெளியீடாக வேதநாயகம் தபேந்திரன் ஆக்கித் தந்துள்ளார். அனைத்துப் போட்டிப் பரீட்சைகளுக்கும் இந்நூல் பயன்தரும் வகையில் அச்சிடப்பட்டுள்ளது.

எனினும் பொது அறிவைப் பெற விரும்பும் யாவருக்கும் இன்றைய கால விரைவுக்கேற்ப உரிய சமகால நிகழ்வுகளையும் மாற்றங்களையும் நூலில் சேர்த்துள்ளமை தொகுப்பாசிரியரின் அறிவுக் கூர்மைக்கு ஆதாரமாகின்றது. உலக நாடுகளின் உள் நாட்டு வரலாறுகளையும், விஞ்ஞானம், கலை, விளையாட்டு ஆகியன சார்ந்த நிகழ்கால உண்மைகளையும் நூலில் நாடுகளின் அடிப்படையில் பொது அறிவுத் தரவுகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

2011 ஜனவரி தொடக்கம், டிசெம்பர் வரையான காலப்பகுதியில் உலக நாடுகளில் ஏற்பட்ட நிகழ்வின் தரவுகளும் 2010- 2011 காலப்பகுதியில் விளையாட்டு உலகின் வெற்றிகளின் பதிவுகளும் நூலில் இடம்பெற்றுள்ளன.

இன்றைய இலங்கை, சட்டங்கள், அரசியல், கல்வித்துறை என்பனவும் சர்வதேச உடன்படிக்கைகள், உலகம் கண்ட போர்கள், சர்வதேச நிறுவனங்கள், உலக விருதுகள், விண்வெளி ஆய்வுகள், மருத்துவம், சினிமா என்பவற்றுடன் பல்துறைக் களஞ்சியம் எனப் பல்துறை சார்ந்த அறிவுக் களஞ்சியமாக இந்தப் புதிய பொது அறிவு நூல் விளங்குகின்றது.


பரீட்சைக்குத் தோற்றுவோர் மாத்திரமல்ல பல்துறை அறிவுடை அழகோடு உலாவ விரும்பும் அனைவருக்கும் இந்த நூல் பயன்பல விளைவிக்கும் பண்புடையதாகும்.

வாங்கிப் படிப்பவர் தமக்கு, அறிவு தரும் புதிய நூலின் வரவு தேடலுக்கு ஏற்ற புதிய விருந்தாகும்.

- மகேஷ்

## தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா

### வெளியீடு: உலக சைவப் பேரவை




லண்டனில் உள்ள உலக சைவப் பேரவையின் தலைமையகத்திலிருந்து வெளிவந்துள்ள பண்டிதர் மு.கந்தையா அவர்கள் பற்றிய இந்த நூல் ஈழத்துச் சைவத் தமிழ் அறிஞர்களில் ஒருவராக அவரைக் கண்டுரைத்திருக்கும் உண்மைகள் சைவத் தமிழ் மக்களால் அவருக்கு வழங்கப்படும் கௌரவமாகக் கொள்ளத்தக்கதாகும்.

ஞானப்பிரகாசகர், ஆறுமுகநாவலர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்றோரின் பணித் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் ஏழாலைக் கிராமத்தில் தோன்றிய பண்டிதர் கந்தையா அவர்களைப் பற்றி கலாநிதி க.கணேசலிங்கம் சிறுசிறு தலைப்புக்களுடன் கட்டுரைகளாகத் தந்துள்ளார். பண்டிதரின் பல்தகுதிப் பண்புகளையும் அவருடனான பணிச்சிறப்புக்களையும் அவர் கருத்தோடுழைத்த அறிஞர்களின் தொடர்புகளையும் விளக்கும் கட்டுரைகளையும் இதில் சேர்த்துள்ளார்.

''பேரின்பத்துக்கு ஆணவம்'' எனும் கட்டுரையில் ஆகமங்களை உதாரணம் காட்டி பண்டிதர் விளக்கியுள்ள சத்தியங்களைக் காணலாம். திருக்குறள் காட்டும் சைவம், தொல்காப்பியம் , திருமுறைகள், சங்கத்தமிழ் நூல்கள் என்பவற்றைக் கற்றறிந்ததால் விளைந்த சைவ சித்தாந்தத் தெளிவை விபரித்துள்ளார். ஹவாய் ஆதீனத்தின் கருத்து வேறுபாடு, மலேசியாப் பணி, சைவத்தின் மறுமலர்ச்சி என்பன பண்டிதர் அவர்களின் பயணத்தில் சைவசமயப் பணிப்பாக அவர் கொண்டிருந்த ஆளுமையும் ஆறுமுகநாவலர் போன்றியங்கிய சைவத் தமிழ் மேம்பாட்டுப் பணிச் சிறப்புக்களையும் விவரித்துள்ளன.

சிறிய அழகிய அடக்கமான நூலின் கண் ஆழமான அகம் விரிந்த அவரின் பணிகள் படிக்க மனம் விரும்ப இனிக்கச் செயல் தூண்டும் வகையில் வெளிவந்துள்ளது.

- வேதாரண்யன்



அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையின் நான்காவது அபிவிருத்தி கிராமமான புத்தூர் கிழக்கு மகாத்மாஜி கிராம தொடக்க விழாவில் வங்கி முகாமையாளர் த.புவனேந்திரனுக்கு கிராமமக்கள் பாராட்டு வாழ்த்துப் பத்திரம் வழங்குகின்றனர்.



நாடகச் சக்கரவர்த்தி ப.பரராஜசிங்கம் கொழும்பில் நடைபெற்ற கலாபூஷண விருது வழங்கும் விழாவில் கலாசார அமைச்சர் டி.பி.எக்கநாயக்காவிடமிருந்து விருது பெற்றுக்கொள்கிறார்.

## மனிதநேயப் பணியாளர் அருட்திரு ம.இ.பயஸ் அடிகளார்

### நீத்தார் நயப்புரை

யாழ்.தீவகத்தின் கரம்பொன் என்னும் அழகிய கிராமத்தில் பிறந்த அருட்திரு மரியாம்பிள்ளை இம்மானுவேல் பயஸ் அடிகளார் தமது ஐம்பதாவது [20.12.2011] பணிவாழ்வில் நிறைவு காணுகையில் கடும் நோய்வாய்ப்பட்ட நிலையில் இறைவனடி சேர்ந்தார்.

அருட்திரு ம.இ.பயஸ் அடிகளார் ஆரம்பக் கல்வியை யாழ்.சென்.பற்றிக் கல்லூரியிலும் குருத்துவப் படிப்பை யாழ்.மாட்டீன் குரு மடத்திலும் கண்டி, அம்பிட்டி, பெரிய குரு மடத்திலும் உயர் கல்வியை வத்திக்கான் ரோம் நகரிலும் கற்று முடித்து குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தயாகம் திரும்பிய பயஸ் அடிகளார் தமது பணி வாழ்வை முழுமையாக யாழ்.மறை மாவட்டத்துக்கே அர்ப்பணித்தார்.

இவர் தமது ஆரம்ப சேவையை யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பொருளாளராகவும் இளவாலை புனித ஹென்றியரசன் கல்லூரி உப அதிபராகவும் ஆரம்பித்து தொடர்ந்து மன்னார், நானாட்டான், குருநகர், சில்லாலை, கிளிநொச்சி, யாழ். புனித அடைக்கலமாதா ஆலய பங்குகளிலும் கிளிநொச்சியின் குருமுதல்வராகவும் மேய்ப்புப்பணி நிலைய இயக்குநராகவும் தென் பகுதியில் இருந்து கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்தவர்களின் நலன் பேணுவதிலும் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டார்.

குறிப்பாக மன்னார் பகுதியில் பயஸ் அடிகளார் பணியாற்றிய காலப் பகுதியில் மன்னார் தனி மறை மாவட்டமாக தோற்றம் பெறுவதற்கென ஆய்வுகள், தரவுகள், வரலாற்றுக் குறிப்புக்கள் இவற்றை ஒன்றிணைத்து வத்திக்கானுக்கு சமர்ப்பித்தார். இதன் பெறுபேறாகவே இன்று மன்னார் மறை மாவட்டம், தனி மாவட்டமாக மிளிர்கின்றதெனின் மிகையாகாது. இவற்றைத் தொடர்ந்து யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தின் இயக்குநராக [1980-1981] பெற்றுப்பேற்று தொடர்ந்து 11 ஆண்டுகள் சிறப்புற பணியாற்றினார். இந்தக் காலப்பகுதியில்தான் இந்த நிறுவனம் முழுமை பெற்று யாழ்ப்பாணத்தின் சிறப்புமிக்கதோர் அரசசார்பற்ற நிறுவனமாக மிளிரத் தொடங்கியது. அது மாத்திரமல்ல இவர் பெறுப்பேற்ற காலமே இந்த நிலையத்தின் மறுமலர்ச்சியின் பொற்காலமென்றே கூறலாம். இந்தக் காலப் பகுதியிலே யாழ். குடாநாட்டில் யுத்த நெருக்கடியும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடும் போக்குவரத்தில் பல்வேறு இடையூறுகளும் தலைவிரித்தாடின. இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்தவராக பயஸ் அடிகளார் தீவிரமாக செயலாற்றினார். குறிப்பாக முற்றுமுழுதாகக் குடாநாட்டுக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்ட போதும் தாமே நேரடியாக செயற்பட்டு கடல்மார்க்கமாக உணவுமற்றும்அத்தியாவசியப் பொருள்களை குடாநாட்டுக்கு தருவித்து மக்களின் துயர் துடைத்தார். இவற்றுடன் நடமாடும் மருத்துவ சேவை, மக்களுக்கான நிவாரணமும் விதவைகள், ஊனமுற்றோர், மாணவர்களுக்கான உதவித் திட்டங்கள், தொழிலாளர்களுக்கான கடனுதவி, தொழில் உபகரணங்கள் வழங்கல் மற்றும் வீட்டுத்திட்டங்கள் போன்றவற்றையும் விடாமுயற்சியுடன் செயற்படுத்தினார். இத்தனை சிறப்புமிக்க பணிகளையும் சமயவேறுபாடுகள் இன்றி அனைவரும் பயன்பெறும் வகையில் செயற்படுத்தினார். இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு பல்வேறு சமயப் பெரியார்களது உதவிகளையும் இணைத்து நின்றார். இதனால் பல்வேறு சமய பெரியார்களதும் அன்பையும் நட்பையும் பெற்றுக் கொண்டார்.

பொதுப்பணிகளில் தீவிரமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அதேவேளை தமது சமயக் கடமைகளை நிறைவு செய்வதிலும் கண்ணும் கருத்துமாகவே செயற்பட்டார். வத்திக்கானின் சுற்று நிருபங்களுக்குக் கேற்ப திருச்சபையில் பொதுமக்களின் முன்னுரிமை, சடங்குகளில் பொதுமக்கள் அதிக அளவில் செயற்படல் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அடிகளார் அதிக அக்கறை காட்டினார். அன்பியக் கோட்பாடுகளை செம்மையாக நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபட்ட இவர் இதற்கான நூல்களையும் வெளியிட்டுள்ளார். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு நூல்களையும் ஆய்வு செய்வதில் அதிக அக்கறை காட்டிய இவர் குறிப்பாக பழைய ஏற்பாட்டுடன் தொடர்பாக பல பிரிவுகளை உள்ளடக்கிய பல புத்தகங்களையும் மற்றும் மக்களின் நாளாந்த வெளிப்பாடுகளுக்கான நூல்களையும் வெளியிட்டு வைத்துள்ளார்.

எழிலன் (லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினி பயன்தரும்

சாப்பிடாமல் இருந்து பாருங்கள். அதனால் கிடைக்கிற சௌகரியம் நிறைய இருக்கின்றன. எமக்குத் தெரிந்தும் தெரியாமலும் எமது உடம்புக்குள்ளே எவ்வளவோ கோளாறுகள் இருக்கலாம். எல்லாவற்றையும் செலவு இல்லாமல் சரிசெய்வதற்கு ஒரு சிறந்த வழி சாப்பிடாமல் இருப்பது தான்.

உடம்பில் உண்டாகக் கூடிய நோய் சுகக்கேடு இவையெல்லாவற்றையும் இயற்கையாகவே ஜீரண அணுக்கள் சரி செய்து விடும். உண்ணா நோன்பு என்பது உடற்கூற்று ரீதியான ஓய்வு என்று சொல்கிறார்கள். இதுநோயைக் குணப்படுத்துகிறது. அதுமட்டுமல்லாமல் நோய் வராமலும் தடுக்கிறது. சாப்பிடாமல் இருந்து தான் பிரார்த்தனை - தியானம் இதொல்லாம் செய்வார்கள். இது வெறும் தெய்வீகம் மட்டுமல்ல; விஞ்ஞானம் கலந்த தெய்வீகம். சாப்பிட்டுவிட்டு தியானம் செய்கின்றேன், பிரார்த்தனை செய்கிறேன் என்று ஆரம்பித்தால் உங்களுக்குத் தெய்வீக சிந்தனை வராது. தூக்கம் தான் வரும்.

உடம்பில் உண்டாகின்ற தேவையில்லாத கழிவுப் பொருள் நீங்குவதற்கு பட்டினி அவசியம். இயற்கை வைத்தியத்தில் உண்ணாநோன்பு ஒரு முக்கியமான சிகிச்சை. உண்ணா நோன்பு எப்போது இருப்பது? எப்படி இருப்பது? என்று சிந்திக்காதீர்கள். அது நோயின் தன்மையைப் பொறுத்தது.

உண்ணாநோன்பு இருப்பதற்குத் தயாராகுபவர்களுக்காக சில விடயங்கள் இங்கே கூறப்பட்டுள்ளன.

குளிர்காலத்தில் உண்ணா நோன்பு வேண்டாம், உடம்பில் போதுமான தென்பு இல்லாவிட்டாலும் இந்த விரதம் வேண்டாம். நீங்கள் பட்டினி கிடந்து ஏற்கனவே இருந்த கொஞ்ச நஞ்சத் தென்பையும் விட்டு விட்டு மருத்துவரை நாடவேண்டிவரும். நரம்புத்தளர்ச்சி, பயந்த சுபாவம், கோபதாபம் அதிகமாக உள்ளவர்கள் எல்லோரும் இதிலிருந்து விலகி இருப்பது சிறந்தது.

முதல் தடவையாக உண்ணாவிரதம் இருக்கப் போகிறீர்களா? அப்படியானால் ஒரு வரைமுறையை வைத்துக்கொள்ளுங்கள். வாரத்துக்கு ஒரு நாள் சாப்பாடை நிறுத்துங்கள். அதற்குப் பதிலாகப் பழச்சாறு மட்டும் குடியுங்கள்.

முதலில் காலை உணவைக் கைவிடுங்கள் அதற்குப் பின் மதிய உணவை நிறுத்துங்கள் அதன் பின் பழச்சாறு மட்டும் குடித்துவிட்டு ஒருநாள் முழுவதும் சாப்பிடாமல் இருங்கள் இப்படிப் படிப்படியாக ஆரம்பிக்க வேண்டும்.

சாப்பிடாமல் இருக்கின்ற சமயத்தில் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா? அதிர்ச்சி, ஆரவராம் இதெல்லாம் கூடாது. அமைதியான சூழ்நிலை வேண்டும். நல்ல காற்றோட்டம் வேண்டும்.

அதிக ஈரமான அல்லது அதிக வெதுவெதுப்பு அளிக்கக்கூடிய ஆடைகளை அணியக்கூடாது. சுத்தமான குடிநீர் பருகவேண்டும்.

மனதில் நல்ல நம்பிக்கையும் பூரண ஓய்வும் மிக அவசியம். உண்ணாவிரதத்துக்கு முன்னரும், பின்னரும் ஒருவார காலத்துக்குக் கெட்ட பழக்க வழக்கங்கள் எவையும் இருக்கக்கூடாது. உண்ணா விரதத்தை முடிக்கும்போது பழச்சாறு, இளநீர் ஏதாவது குடித்தே முடிக்கவேண்டும்.

உண்ணாவிரதம் இருக்கும்போது உங்கள் உடம்பில் சில அறிகுறிகள் தெரியலாம். தலை சுற்றல் , தலைவலி, பலவீனம், இதயப் படபடப்பு நாக்கில் சுவை இல்லாமல் போதல் இந்த மாதிரி அறிகுறிகள் இருக்கலாம். அதற்காகக் கவலைப்பட வேண்டாம். உடம்பு வெப்பநிலை நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் இவையெல்லாம் வித்தியாசமாக இருக்கலாம்.

இயற்கை வைத்தியம் என்ன கூறுகின்றதென்றால் உடம்பில் சேர்ந்த நச்சுக்கழிவுகள் எல்லாம் உண்ணா நோன்புக் காலத்தில் வெளியேற்றப்படுகின்றதாம்.

உடற் பருமனைக் குறைப்பதற்கு உண்ணா நோன்பும் உணவுக் கட்டுப்பாடும் ஒரு சிறந்த வழி. இடைவெளி விட்டு இருக்கின்ற விரதத்தினால் உடம்புக்கு புது உற்சாகம் ஏற்படுகின்றது. எடைகுறைகிறது. உண்ணாவிரதத்தால் என்ன சௌக்கரியம் தெரியுமா? உடல் உறுப்புக்களுக்கு ஓய்வுகிடைக்கிறது. நோய்களுக்கு இது ஒரு நல்ல சிகிச்சை. மனநோய்களைக் கூட இது கட்டுப்படுத்துகின்றது.

புகையிலை, போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து விடுபடவும் இது உதவியாக இருக்கிறது. இதன் மூலம் எடைகுறையும் தோற்றப் பொழிவு கிடைக்கும். உற்சாகம் வரும், ஐம்புலன்களுக்கும் புத்துணர்ச்சி கிடைக்கும்.

எனவே உடம்பை ஆரோக்கியமாக வைத்திருக்க நினைக்கும் அனைவரும் இந்த விதிமுறைகளைப் பின்பற்றி உண்ணாமல் இருப்பார்கள் என நம்புகின்றேன்.



அதற்காக உணவை முற்றாக விடுத்த வருத்தத்தில் உண்ணா நோன்பு ஆகிவிடாது அதற்கென குறிப்பிடப்பட்ட விதி முறைகளைக் கடைப்பிடித்து முறைப்படி இந்த விரதத்தை அனுஷ்டித்தல் வேண்டும்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## அப்துல் கலாமின் பேச்சு என்னை வியக்க வைத்தது

யாழ். இந்துக் கல்லூரியில் முன்னை நாள் குடியரசுத் தலைவரும் முனைவருமாகிய மதிப்புக்குரிய பெரியவர் அப்துல் கலாமைப் பார்க்கும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. கோட்சூட் போட்டாலும் அவரது பேச்சு ஆன்மிகம் சம்பந்தப் பட்டதாகவும் முக்கியமாக மாணவர்கள் பால் கரிசனை கொண்டு பேசிய பேச்சாகவும் அமைந்திருந்தது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம். யார் புத்தியையும் கேள் ஆனால் உன்புத்திக்கு நடந்து கொள் என்ற மகாத்மா காந்தியின் கருத்துக்களையும் ஔவையாரின் மொழிகளையும் எடுத்துக் காட்டினார். அவர் ஒரு விஞ்ஞானி என்றுதான் இன்றளவும் கேள்விப் பட்டிருந்தேன். அவரை நேரில் நான் பார்த்தபோது உண்மையில் அவர் மெய்ஞானி என்று சொன்னால் மிகையாகாது. என்பதைப் புரிந்த கொண்டேன். ஊக்கமது கைவிடேல், எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற அடிப்படைக் கருத்துக்கள் போல் அவர் பேசிய பேச்சுக்கள் என் மனதைத் தொட்டன. யாழ். இந்துக் கல்லூரிக்கு சுவாமி விவேகானந்தர், காந்திஜி போன்றவர்கள் வந்திருந்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் 21 ஆம் நூற்றாண்டில் மகான் அப்துல் கலாமைக் கண்டது என் வாழ் நாளில் மறக்க முடியாத நினைவாகும். அவர் நினைத்திருந்தால் ஆங்கிலத்தில் பேசிவிட்டு சடுதியாகப் போயிருக்கலாம். ஆனால் அவர் இலகு தமிழில் இன்பத் தமிழில் எல்லோருக்கும் புரியும்படியாகப் பேசினார். அத்தோடு அவர் ஆசிரியத் தொழில் செய்தபடியால் அந்த முறையிலும் அவர் பேசினார். இதனால் எண்ணற்ற மாணவர்கள் கல்வி அறிவு பெறுவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. "அரிது அரிது மானிடப் பிறவி அரிது" அந்த மானிடப் பிறவியை மாணவர்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

ஐ.அரசபிள்ளை
கல்வியங்காடு.

## பெண்களை இழிவு படுத்துவதை நிறுத்துங்கள்

பெண்கள் அரைகுறைச் சட்டையுடன் தமிழ்க் கலாசாரத்தை குழிதோண்டிப் புதைப்பதாக குற்றச்சாட்டு. ஆண்கள் -பெண்களை எப்படியெல்லாம் பார்க்க விரும்புகிறார்களோ அப்படியே பெண்களை நடிக்க வைக்கிறார்கள். அரை குறைச் சட்டைபோட வேண்டும். இல்லாவிட்டால் படத்தில் நடிக்க சான்சே இல்லை என்று பயமுறுத்தல் வேறு! வந்து சேர்ந்து விட்டோம் வேறு போக்கில்லை என்று பெண்களும் சினிமாவில் ஆடுகிறார்கள். இதற்கெல்லாம் மூல காரணமே கொள்ளை கொள்ளையாக பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் இந்த ஆண்களின் மனத்தில் எழுவது தான்.

கலாசாரச் சீரழிவுக்கு வித்திடுபவர்கள் முக்கியமாக ஆண்களே என்றால் மிகையாகாது. ஆகவே ஆண்களே! தமிழ்ப் பண்பாட்டை கலாசாரத்தை காப்பாற்ற உறுதி பூணுங்கள்.

'' விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண் சிக்கினாள்'' என்று பத்திரிகையில் கொட்டை எழுத்தில் விளம்பரம் போடுவார்கள் ஆனால் எங்காவது ஆண் சிக்கினான் என்று கொட்டை எழுத்தில் வராது- பெண்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் பாருங்கள்!! பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்களாம் ஆண்களுக்கு தாராள மனசு மேடைகளில் திருக்குறளை எடுத்து விளக்குவார்கள். ஆனால் நடைமுறையில் வக்கிரம் தான் தலை நீட்டும்.''ஊருக்குத்தானடி உபதேசம் உனக்கல்லடி'' என்பது போல் இருக்கிறது.

எனவே பண்பாடு கலாசாரம் பாழ்படுகின்ற பெண்களால் என்று கொக்கரிப்பதை விட்டு எடுக்கவேண்டிய நடைமுறைகளை ஆண்களே எடுத்துக்கொள்ளுங்கள் முழுக் குற்றச் சாட்டையும் ஆண்கள்தான் தீர்க்க வழி செய்ய வேண்டும். இங்கே எல்லா ஆண்களையும் [illegible]கூடாது.

ஞானாம்பிகா
உரும்பிராய்

## கையொப்பம் பெற்றும் ஏன் கொடுப்பனவு வழங்கப்படவில்லை

வன்னியால் இடம்பெயர்ந்து செட்டிகுளம் நிவாரணமுகாம்களில் தங்கி குடாநாட்டில் 2009 இல் குடியமர்ந்த மக்களுக்கு அரசின் உடனடிக் கொடுப்பனவுத் தொகையான 5000 ரூபாவும் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின்20 ஆயிரம் ரூபாவும் அனைவருக்கும் வழங்கப்பட்டன.

யு.என்.டி.பியின் இன்னுமோர் உதவியான 25 ஆயிரம் ரூபாவும் பலருக்கு வழங்கப்பட்ட போதும் சிலருக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த எனக்கு தொழில் இல்லை. எனது மனைவி ஆசிரியர். அரச உத்தியோகத்தவர்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்டபோதும் எங்களுக்கு 'ஏன் கிடைக்கவில்லையெனக் கேட்டோம். பலமாதங்களின் பின் கடந்த 2010 கார்த்திகை மாதம் தொழில் அற்ற குடும்பத் தலைவர்களையும் அரச குடும்பத் தலைவர்களையும் பிரதேச செயலகம் அழைத்து அங்கு கொடுப்பனவுப் பட்டியலில் ஒப்பம் பெறப்பட்டது.

நானும் அங்குசென்று ஒப்பம் இட்டேன். ஆனால் இன்றுவரை இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்.

## சேவை கிடைக்குமா?

நாட்டில் இடம்பெற்ற 30 ஆண்டுகால யுத்தம் முடிவுற்று இரண்டரை வருடகால அமைதிச் சூழல் இடம்பெறும்.

இந்தக் கால கட்டத்தில் இ.போ.ச சபை தனது காத்திரமான சேவையை வழங்கி வருவது தெரிந்ததே. இருந்தும் தனியார் மினிபஸ்களின் சேவை 10 நிமிடத்துக்கு ஒரு தடவை யாழ். - காங்கேசன்துறை வீதியில் இடம்பெறுகின்றது. இங்கு அளவுக்கு அதிகமான பயணிகளை மினி பஸ்களில் அன்புடன் ஏற்றி பின் இறங்குகின்ற இடத்தில் தங்கள் கைங்கரியத்தைக் காட்டுகின்றார்கள்.

தனியார் மினிபஸ்சின் இலாப நோக்கம் அதிகளவு பிரயாணிகளை ஏற்றல் மற்றும் நாகரீகமற்ற கதைகள் நடைபெறுவதை பார்க்கும் போது மனிதாபிமானம் செத்துவிட்டது என்பதைக் காட்டுகிறது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை மாணவர்கள் பாடசாலை செல்லும் நேரங்களிலும் பின்பும் வீடு திரும்பும் நேரங்களிலும் குறிப்பாக ஒரு தடவை இ.போ.ச. பஸ் நேரந்தவறாமல் பயணிக்கும் உபயோகமாக இருக்கும்.

பாதிக்கப்பட்ட பயணி.

## சீரான பஸ்சேவை இன்மை

மன்னார் தலைமன்னார் சேவையானது மிகவும் அத்தியவசியசேவை ஆகும் ( 948) அதிலும் மாலை 6.30 மணிச்சேவையும் 7.30 மணிச்சேவையும் அதிமுக்கியசேவை எனலாம். இன்னும் பல வருமானங்களை இ.போ.சபைக்கு ஈட்டி வரும் சேவையும் கூட. ஆனால் யுத்த காலத்துக்கு முன்பும், யுத்தகாலத்திலும் கூட சீரான சேவை நடைபெற்றது என மக்கள் கூறினர்.

ஆனால் தற்போது 6.30 மணிபஸ் இடை நிறுத்தப்படுவதால் தாதியர், அரச, அரசசார்பற்ற ஊழியர், வர்த்தகர்கள், பொது மக்கள், இன்னும் பயணச் சீட்டைப் பெற்று பயன்படுத்தமுடியாத பாதிக்கப்பட்டவர்கள். தங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்தினால் விசனம் தெரிவிக்கின்றனர்.

பயணிகள் பல தடவை பஸ்ஸில் ஏறியதும் பழுதென இறக்கப்பட்டதும் உண்டு. இந்தச் சேவையில் தரமற்ற பஸ்கள் விடப்படுவதால் பயணம் தடைப்படுகின்றது.

எனவே 6.30 பஸ் சேவையை பயணிகளின் கட்டாய சேவையைக் கருதியும் பயணிகளின் நலன் கருதியும் தூர இடப் பயணிகள் தலைமன்னார் தொடக்கம் மன்னார் வரை உள்ள கிராமவாசிகள் பயணத்தை மேற்கொள்ளவும் அவசிய தேவை எனக் கருதிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அமைச்சும் ஆவன செய்வார்களா?

தொ.கிறிஸ்ரியான்
பேசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குளிர்காலத்தில் உங்கள் சருமத்தைப் பராமரிக்க...

இந்தக் குளிர் காலத்தில் பலருக்கு உடம்பு முழுவதுமே வறண்டு காணப்படும். அதிலும் இயற்கையிலேயே வறண்ட சருமம் உடையவர்களுக்கு சொல்லவே தேவையில்லை. முகம் அதிக அளவில் வறண்டு போய்விடுவதால், ஒருவித அசௌகரியத்தை அவர்கள் உணர்வார்கள்.

இத்தகையவர்களுக்காகவே கைகொடுக்கிறது ஒரேஞ்சும், தேனும். வறண்ட சருமம் உடையவர்கள் மட்டுமல்லாது எண்ணெய் வடியும் முகத்தை கொண்டவர்களுக்கும் இந்த இரண்டும் அற்புத மாற்றத்தை ஏற்படுத்திவிடும். இப்பொழுது தோடம்பழங்கள் அதிகமாகவே இங்கே கிடைக்கின்றன.

விற்றமின் ஏ மற்றும் சி சத்துக்கள் அதிகம் நிறைந்த இந்தப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், மேனி மினுமினுப்படையும் என்கிறார்கள் அழகுக் கலை நிபுணர்களும், டாக்டர்களும்.

பொதுவாக மேனி வறண்டுபோகாமல் இருக்க வழக்கமாகக் கூறப்படும் ஆலோசனை, அதிக அளவில் தண்ணீர் அருந்துவது. அது ஒரு வகையில் பலனளிக்கும் என்றாலும், ஆரஞ்சு மற்றும் தேன் ஆகியவை புரியும் மாற்றங்கள் அதி அற்புதமானவை என்கிறார்கள் நிபுணர்கள்.

ஒரேஞ் பழ சுளைகளை உண்டுவிட்டு அதன் தோலை தூக்கி எறிந்துவிடாமல், அதனை காயவைத்து பவுடராக்கி தண்ணீருடன் குழைத்து முகம் மற்றும் கைகளில் தடவி, சிறிது நேரம் கழித்து கழுவினால் வறண்ட சருமம் போய்விடும்.

அதேபோன்று அரை மூடி எலுமிச்சை பழச்சாறில் ஒரு டம்ளர் சுடு நீரை கலந்து, அதனுடன் தேனையும் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், மேனி மினு மினுப்படைவதோடு, உடம்பில் உள்ள தேவையற்ற சதைகள் குறைந்து உடம்பும் ஸ்லிம்மாக இருக்கும்.

எண்ணெய் சருமம் உடையவர்கள் ரோஸ் வாட்டரை ஒரு பஞ்சில் நனைத்து தடவ, சருமம் மினு மினுக்கும். தோலில் தழும்புகள், கீறல் வடுக்கள் போன்றவை உள்ளவர்கள் தக்காளி பழக்கூழுடன், தயிர் கலந்து தடவி சிறிது நேரம் காயவிட்டு, பின் கழுவி வர தழும்புகள் மறையும்.சோளம் மா மற்றும் தயிர் கலந்த கலவையை தினசரி உடம்பில் தடவி, காயவிட்டு பின்னர் கழுவி வர சருமம் நிச்சயம் மினுமினுப்பாக வரும்.

வெறும் பாலாடை அல்லது பாலாடையுடன் சிறிது எலுமிச்சை சாறு கலந்து முகம், கை, கால்களில் தேய்த்து ஊறிய பிறகு குளிப்பதும் நல்ல பலனைத் தரும். பாலாடையுடன் கசகசாவை ஊற வைத்து அரைத்து முகம் மற்றும் கை, கால்களில் பூசி, சிறிதுநேரம் கழித்து குளிப்பதும், சருமத்தை மென்மையாக்கும். அலோவேரா எனப்படும் சோற்றுக் கற்றாழை சேர்த்த மாய்ச்சரைஸரை சோப்புபோல உடல் முழுவதும் தேய்த்து, வெறுமனே தண்ணீர் ஊற்றிக் குளிக்கலாம். சோப்பைத் தவிர்த்து, பால், தயிர் போன்றவற்றையும் உடல் முழுவதும் தேய்த்துக் குளிக்கலாம். கிளிசரின் அதிகம் சேர்த்த சோப்பை உபயோகித்தாலும் பரவாயில்லை. வறண்ட சருமக்காரர்கள் பப்பாளி, அப்பிள் போன்றவற்றைத் தவறாமல் சாப்பிட வேண்டும். இது எல்லா சரும வகையினருக்கும் பொருந்தும்.

தோல் நோய்கள் வராமல் இருக்க வேண்டுமானால், மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம். வாரம் ஒரு முறை நல்லெண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். பனிக் காலத்தில் உடலுக்கு கடலை மாவு, பயத்தம் மாவு தேய்த்துக் குளிக்கக்கூடாது. அது சருமத்தில் இருக்கும் கொஞ்சநஞ்ச எண்ணெய்ப் பசையையும் உறிஞ்சிவிடும். மிகவும் வறண்ட சருமக்காரர்களுக்கு பனிக்காலத்தில் தோலில் அரிப்பு, வெடிப்பு போன்றவை ஏற்படலாம். இவர்கள் தினமும் நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் கலந்து தேய்த்துக் குளித்து வரவேண்டும். சாதாரண மற்றும் எண்ணெய்ப் பசையுள்ள சருமக்காரர்களுக்குப் பனிக்காலம் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தாது.

அவர்களும் நிறைய தண்ணீர் குடித்து, பப்பாளி, அப்பிள் பழ வகைகளைச் சாப்பிட்டு மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

உங்களுக்கு வசதியானவற்றை பின்பற்றினால் பளபளக்கும் மேனியை நிச்சயம் பெறலாம்.

## எண்ணெய் வழியும் சருமமா?




சிலருக்கு எவ்வளவுதான் சோப்பு சவர்க்காரம் முகம் கழுவினாலும் முகத்தில் எண்ணெய் பசை மாறாது. மேலும் மேக்கப் செய்த சிறிது நேரத்தில் முகத்தில் எண்ணெய் வழியும். கெமிக்கல் கலந்த முகப் பூச்சுகளால் அலர்ஜி உண்டாகுமே தவிர முழுமையான பலன் கிடைக்காது.

இவர்கள் கடைந்த தயிரை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி சிறிது நேரம் அதாவது 15 நிமிடங்கள் ஊறவைத்து பின் இளம்சூடான நீரில் கழுவி வந்தால் எண்ணெய் வழியும் நிலைமை குறைவடையும்.

மேலும் தினமும் உணவில் கீரைகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அஜீரணக் கோளாறு மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை தவிர்க்க வேண்டும். அதேபோல் வாயுவை அதிகரிக்கக் கூடிய உணவுகளையும் தவிர்ப்பது நல்லது. எளிதில் ஜீரணமாகும் உணவுகளை சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக கெமிக்கல் அல்லாத மூலிகை சவர்க்காரங்களையும் பயன்படுத்துவது நல்லது

## உங்கள் உதடுகளும் அழகாக வேண்டுமா?



மகிழ்ச்சி, துக்கம், சோகம் என அனைத்தையும் வெளிப்படுத்துவதில் கண்களுக்கு எவ்வளவு முக்கிய பங்கு உண்டோ, அதுபோலத்தான் உதடுகளும். இவை அன்பை முத்தமாக வெளிப்படுத்துகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த உதடுகள் அழகாக, சிவப்பாக இல்லையே என்ற ஏக்கம் பல பெண்களுக்கும் இருக்கும். அவர்களுக்காகவே சில டிப்ஸ்.

வெயில் மற்றும் மழை காலங்களில், அந்தந்த சூழ்நிலைக்கேற்ப உதடுகளை முறையாக பராமரித்து வந்தாலே போதும், உங்கள் உதடுகளும் அழகாக இருக்கும். சாதாரணமாக மேக்கப் இல்லாமல், லிப்ஸ்டிக் மட்டும் போட்டுக் கொண்டாலே போதும், முகம் பளிச்சென இருக்கும்.

**விற்றமின் சத்துள்ள உணவுகள்:**

உடலில் விற்றமின் சத்துக் குறைபாடு ஏற்பட்டால் உதடுகளின் ஓரத்தில் புண்கள் ஏற்படுகிறது. இந்த குறைபாட்டினை போக்க உணவில் கீரைகள், பச்சை காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகளவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். நிறைய தண்ணீரும் குடிக்க வேண்டும். விற்றமின் E சத்துக்கள் நிறைந்த, சன்ஸ்கிரீன் லோஷனைத் தடவினாலும் புண்கள் மற்றும் கொப்புளங்கள் மறையும்.

கொழுப்புச் சத்துக் குறையும்போது, உதடுகள் சுருங்கி வயதான தன்மையை அடைகின்றன. இதனால் உதடுகளில் வஸ்லின் தடவிக்கொள்ளலாம்.

**உதடு வெடிப்புகள் குணமடைய:**

அதிக குளிரோ, அதிகவெப்பமோ எதுவானாலும் ஒரு சிலருக்கு ஒத்துக்கொள்ளாது. உதடுகளில் பிளவுகள் ஏற்பட்டு காய்ந்து விடும். மேலும் சிலருக்கு உதடுகள் கறுத்தும், வெடிப்புகளும் ஏற்படும். அவர்கள் பாலேட் டுடன் நெல்லிக்காய் சாறு கலந்து, உதடுகளில் தடவி வந்தால், கருமை மறைந்து சிவந்த நிறம் உண்டாகும். வெண்ணெயுடன் ஒரேஞ்சு பழச்சாறு கலந்து, உதடுகளில் தடவி வந்தால், வெடிப்புகள் சரியாகி உதடுகள் மென்மையாகும்.

**லிப்ஸ்டிக் போடும் கலை:**

கண்களுக்கு மை இடுவது போல் உதட்டுக்கு லிப்ஸ் டிக் போடுவது என்பது இன்றைய சூழலில் அவசியமான ஒன்றாக மாறிவருகிறது. நமது உதட்டுக்கு ஏற்ற லிப்ஸ்டிக்கைத் தெரிவுசெய்து போடுவது என்பது தனிக் கலை. பொதுநிறமாக இருப்பவர்களுக்கு எல்லா கலர் லிப்ஸ்டிக்கும் பொருத்தமாக இருக்கும். ஆனால் வெள்ளையாகவோ, கறுப்பாகவோ இருப்பவர்கள் சரியான கலர் லிப்ஸ்டிக்கினை தேர்வு செய்ய வேண்டும்.

கறுப்பாக இருப்பவர்கள் மிகவும் லைட்டாகவோ அல்லது டார்க்காகவோ இல்லாமல், பொதுவான கலரில் லிப்ஸ்டிக் பயன்படுத்தலாம். வெள்ளை நிறமாக இருப்பவர்கள் இயற்கையான நிறத்தில் லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டால், அழகாக இருக்கும். வெயில் காலங்களில் இரண்டு கலர்களை சேர்த்து லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், எடுப்பாக இருக்கும்.

**லிப் லைனர் உபயோகிக்கவும்:**

லிப்ஸ்டிக்குக்கு ஏற்ற வகையில் லிப் லைனர் மற்றும் பென்சிலை தேர்ந்தெடுக்க வேண்டும். லைனர் போட்ட பிறகு, லிப் பிரஷ் பயன்படுத்தி லிப்ஸ்டிக்கை போட்டு கொண்டால், திட்டு திட்டாக இல்லாமல், ஒரே சீராக அழகாக இருக்கும். லிப் லைனர் பயன்படுத்தும் போது, பெரிய உதடு உள்ளவர்கள், உதடுகள் உள்ளே வரைந்தால், உதடுகள் சிறியதாக தெரியும்.

உதடுகள் பெரிதாக தெரிய வேண்டுமெனில், முதலில் தேவையான நிறத்தில் லிப்ஸ்டிக் போட்டு கொள்ள வேண்டும். பிறகு வெள்ளை நிற லிப்ஸ் டிக்கை உதட்டின் நடுவில் தடவினால், உதடுகள் பெரிதாக பளிச்சென்று தெரியும்.

உடையின் நிறத்துக்கு ஏற்ற லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், எடுப்பாக அழகாக இருக்கும். தரமில்லாத மற்றும் தவறான முறையில் லிப்ஸ்டிக்கை பயன்படுத்தினால், உதடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டு தோல் உரியும். மேலும் உதடுகள் காய்ந்திருக்கிறது என்று, அடிக்கடி எச்சிலால் உதட்டை ஈரப்படுத்தக் கூடாது. அவ்வாறு செய்வதால் எச்சிலில் இருக்கும் பக்டீரியாக்களால், உதட்டில் புண்கள் ஏற்படலாம். மேலும், உதட்டில் உள்ள ஈரப்பதமும் போய்விடும்.

இந்த முறைகளை பின்பற்றி உதடுகளைப் பராமரித்தால் உங்கள் உதடுகளும் சிவந்த அழகான உதடாக மாறும்.

ரா.இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org